தமிழ்நாட்டு அரசாங்கக் கல்வித் துறையினர்
வெளியிட்ட

# தமிழ்ப் பாட நூல்

(இளையோர் ஆதாரப் பயிற்சி வகுப்புக்குரியது)

## 1964

©

தமிழ்நாட்டு அரசாங்கத்திற்காக சென்னை எழுதுபொருள்
அச்சுத் தொழில் கட்டுப்பாட்டு அதிகாரியால்
புதுக்கோட்டை கிளை அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

—

1962

# உள்ளுறை

## செய்யுட் பகுதி


பொருள் — பக்கம்

I. வாழ்த்துப் பகுதி

(அ) கடவுள் வாழ்த்து
தாயுமானவர் ..

(ஆ) தமிழ்த்தாய் வாழ்த்து
மனோன்மணீயம் ..

(இ) நாட்டு வாழ்த்து
பாரதியார் ..

II. அறவுரைப் பகுதி

(அ) திருக்குறள் ..
(ஆ) நாலடியார் ..
(இ) பழமொழி ..
(ஈ) திரிகடுகம் ..

III. தொடர் நிலைச் செய்யுட் பகுதி

(அ) ஆசிய ஜோதி ..
(ஆ) பெரிய புராணம் ..
(இ) கம்பராமாயணம் ..
(ஈ) நளவெண்பா ..
(உ) சிலப்பதிகாரம் ..

IV. பல்சுவைப் பகுதி

(அ) இயற்கை எழில்
(1) திருக்குற்றாலக் குறவஞ்சி ..
(2) கம்பராமாயணம் ..
(3) நைடதம் ..

பொருள் பக்கம்

(ஆ) இரட்டுறமொழிதல் ..
(1) நெல்லைச்சிலேடை வெண்பா ..
(2) தனிச் செய்யுட் சிந்தாமணி ..
(3) கலைசைச்சிலேடை வெண்பா ..
(இ) சீட்டுக்கவி ..
(ஈ) சிறு நூற்கள்
(1) பிள்ளைத்தமிழ் ..
(2) தமிழ் விடு தூது ..
(உ) வழிபாட்டுப் பாடல்கள்
(1) தேவாரம் ..
(2) நாலாயிர திவ்விய பிரபந்தம் ..
(3) தேம்பாவணி ..
(4) முதுமொழி மாலை ..
(5) திருவருட்பா ..
(ஊ) தமிழும் தமிழரும்
(1) தமிழன் இதயம் .
(2) தமிழின் இனிமை
(3) கொடி வணக்கம் ..

## உரைநடைப் பகுதி


| எண் | பொருள் | | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | மறைமலையடிகள் | .. | புலவர் அரசு | |
| 2. | திருக்குறளும் பொது நோக்கமும் | | ச. ஆறுமுக முதலியார் | |
| 3. | சமரச சன்மார்க்கம் | .. | வி. கலியாணசுந்தர முதலியார் | |
| 4. | அமெரிக்கர் வாழ்க்கை | | A. K. செட்டியார் | |
| 5. | ஆய் அண்டிரன் | .. | சிவ. குப்புசாமி | |
| 6. | இளைஞர்க்கு அறிவுரை | | நெ. து. சுந்தர வடிவேலு | |
| 7. | பாரதப் பண்பாடு | .. | ரா. பி. சேதுப் பிள்ளை | |
| 8. | விஞ்ஞானத்துக்கு விடுதலை | | ஜி. ஆர். தாமோதரன் | |
| 9. | குற்றாலக் காட்சி | .. | அ. மா. பரிமணம் | |
| 10. | உயிரும் உடம்பும் | .. | மு. வரதராசன் | |

## மனப்பாடம் செய்யவேண்டியவை

| எண் | பாடம் | செய்யுள் | வரிகள் |
|---|---|---|---|
| 1. | தாயுமானவர் பாடல் | 1 | 8 |
| 2. | தமிழ்த்தாய் வாழ்த்து | 2 | 8 |
| 3. | நாட்டு வாழ்த்து | 3 | 12 |
| 4. | திருக்குறள் | 14 | 28 |
| 5. | நாலடியார் முதல் இரண்டு பாடல்கள் | 2 | 8 |
| 6. | பழமொழி முதற் பாடல் | 1 | 4 |
| 7. | திரிகடுகம் முதல் இரண்டு பாடல்கள் | 2 | 8 |
| 8. | கம்பராமாயணம் 1, 6, 7, 8 பாடல்கள் | 4 | 16 |
| 9. | தமிழன் இதயம் | 1 | 4 |
| 10. | தமிழின் இனிமை | 1 | 4 |
| | | மொத்தம் | 100 |

## நன்றியுரை

இந் நூலில் அடியிற்கண்ட செய்யுட்கள், கட்டுரைகள் முதலியவற்றைச் சேர்த்து வெளியிட இசைவு தந்த உரிமையாளர் களுக்கு எமது நன்றி உரியதாகும்.

| எண் | பொருள் | உரிமையாளர் |
|---|---|---|
| 1. | தமிழ்த்தாய் வாழ்த்து .. | தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். |
| 2. | ஆசிய ஜோதி .. | K. குமாரசாமி, கவிமணி இல்லம், புத்தேரி. |
| 3. | நெல்லைச்சிலேடை வெண்பா | தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். |
| 4. | தமிழன் இதயம் .. | கவிஞர் பதிப்பகம், கோயமுத்தூர். |
| 5. | தமிழின் இனிமை .. | பாரதிதாசன், 10, இராமன் தெரு, தியாகராயநகர், சென்னை–17. |
| 6. | மறைமலையடிகள் .. | தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். |
| 7. | திருக்குறளும் பொது நோக்கமும் | ச. ஆறுமுக முதலியார், முதல்வர், பழனியாண்டவர் கல்லூரி, பழனி. |
| 8. | சமரச சன்மார்க்கம் .. | முருகவேள் புத்தக நிலையம், இராயப்பேட்டை, சென்னை–14. |
| 9. | அமெரிக்கர் வாழ்க்கை .. | குமரிமலர் காரியாலயம், ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18. |

| எண் பொருள் | | உரிமையாளர் |
|---|---|---|
| 10. ஆய் அண்டிரன் | .. | சிவ. குப்புசாமி, 966, செல்லப் பிள்ளையார் கோயில் தெரு, கரந்தை. |
| 11. இளைஞர்களுக்கு அறிவுரை | | நெ. து. சுந்தரவடிவேலு, கல்வித் துறை இயக்குநர், சென்னை & "கலைக்கதிர்" பூளைமேடு. |
| 12. பாரதப் பண்பாடு | .. | S. மகாராஜன், மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர். |
| 13. விஞ்ஞானத்துக்கு விடுதலை | | ஜி ஆர். தாமோதரன், "கலைக்கதிர்" ஆசிரியர், பூளைமேடு. |
| 14. குற்றாலக் காட்சி | .. | அ. மா. பரிமணம், அழகப்பா கல்லூரி, காரைக்குடி. |
| 15. உயிரும் உடம்பும் | .. | மு. வரதராசன், பேராசிரியர், செல்லம்மாள் தெரு, சென்னை-30. |

## நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
　　பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
　　த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
　　உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
　　தவ சுப ஆசிஷ மாங்கே
　　காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
　　பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
　　ஜய ஜய ஜய ஜய ஹே.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## தேசிய கீதம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீ தான்
　மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
　குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
　திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
　உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
　யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
　இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
　　　　　　　　　　பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
　வெற்றி, வெற்றி, வெற்றி.

# செய்யுட் பகுதி

## I. வாழ்த்துப் பகுதி

### (அ) கடவுள் வாழ்த்து

தாயுமானவரின் பாடல்கள் யாவும் படிப்போர்க்குப் பக்திச் சுவையை ஊட்டவல்லவை; சமரச நோக்குடையவை. இவர் திருச்சிராப்பள்ளியில் தோன்றியவர். திருச்சிராப்பள்ளியிற் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவனது திருப் பெயரைத் தம் பெயராகக் கொண்டவர். இவர் காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாம். இவர் தந்தை பெயர், கேடிலியப்ப பிள்ளை; தாயார் பெயர், கெசவல்லி அம்மையார். திருச்சிராப்பள்ளியை அக்காலத்து ஆண்டு வந்த விஜயரகுநாத சொக்கலிங்கநாதருக்கு இவர் தந்தையார் அமைச்சராய் விளங்கினர். தந்தைக்குப் பின் இவர் அமைச்சரானர். மட்டுவார் குழலி என்னும் அம்மையாரை மணந்து சில காலம் இல்வாழ்க்கையில் ஈடுபட்டார். இதன் பயனுய்ப் பிறந்தவர் கனகசபாபதி யென்பார். பின்னர் இவர் மனைவி இறக்கவே இல்லறத்தில் வெறுப்புற்று, துறவியாகி, சிவ தலங்கள் தோறும் சென்று பக்திச் சுவை மிகுந்த பாடல்கள் பல பாடினர். அவைகளே 'தாயுமானவர் பாடல்' என்ற பெயரால் வழங்கப்பெறுகின்றன.

## தாயுமானவர் பாடல்

கல்லேனும் ஐயவொரு காலத்தில் உருகுமென் கல்நெஞ்சம்
உருகவிலையே
கருணைக் கிணங்காத வன்மையையும் நான்முகன் கற்பிக்க
ஒரு கடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு வழக்குக்
கிழுக்குமுண்டோ ?
வானமாய் நின்றின்ப மழையாய் இறங்கியெனை வாழ்விப்ப
துன்பரங்காணி
பொல்லாத சேயெனில் தாய்தள்ளல் நீதமோ ? புகலிடம்
பிறிதுமுண்டோ ?
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையே னுவனந்தோ
சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச் சும்மா
இருக்கவருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே !பரஞ் சோதியே !
சுகவாரியே !

—தாயுமான அடிகளார்.

### குறிப்புரை

ஐய-அண்மைவிளி ; பரம்-பாரம், குறுக்கல் விகாரம் ; அயலுமாய்-வேண்டதவனுய் ; புன்மையேன்-அற்பன்; நீதமோ ? உண்டோ ? ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

## (ஆ) தமிழ்த்தாய் வாழ்த்து

**மனோன்மணீயம் :** மனோன்மணி என்ற மங்கையைத் தலைவியாகக் கொண்டு எழுதப்பெற்ற நூலாதலின் இப்பெயர் பெற்றது. இலிட்டன் பிரபு ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி (The Secret Way) என்னும் நூலைத் தழுவியதாகும்.

இந் நூலாசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை என்பாராவர். கி. பி. 1855 முதல் 1897 வரையில் வாழ்ந்தவர். இவர்,

திருவிதாங்கூர் நாட்டைச் சேர்ந்த ஆலப்புழை என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை பெயர், பெருமாள் பிள்ளை; தாயார் பெயர், மாடத்தி அம்மாள். இவர் நாகப்பட்டினம் நாராயண சாமிப் பிள்ளையிடம் தமிழ் பயின்றார். இவருக்கு ஞான குருவாக யிருந்தவர் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளாவர். இவர் திருவனந்தபுரம் மன்னர் கல்லூரியில் வரலாறு, தத்துவம் கற்பிக்கும் பேராசிரியராய் விளங்கினர். இவரியற்றிய வேறு நூற்கள், சேரவேந்தர் வரலாறு, திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி முதலியன.

1. நீராரும் கடலுடுத்த நிலமடந்தக்கு எழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

2. பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

—சுந்தரம் பிள்ளை.

### குறிப்புரை

(1) ஆரும்-தங்கும்; எழில்-அழகு; ஒழுகும்-மிகும்; திகழ் பரதம்-வினைத் தொகை.

(2) அளித்து-காத்து; துடைக்கினும்-அழித்தாலும்; எல்லை யறு-முடிவில்லாத; களி-மகிழ்ச்சி; கவின்-அழகு; உதரம்-வயிறு; கனி-முதனிலைத் தொழிற் பெயர்; வாழ்த்துதும்-தன்மைப் பன்மை வினைமுற்று.

## (இ) நாட்டு வாழ்த்து

நாட்டை வாழ்த்திப் பாடப்படும் பாடல்கள் எனப் பொருள்படும் தாய் நாட்டின் சிறப்பைப் புகழ்ந்து பாடுவதில் தனக்கு ஒப்புயர் வின்றி விளங்குபவர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்.

இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த எட்டையாபுரத் தில் பிறந்தார். இவருடைய தந்தை பெயர், சின்னச்சாமி ஐயர்; தாயார் பெயர், இலட்சுமி அம்மையார். 'சுப்பையா' என்பது இவரது இயற் பெயர். இளமையிலேயே கவிபாடும் திறம் பெற்று விளங்கினமையால் புலவர்களால் 'பாரதியார்' என்று பட்டமளித்துப் பாராட்டப் பெற்றார். "பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலிடத்திடவேணும்" என்ற உள்ளூர எழுந்த உணர்ச்சி வேகத்தால் எளிமையும், இனிமையும் கொண்ட பாடல் கள் பல பாடியுள்ளார். உணர்ச்சியற்று உறங்கிக் கிடந்த தமிழகத்தைத் தட்டி எழுப்புவதற்கு இவர் பாக்கள் பெரிதும் காரணமாயின. தமிழ் நாட்டின் சிறப்பைக் குறித்துக் கவிஞர் கூறும் சில பாடல்களை அடியிற் காண்போம்.

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

2. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு.

3. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர்—மணி
யாரம் படைத்த தமிழ்நாடு.

—சுப்பிரமணிய பாரதியார்.

### குறிப்புரை

(1) போது-பொழுது; செந்தமிழ்-பண்புத் தொகை; மூச்சு-ஆகுபெயராய் மூச்சை உடைய உடலை உணர்த்திற்று.

(2) பாரெங்கும்-உலக முழுவதும்; புகழ்க் கம்பன்-இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

(3) வான்-மிக்க; அள்ளும்-கவரும்; மணி-முத்து; உலகினுக்கே-ஏகாரம் உறுதிப் பொருளில் வந்தது; மணியாரம்-மூன்றன் உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

## II. அறவுரைப் பகுதி

### (அ) திருக்குறள்

சிறந்த குறள் வெண்பாக்களாலாகிய நூல் என்பது பொருள். 'திரு' என்பது சிறப்புப் பற்றி வந்த அடைமொழி. இஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பெரும் பிரிவுகளையும், ஒன்பதியல்களையும், 133 அதிகாரங்களையும் கொண்டது. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களாக இந்நூல் 1330 அரும் குறட்பாக்களைக் கொண்டு மிளிர்கின்றது.

இஃது உலக மக்கள் பெரும்பான்மையோரால் பாராட்டப்பெற்ற நூல். உலகத்தில் வழங்கப்பெறும் மொழிகள் பலவற்றிலும் பெயர்க்கப்பட்டுள்ளமையே இதன் பெருமைக்குச் சான்றாம். சொல்லுறுதியும், ஒழுக்க உயர்வும் ஒன்றுபோல் அளிக்கும் தன்மையது. அளவிற் சிறியதாய், அனுபவத்தில் பெரியதாய் விளங்கும் அனுபவக் கடல். தான் தோன்றிய காலத்திலேயே எல்லாக் கவிஞர்களாலும் ஒப்புயர்வற்றென ஒப்புக்கொள்ளப் பட்டது.

திருக்குறள், கடைச்சங்க மருவிய "பதினெண்கீழ்க் கணக்கு" என்னும் தொகுதியைச் சேர்ந்தது. பதினெண்கீழ்க் கணக்கு நூற்கள் இவை என்பது:

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு" என்னும் வெண்பாவால் அறியலாம்.

திருக்குறளைக் குறிக்கும் மறுபெயர்கள்:—தமிழ் மறை, பொது மறை, பொய்யா மொழி, திருவள்ளுவப் பயன், வாயுறை வாழ்த்து, உத்தரவேதம், தெய்வநூல், முப்பால் என்பனவாம்.

திருவள்ளுவரைக் குறிக்கும் மறு பெயர்கள்:—நாவலர், தேவர், முதற் பாவலர், தெய்வப் புலவர், பொய்யில் புலவர், பெருநாவலர் முதலியன.

திருக்குறளின் உரை:—இந்நூலுக்கு உரை எழுதியவர் பதின்மர் என்ப. இவற்றுள் பரிமேலழகர் உரையே சிறந்ததென்பது, "பரித்த உரையெல்லாம் பரிமேலழகன், தெரித்த உரையாமோ தெளி" என்ற தெளிவு மொழியான் அறியப்படும். இன்றும் திருக்குறளுக்கு உரை காணும் முயற்சி ஓய்ந்தபாடில்லை. காலத்திற்கும், தமது கருத்திற்கும் ஏற்ப பெரியார் பலர் இதற்கு உரை வகுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

திருவள்ளுவர் காலம்:—சங்க காலத்துப் புலவர் பெருமக்கள் பலரின் பாடல்களில் குறட்கருத்துக் காணப்படுதலின் அவர்கள் காலத்துக்கு முற்பட்டவரென்றும், புத்த சமயக் கொள்கை ஓரோவழி கையாளப்பட்டுள்ளதாதலின் கௌதம புத்தருக்குக் காலத்தாற் பிற்பட்டவரென்றும் கூறுவர். எவ்வாற்றானும் வள்ளுவர் கி. மு. முதல் நூற்றாண்டிற்கும் முந்தியவர் என்று கூறுதல் பொருந்தும்.

## (அ) திருக்குறள்

### அன்புடைமை

1. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
   என்பும் உரியர் பிறர்க்கு.
2. அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
   என்புதோல் போர்த்த உடம்பு.

### அருளுடைமை

3. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
   பூரியார் கண்ணும் உள.
4. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
   மெலியார்மேல் செல்லும் இடத்து.

### கல்வி

5. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

6. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

கேள்வி

7. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

8. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

இடுக்கணழியாமை

9. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.

10. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்ப முறுத லிலன்.

மருந்து

11. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது
அற்றது போற்றி உணின்.

12. அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

உழவு

13. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

14. இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

—திருவள்ளுவர்.

குறிப்புரை

அன்புடைமை: வாழ்க்கைத்துணை, புதல்வர் முதலிய தொடர்புடையார்கண் காதலனுடையனாதல்.

(1) என்பும்-உடம்புக்கு அங்கமாகிய எலும்பும். அஃதாவது பொருளாலும் உடம்பாலும் பிறர்க்குரியர் என்க.

(2) உயிர்நிலை-உயிர்நின்ற உடம்பு.

அருளுடைமை: அஃதாவது தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமை போல் துறவறத்திற்கு இது சிறந்தது.

(3) பூரியார்-இழிந்தார்.

(4) தன்னை-தான் அஞ்சி நிற்கும் நிலையினை; செல்லும் இடத்து-நலியச் செல்லும் பொழுது.

கல்வி: கற்றற்குரிய நூற்களைக் கற்றல்.

(5) கசடற - பழுதற; அதற்குத்தக - அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே; கற்க, நிற்க - வியங்கோள் வினைமுற்றுக்கள்; கற்பவை - வினையாலணையும் பெயர்.

(6) என்பவர் - என்று உயர்வாகச் சொல்லப்படுபவர்; உடையார் - குறிப்பு வினைமுற்று. கேள்வி: கேட்கப்படும் நூற் பொருளைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல்.

(7) செவிச் செல்வம்–கேள்வியால் வரும் செல்வம்; எல்லாம்– எல்லாவற்றையும்விட; தலை - மேலானது. செவிச்செல்வம் – மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை.

(8) ஒற்கம் - தளர்ந்த நிலை; ஊற்று-பற்றுக்கோடு, வலித்தல் விகாரம். இடுக்கணழியாமை:—இடுக்கன் வந்துழி மனங்கலங் காமை.

(9) நகுக - அகமகிழ்க; அடுத்தூர்வது - மேன்மேல் அழிக்க வல்லது.

(10) விழையான் - விரும்பாது, முற்றெச்சம்; இடும்பை - துன்பம்; உறுதல் - அடைதல். மருந்து: பிணி தீர்க்கும் மருந்தின் திறம்.

(11) வேண்டாவாம்-வேண்டியதில்லை; அருந்தியது-உண்டது.

(12) பெற்றான் - பெறற்கரியதாதலின் பெற்றான் என்றார், வினையாலணையும் பெயர்; உண்க - வியங்கோள் வினைமுற்று; ஆறு-நெறி. உழவு:—சிறுபான்மை வணிகர்க்கும் பெரும் பான்மை வேளாளர்க்கும் உரித்தாய உழுதல் தொழில்.

(13) வாழ்வார் - தமக்கு உரியராய் வாழ்கின்றவர்.

(14) அசைஇ - சோம்பி, சொல்லிசை அளபெடை; நகும் - சிரிப்பாள்; காணின்-செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

## (ஆ) நாலடியார்

நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களினால் ஆக்கப்பெற்ற நூலாதலின் நாலடி எனப் பெயர் பெற்று சிறப்புப் பற்றி, 'ஆர்' விகுதி கொண்டு நாலடியார் என வழங்கப்பெற்றது.

இது சங்க மருவிய தொகை நூற்களுள் ஒன்றாகிய பதினெண் கீழ்க் கணக்கில் முதலாவது வைத்து எண்ணப்படுவது. திருக்குறளைப் போன்று அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்று மூன்று பால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நானூறு வெண்பாக்களைக் கொண்டது. "நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி", "பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்பன போன்ற முதுமொழிகள் இந்நூலின் பெருமையை உணர்த்தும். இந்நூலின் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு சமண முனிவரால் எழுதப்பட்டதென்பர். பிற்காலத்தில் பதுமனார் என்பவர் இப் பாடல்களை நாற்பது அதிகாரங்களாக அடைவு படுத்தினார். இந்நூற்கு, நாலடி நானூறு, வேளாண் வேதம் என்ற வேறு பெயர்களும் உண்டு.

### கல்வியின் பயன்

1. இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்,
தம்மை விளக்குமால், தாம்உளராக் கேடின்றால்,
எம்மை உலகத்தும் யாம்காணேம்: கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து

### மேன்மக்களின் தன்மை

2. பிறர்மறை யின்கண் செவிடராய்த், திறனறிந்(து)
ஏதிலார் இற்கண் குருடனாய்த், தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு.

### அறிவே உயர்வு தருவது

3. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மேல் உயர்ந்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

### புல்லறிவாளர் வாழும் முறை

4. தாமேயும் இன்புறார்; தக்கார்க்கும் நன்றாற்றார்;
ஏமஞ்சார் நன்னெறியும் சேர்கலார்;—தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்.

—சமண முனிவர்கள்

### குறிப்புரை

(1) ஈய-கொடுக்க; விளக்கும்-புகழால் விளங்கச் செய்யும், செய்யும் என்னும் வினைமுற்று; உளரா-உயிரோடிருக்கிற வரையில்; எம்மை-எந்த; மம்மர்-அறியாமை.

(2) மறை-இரகசியம்; திறன்-வகை; ஏதிலார்-அயலார்; இல்-மனைவி; இடவாகுபெயர்; மூங்கை-ஊமை.

(3) தலையாக-முதன்மையாக; நிறுத்தல்-நிலைபெறச் செய்தல்; கலக்கி-கெடுத்து.

(4) நன்று-நல்ல உதவி; ஏமம்-இன்பம்; ஆக்கம்-செல்வம்; தூங்கி-மயங்கிக்கிடந்து; அவத்தம்-வீணாக.

## (இ) பழமொழி

இந்நூல் நானூறு பாடல்களையுடையதாதலின் பழமொழி நானூறு என்றும் வழங்கப்பெறும். இதுவும் பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்த நூற்களுள் ஒன்றும். ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்வதற்கு அந்நாட்டு மொழியுள் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படும். கற்றோரும் மற்றோரும் இப்பழமொழிகளைக் கையாண்டு தம் பேச்சினைப் பொருள் சிறக்கச் செய்வர். இவ்வாறு நுண்மாண் நுழைபுலமிக்க புலவர் பல

ராலும் பழமொழிகள் கையாளப்பட்டு வந்துள்ள தெனினும், தாம் கருதிய சிறந்த பொருள்களை விளக்க முறுத்தக் கருதிய சமண் சமயப் பெரும் புலவரான முன்றுறையரையனரின் செய்கைத் தனிப்பெரும் தன்மையுடையது.

இந்நூலில் கடவுள் வாழ்த்து உட்பட நானூறு பாக்கள் உள. ஒவ்வொரு பாடலும் ஒரு பழமொழியைக் கொண்டு திகழ்கின்றது. பயில் வார்க்கு எண்மையாயிருக்குமாறு பால், இயல் முதலியன வகுத்தவர் திருமணம் செல்வக்கேசவராய முதலியாரவர்கள்.

### கற்ருேர் பெருமை கற்ருேர் அறிவர்

1. புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புனல் ஊர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின் கால்.

### பூவினல் நாரும் மணம் பெறும்

2. பெரிய குடிப்பிறந் தாரும் தமக்குச்
சிறியோர் இனமாய் ஒழுகுதல்—எறியிலே
வேலொடு நேரொக்கும் கண்ணுய்! அஃதன்ருே
பூவொடு நாரியைக்கு மாறு.

### நன்றியில் செல்வம்

3. வழங்கலும் துய்த்தலும் தேற்ருதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்ருே
நாய்பெற்ற தெங்கம் பழம்.

—முன்றுறையரையனர்,

### குறிப்புரை

(1) புலம்-அறிவு; புலனும்-விளங்கும்; பொதுமக்கள்-கல்வி யறிவில்லாத மக்கள்; பாம்பின-அகரம் ஆறுவதன் பன்மை.

(2) எறி-ஒளிவீசுகின்ற; இயைக்கும்-சேர்க்கும், செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம். எறியிலை-வினைத் தொகை.

(3) தழங்கு - முழங்குகின்ற; வேய்—மூங்கில்; வழங்கல்-ஊதல்.

## (ஈ) திரிகடுகம்

பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்த நூற்களுள் இதுவும் ஒன்றாகும். நூறு பாடல்களைக் கொண்டது. சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று பொருள்களாலான ஒருவகை மருந்து உடற்கு வரும் நோயினை நீக்கி இன்பம் பயத்தல் போல உயிர்க்கு உறுதி தரும் பொருள்கள் மூன்று ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள தாதலின் இப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் நல்லாதனார்; இவர் கடைச்சங்க காலத்து வாழ்ந்த ஒரு புலவர்.

### இறந்தும் இறவாதவர்

1. மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்—உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னார்.

### செல்வமிழக்குங் குணங்கள்

2. தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

### நாளுக்கு நாளாய்க் குறைவுறுஞ் செல்வம்

3. கிளைஞர்க் குதவாதான் செல்லவழும், பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்,—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்.

4. அருளிலே நெஞ்சத் தடைகொடா தானும்
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்,
இறந்தின்னு சொல்லகிற் பானும்இம் மூவர்
பிறந்தும் பிறந்திலா தார்.

—நல்லாதனார்.

## குறிப்புரை

(1) வான்புகழ்-உவமைத் தொகை; நட்டான்-நிலை நிறுத்திய வன்; கூவல்-கிணறு; தொட்டான்-தோண்டியவன்.

(2) தருக்கல்-பெருமை கொள்ளல், தொழிற்பெயர்; கொன்னே -வீணாக; வெஃகும்-விரும்பும்; முன்னிய-பெயரெச்சம்.

(3) கிளைஞர்-உறவினர்; பைங்கூழ்-பசுமையான பயிர், பண்புத் தொகை; போற்றான்-வினையாலணையும் பெயர்; குடிமை-குடித்தனம்.

(4) அடை கொடாதான்-நீங்காது தடுக்காதவன்; துவ்வான்-அனுபவியாது, முற்றெச்சம்; இறந்து-அளவுகடந்து; சொல்லகிற்பான்-சொல்வான்.

## III. தொடர் நிலைச் செய்யுட் பகுதி.

### (அ) ஆசிய ஜோதி

ஆசியாக் கண்டத்தின் பேரொளியாய் விளங்கிய புத்த பெருமானின் வரலாற்றைக் கூறும் நூல். இந்நூல் எட்வின் ஆர் நால்டு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய (The light of Asia) என்னும் நூலைத் தழுவியதாகும். புத்த மதக் கொள்கைகளை எளிய இனிய நடையில் எடுத்தியம்பும் இந்நூல் கற்றோரேயன்றி மற்றோரும் படித்தின்புறத்தக்கவாறமைந்துள்ளது.

இதனை இயற்றியவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள். சுசீந்திரத்தை அடுத்த தேரூர் என்னும் ஊரில் கி. பி. 1876 ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் சிவதாணுப் பிள்ளையும், ஆதிலெட்சுமி அம்மையாரும் ஆவர். பல பள்ளிகளிலும், பயிற்சிப் பள்ளிகளிலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இறுதியாக, திருவனந்தைப் பெண்கள் கல்லூரியில் பேராசியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். ஆங்கிலமும், தமிழும் கசடறக் கற்றவர். அவரது பாடல்கள் யாவும் தெளிவும், இனிமையுமுடையவை. அவரெழுதிய 'மருமக்கள் வழிமான்மியம்' என்னும் நூல் நாஞ்சில் வாழ் மக்களிடையே பெரியதொரு சமூகப் புரட்சியை யுண்டாக்கி, நீண்ட நாள் நிலவி வந்த கொடியதொரு வழக்கத்தை, அடியற்ற மரமெனச் சாய்த்தது இவர் 1954இல் இயற்கை எய்தினர்.

மகனை இழந்த தாயொருத்தி மகனுக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் நோக்கத்துடன் புத்தரை அணுக, அவர் அவளைத் தேற்றுவதாக அமைந்துள்ளது அடியிற் குறிப்பிடும் பகுதி.

**புத்தர் மகனை இழந்த தாயிடம் கூறுதல்**

தாயேநின் மனக்கவலை—ஒழிந்திட
தக்க நல்மருந் தளிப்பேன்

சேயினை எழுப்பிடுவேன்—விளையாடித்
திரிய வுஞ்செய் திடுவேன்

நாவிய கடுகுவேண்டும்—அதுவுமோர்
நாவுரி தானும் வேண்டும்

பக்கமாம் பதிகளிலே—சென்றுநீ
பார்த்து வாங்கி வந்தால்

துக்கமும் அகலுமம்மா !—குழந்தையும்
சுகமாக வாழு மம்மா.

**அவள் கடுகு தேடிச் சென்று வந்து கூறுதல்**

என்றுரைத்த மொழிகேட்டு அவ்வேழை மார்பில்
வந்தியணைத் திருமகனோடு ஊரில் எங்கும்
சென்றுகடு கிரந்து வெறும் கையளாகித்
திரும்பிமுனி திருவடியைச் சிரமேற் கொண்டு
ஐயமிடு மனைகளிலே மரண மென்றும்
அறியாத மனையேதும் இல்லை யில்லை;
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பு முண்டு,
மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்;
கையமர்ந்த மகவினையும் கானி விட்டேன்
கண்விழியாய்ப் பிணம்வைத்துக் காப்ப துண்டோ ?
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன் என்றாள்.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

குறிப்புரை

நாவிய - கொழித்த; நாவுரி - நாழியுரி என்பதின் குறுக்கம், அது ஒன்றரைப் படி கொண்ட அளவு; பதி-வீடு; செய்ய-அழகிய, பெயரெச்சப் பண்புச் சொல்.

(ஆ) பெரியபுராணம்

பக்தி இயக்கத்தின் பயனாகத் 'திருத்தொண்டர் புராணம்' என்னும் தெள்ளிய நூல் தமிழகத்தில் எழுந்தது. அன்பு

நெறியில் அயராது நின்று உழைத்து, பேரின்ப பெருவாழ்வு பெற்ற சிவனடியார்களின் சீரிய சரிதை இந்நூலில் செம்மையாகக் கூறப்படுகின்றது. இந்நூல் பெரியபுராணம் என்றும் அழைக்கப்படும்.

இதனை இயற்றியவர் சேக்கிழார் என்பார். தொண்டை நாட்டைச் சேர்ந்த குன்றத்தூர் என்னும் ஊரில், தொண்டை மண்டல வேளாளர் மரபிலே சேக்கிழார் குடியில் இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர் சேக்கிழார் பெருமான். அருள்மொழித் தேவர் என்பது இவர் பிள்ளைத் திருநாமம். 'வினையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதற் கொப்ப இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். இவரது ஒழுக்கத்தையும் உயரிய அறிவையும் உணர்ந்த அநபாயச் சோழன் என்னும் இரண்டாம் குலோத்துங்கர், தம்மிடம் அவரை வரவழைத்து முதன் மந்திரியாக இருக்குமாறு செய்தார்.

இவ்வாறு அமைச்சராக விருந்து அரும்பணியாற்றி வருங்கால் தமது அரசர் சமண சமயக் காப்பியங்களுள் ஒன்ருகிய சீவக சிந்தாமணியில் ஈடுபட்டிருந்ததை மாற்றி, சைவ நாயன்மார்கள் கதையில் அக்கறை கொள்ளுமாறு செய்தார்.

பின்னர் அம்மன்னனது வேண்டுகோளுக்கிணங்கித் திருத்தொண்ட புராணத்தை எழுதத் தொடங்கினர். தொடங்கு முன் சிதம்பரம் சென்று தில்லைக் கூத்தனது அருள்வேண்டி நிற்க, கூத்தனும் அசரீரியாக 'உலகெலாம்' என்று அடி எடுத்துக்கொடுக்க, அதனையே முதலாகக் கொண்டு, நாயன்மார்கள் வரலாற்றை இரண்டு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுத்துப்பாடி முடித்துத் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரும் சூட்டியருளினர்.

இதில் நந்தன் சரிதையைக் கூறுவது திருநாளைப் போவார் நாயனர் புராணம். அப்புராணத்திலிருந்து சில பாடல்கள் கீழே தரப்படுகின்றன.

## திருநாளைப் போவார் நாயனார் புராணம்

### கூத்தபிரான் கனவிற்றோன்றல்

1. ''இன்னறரு மிழிபிறவி யிதுதடை''யென் றேதுயில்வார்;
அந்நிலையை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி,
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்
செய்வார்

### அம்பலவாணரின் பணி

2. ''இப்பிறவி போய்நீங்க வெரியினிடை நீமூழ்கி
முப்புரிநூன் மார்பருடன் முன்னணைவா'' யென்னமொழிந்
தப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா னாருளி, யம்பலத்தே மேவினார்.

### தில்லைவாழ் அந்தணரும் நந்தனாரும்

3. தம்பெருமான் பணிகேட்ட தவமறையோ ரெல்லோரும்
அம்பலவர் திருவாயின் முன்பச்ச முடனீண்டி
''யெம்பெருமா னருள்செய்த பணிசெய்வோ''
மென்றேத்தித்
தம்பரிவு பெருகவருந் திருத்தொண்டர் பாற்சார்ந்தார்.

4. ''ஐயரே! யம்பலவ ரருளாலிப் பொழுதணைந்தோம்
வெய்யவழ லமைத்துமக்குத் தரவேண்டி'' யெனவிளம்ப,
நையுமனத் திருத்தொண்டர் ''நானுய்ந்தே'' னெனத்
தொழுதார்;
தெய்வமறை முனிவர்களுந் தீயமைத்த படிமொழிந்தார்.

### நந்தனார் எரிவாய்ப்புகல்

5. மறையவர்கண் மொழிந்ததற்பின் றென்றிசையின்
மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சுந் திருவாயின் முன்னாகப் பிஞ்ஞகர்தம்
நிறையருளான் மறையவர்க ணெருப்பமைத்த குழியெய்தி
யிறையவர்தான் மனங்கொண்டே யெரிசூழ
வலங்கொண்டார்.

6. கைதொழுது நடமாடுங் கழலுன்னி யழல்புக்கார்;
எய்தியவப் பொழுதின்க ணெரியின்க ணிம்மாயப்
பொய்தகையு முருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல் விளங்க வேணிமுடி கொண்
டெழுந்தார்.

வானவர் மகிழ்தல்

7. செந்தீமே லெழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
வந்தணன்போற் றோன்றினா; ரந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த துயர்விசும்பில்; வானவர்கண் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள்பொழிந்தார்.

அந்தணர் மகிழ்தல்.

8. திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைதொழுதார்;
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்றார்;
அருமறைசூழ் திருமன்றி லாடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாரா மறைமுனிவர்.

கோவிலுள் செலல்

9. தில்லைவா ழந்தணரு முடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழு
திறைஞ்சி.
யொல்லைபோ யுட்புகுந்தா; ருலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டா ரியாவர்களுங் கண்டிலரால்.

இறைவனுடன் இரண்டறக் கலத்தல்

10. அந்தணர்க ளதிசயித்தா; ரருமுனிவர் துதிசெய்தார்;
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிக டொழுதிருக்க
வந்தமிலா வானந்தப் பெருங்கூத்த ரருள்புரிந்தார்
—சேக்கிழார்.

குறிப்புரை

(1) மன்னு—நிலை பெற்ற; முறுவல்-புன்முறுவல்.

(2) எரி-தீ; அப்பரிசே-அந்தச் செய்தியின்படியே; மெய்ப்
பொருள்-உண்மை ஞானத்தின் பொருள்.

(3) பணி-ஏவல்; ஏத்தி-வணங்கி; பரிவு-அன்பு; தவமறை யோர்-இரண்டனுருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

(4) ஐயரே-பெருமையுடையோரே; வெய்ய-இறைவன் விரும் பிய; நையும்-உருத்தெரியாதபடி இளகும்.

(5) பிறையுரிஞ்சும்-வானமதிதடவ உயர்ந்த; பிஞ்ஞகன்-சிவன்; சூழ—செயவெனும் வாய்பாட்டு வினையெச்சம்.

(6) உன்னி-நினைத்து; கழல்-ஆகுபெயர்; தகையும்-பொருந் திய; வேணிமுடி-சடைமுடி; கண்-ஏழனுருபு.

(7) ஆர்த்து-ஆரவாரித்து; செம்மலர், பைந்துணர்-பண்புத் தொகை; அந்தணன்-பிரமன்; பணி-புதிய; துணர்-இதழ்.

(8) பரவரிய-போற்றற்கரிய; களிபயின்றார்-களிப்படைந்தனர்.

(9) கொல்லைமான்-சாதிபற்றிய இயற்கை அடை மொழி; ஒல்லை-விரைவாக.

(10) அறுத்து-போக்கி; சுந்தர-அழகிய; புரையும்-ஒத்த; வினை மாசு-உம்மைத் தொகை. பெருங்கூத்து-இஃதொப்பதாகிய கூத்துப் பிறிதில்லையாதலின்.

## (இ) கம்பராமாயணம்

கம்பராமாயணம் என்பது கம்பரது இராமாயணம் என விரியும். ஆறும் வேற்றுமைத் தொகை. கம்பரால் இயற்றப் பட்ட இராமாயணம் எனக் கொண்டு மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாகக் கூறினும் அமையும். கம்பன் என்ற சொல்லொடு இராமாயணம் என்ற சொல் புணரும் போது, "சில விகாரமாம் உயர்திணை," என்னும் விதிக்கேற்ப நிலை மொழி ஈறுகெட்டது.

இராமாயணம் என்னும் சொல்லை இராம + அயநம் என்று பிரிக்கலாம். இராம என்னும் சொல்லுக்குத் தன் திருமேனி யழகினாலும், நற்குண நற்செய்கைகளாலும் எல்லோரையும் மகிழ்விப்பவன் என்பது பொருள். அயநம் என்பதற்கு

அறிவிப்பது என்று பொருள். எனவே இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப் பெயர் பெற்றது.

இஃது ஆறு காண்டங்களையுடையது. அவை, பால காண்டம், அயோத்திய காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் யுத்த காண்டம் என்பன. ஏழாவது காண்டமாக உத்தர காண்டம் காணப்படுகின்றது. அஃதை எழுதியவர் ஒட்டக்கூத்தர் என்பர்.

இராமாயணத்தை முதலில் எழுதியவர் வால்மீகி முனிவராவர். அவர் அதை வடமொழியில் இயற்றினார். கம்பர் அதனை முதனூலாகக் கொண்டு தமிழ் மொழியில் இயற்றினார். "ஆசைபற்றி அறையலுற்றேன்," எனக் கம்பர் கூறுவதிலிருந்து, அவருக்கு இராமபிரான் மீதிருந்த அளவற்ற அன்பே இந்நூல் இயற்றப்படுவதற்குக் காரணம் என்பது போதரும். வால்மீகி முனிவரின் கதைப் பகுதிகளை மட்டும் தழுவிக்கொண்டு கம்பர், தமிழ் மொழிக்கும், காலத்திற்கும், கொள்கைகளுக்கும் ஏற்றவாறு திருத்தியும், மாற்றியும் தம் நூலை யாத்துள்ளார்.

கம்பர், சோழ நாட்டுத் திருவழுந்தூர் என்னுமூரில், உவச்சர் குடியில், ஆதித்தன் என்பாருக்கு மகனாகத் தோன்றினார். சோழ நாட்டுத் திருவெண்ணெய்நல்லூர்ச் சங்கரன் குமாரரான சடையப்ப வள்ளலால் பெரிதும் ஆதரிக்கப்பெற்றார். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற முதுமொழிக்கேற்ப தன்னை ஊட்டி வளர்த்த சடையப்ப வள்ளலைக் கம்பர் என்றும் மறந்திலர் என்பது தம் தெய்வக் காப்பியமாம் திருநூலில் பலவிடத்தும் அவர் பெயரைப் பொறித்துக் காட்டுகின்றமையே சான்றாம்.

இவர் காலம் குறித்து முடிந்த முடிபாக ஒன்றும் கூறுதற்கில்லை பண்டைப் புலவர்கள், "தம் புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே"யன்றித் தம்மைக் குறித்தொன்றும் இயம்பிச் சென்றிலர். இவரது காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டென்றும், கி. பி. 12 ஆம் நூற்றாண்டென்றும் கூறுவர். 12 ஆம் நூற்றாண்

டெனக் கொள்வோமாயின், இவர் புகழேந்தி, ஒட்டக்கூத்தர் முதலியோருடன் ஒரு காலத்து வாழ்ந்தவராவர்.

"கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்," "கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க் கிதயங்களியாதே," "உயர்புகழ்க் கம்பன்," எனவரூஉம் சொற்றொடர்களிலிருந்து கம்பரது புலமையின் மாட்சித் தெளிவுற விளங்கும். இவர் பாடியன வாகக் கூறப்படும் ஏனைய நூற்கள், "சடகோபரந்தாதி," "ஏரெழுபது," "சரசுவதியந்தாதி" முதலியன.

அடியிற் தரப்பட்டுள்ள பாடல்கள் யுத்த காண்டத்தில் வருவன. தன் தனயன் இந்திரசித்தும், கொண்கன் இலங்கை வேந்தனும் இறந்துபட்ட ஞான்று மண்டோதரி கண்ணீர் விட்டுப் புலம்பும் பான்மையைக் காட்டுவன. கல் நெஞ்சையும் கரையச் செய்யும் தன்மையன. இனிப் பாடலைப் பாருங்கள்.

### மண்டோதரி புலம்பல்

#### மண்டோதரி சோகம்

1. தலையின் மேற் சுமந்த கையள்,
   தழலின் மேல் மிதிக்கின் றாள்போல்
   நிலையின் மேல் மிதிக்குந் தாளள்,
   நேசத்தால் நிறைந்த நெஞ்சள்,
   கொலையின் மேல் குறித்த வேடன்
   கூர்ங்கணை உயிரைக் கொள்ள,
   மலையின் மேல் மயில்வீழ்ந் தென்ன
   மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்.

#### வீரத்தாய் புலம்பல்

2. கலையினால் திங்கள் என்ன
   வளர்கின்ற காலத் தேயுன்

சிலையினு லரியை வெல்லக்
காண்பதோர் தவமு ஞ்செய்தேன்;
தலையிலா யாக்கை காண
எத்தவஞ் செய்தே னந்தோ!
நிலையிலா வாழ்வை யின்னும்
நினைவனோ நினைவி லாதேன்.

## புதல்வனது இளவீரத்தைப் புகழ்தல்

3. ஐயனே! அழக னே!என்
அரும்பெற லமிழ்தே! ஆழிக்
கையனே மழுவ னேஎன்
றலர்வலி கடந்த கால
மொய்யனே! முளரி யன்ன
நின்முகங் கண்டி லாதேன்
உய்வனோ? உலக மூன்றுக்
கொருவனே செருவ லோனே!

4. தாளரிச் சதங்கை யார்ப்பத்
தவழ்கின்ற பருவந் தன்னிற்
கோளரி யிரண்டு பற்றிக்
கொணர்ந்தனை; கொணர்ந்து கோபம்
மூளுறப் பொருத்தி மாட
முன்றிலின் முறையி னோடு
மீளரு விளையாட் டின்னங்
காண்பனோ! விதியி லாதேன்

5. முக்கணன் முதலி னோரை
உலகொரு மூன்றி னோடும்
புக்கபோ ரெல்லாம் வென்று
நின்றவென் புதல்வன் போலாம்

மக்களி லொருவன் கொல்ல
மாள்பவன்! வான மேரு
உக்கிட அணுவொன் றேடி
உதைத்தது போலும் அம்மா!

மண்டோதரியின் தெளிந்த அறிவு

6. பஞ்செரி யுற்ற தென்ன
அரக்கர்தம் பரவை யெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல
விளிந்ததே மீண்ட தில்லை;
அஞ்சினே னஞ்சி னேனச்
சீதையென் றமிழ்திற் றேய்த்த
நஞ்சினு லிலங்கை வேந்து
நாளையித் தகைய னன்றோ!

மணாளனைக் குறித்துப் புலம்பல்

7. அன்னேயோ! அன்னேயோ! ஆகொடியேற்
கடுத்தவா றரக்கர் வேந்தன்
பின்னேயோ இறப்பதுமுன் பிடித்திருந்த
கருத்ததுவும் பிடித்தி லேனே!
முன்னேயோ விழுந்ததுவு முடித்தலையோ?
படித்தலைய முகங்காட் டாயோ?
என்னேயோ! என்னேயோ! இராவணனார்
முடிந்தபரி சிதுவோ பாவம்!

8. வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலுங் கீழும்
எள்ளிருக்கு மிடமின்றி யுயிருக்கும்
இடநாடி யிழைத்த வாறோ?
கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்

உள்ளிருக்கு மெனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி!

9. ஆரம்போர் திருமார்பை யகன்முழைக
ளெனத்திறந்திவ் வுலகுக் கப்பால்
தூரம்போ யினவொருவன் சிலைதுரந்த
சரங்களே போரிற் றேற்றும்
வீரம்போ யுரங்குறைந்து வரங்குறைந்து
வீழ்ந்தோனே! வேறே கெட்டேன்!
ஓரம்போ யுயிர்பருகிற் றிராவணனே!
மானுடனு ரூற்ற மீதோ!

தலைவன் சரிதம் உணர்ந்த தலைமகள்

10. காந்தையருக் கணியனைய சானகியார்
பேரழகும், அவர்தம் கற்பும்,
ஏந்துபுறத் திராவணனார் காதலுமச்
சூர்ப்பநகை யிழந்த மூக்கும்,
வேந்தர்பிரான் தயரதனார் பணியினால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும், கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற் றம்மா!

11. தேவருக்கும், திசைக்கரிக்கும், சிவனார்க்கும்,
அயனார்க்கும், செங்கண் மாற்கும்,
ஏவருக்கும் வலியானுக் கென்றுண்டாம்
இறுதியென, ஏமாப் புற்றேன்;
ஆவற்க ணீயுழன்ற அருந்தவத்தின்
பெருங்கடற்கும் வரமென் றுன்ற
காவற்கும் வலியானோர் மானுடனார்
உளரென்னக் கருதி னேனோ!

12. என்ற ழைத்தனள் எங்கியெ முந்தவண்
பொன்ற ழைத்த பொருவரு மார்பினைத்
தன்ற ழைக்கை களாற்ற ழுவித்தனி
நின்ற ழைத்துயிர்த்; தாளுயிர் நீங்கினுள்.

குறிப்புரை

(1) தழல்-நெருப்பு; நிலே-பூமி; தாளள்-காலேயுடையாள்; மறுகி-கலங்கி—உவமையணி.

(2) அரி-இந்திரன்; வாக்கை-உடலே; நினேவிலாதேன்-நல்லெண்ணமில்லாதவளாகிய நான்.

(3) காலமொய்யன்-காலன்+மொய்யன், எமன் போன்ற வலிமையுடையவன்; முளரி-தாமரை; ஐயனே, அழகனே, அமிழ்தே-எகாரங்கள் எண்ணுப் பொருளில் வந்தன.

(4) தாள்-பாதம்; அரி-பரல்; விதி-நல்வினே; தாளரி-வேற்றுமைத் தொகை.

(5) உக்கிட-சிந்தும்படி—உவமையணி.

(6) பரவை-கடல் போன்ற படை; விளிந்தது-இறந்தது; அஞ்சினேன் அஞ்சினேன்—அடுக்குத் தொடர்.

(7) கொடியேற்கு ஆ—துயரக்குறிப்பு; முடித்தலே-மகுடந் தரித்த தலே; முடிந்த பரிசு-உயிர் துறந்த தன்மை; பாவம் பாவத்தின் விளேவு.

(8) வெற்பு-கயிலமலே; கள்-தேன்; கரந்த-மறைத்து வைத்துள்ள; ஒருவன்-ஒப்பற்ற இராமன்—தற்குறிப்பேற்ற அணி.

(9) ஆரம் போர்-முத்தாரத்தையணிந்த; அகன்முழை-வாயகன்ற குகை; உரம்-மனவலிமை; ஓரம்-பட்சபாதம்; ஊற்றம்-வலிமை.

(10) காந்தையர்-பெண்கள்; பணி-கட்டளே, புரந்தரன்-இந்திரன்.

(11) எவர்க்கும்-மற்றுமுள்ள எவர்க்கும்; ஏமாப்பு-இறுமாப்பு; கருதினேனோ—ஓகாரம் எதிர்மறை.

(12) அழைத்தனள்—முற்றெச்சம்; பொரு அரு-ஒப்பற்ற. தளிக்கை-தளிர் போன்ற கை—உவமைத் தொகை.

## (ஈ) நளவெண்பா

நளனுடைய வரலாற்றைக் கூறும் வெண்பாக்களினாலாகிய நூல். நளனென்னும் வடநாட்டு மன்னனது வாழ்க்கை வரலாற்றைச் சித்தரித்துக் காட்டுவது. ஒரு மன்னனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறுமுகத்தான் அறம், அன்பு, அருள், மறம், மானம், காதல், கற்பு முதலிய மக்கட்கு இன்றியமையாது வேண்டிய பண்பாடுகளை உணர்த்தி, கற்றோர்க்கும் கேட்டோர்க்கும் அறிவுச்செல்வத்தை வாரி வழங்கி நன்னிலையில் நிறுத்தி மகிழ்வுடன் வாழப் பெரிதும் துணை நிற்கும் தன்மையுடையது. இதன் முதன் நூல் வடமொழி மகாபாரதத்தில் ஆரணிய பருவத்தின் கண் வரும் 'நளோ பாக்கியாநம்' ஆகும்.

இதன் ஆசிரியர் புகழேந்திப் புலவர். தொண்டை நாட்டின் கண், பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர்; முரணை நகரை ஆண்ட சந்திரன் சுவர்க்கி என்னும் வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர் துளுவ வேளாள மரபினர். திருமாலையே நூற்கண் பலவிடங்களிலும் விதந்து கூறியிருத்தலால் இவர் வைணவ சமயத்தவரென அறுதியிட்டு உரைத்தல் இயலும். இவர் காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டெனக் கருதலாம். "வெண்பாவிற் புகழேந்தி," என்று புலவர்களால் புகழப்பட்டவர்.

கானகத்துக் காரிருளில் கைவிட்டு நீங்கிய காதலனும் நளனை மீண்டும் அடைவதற்காகத் தமயந்தி கையாண்ட சூழ்ச்சியின் பயனே தனது இரண்டாம் சுயம்வரம். உண்மையறியாத கோசல நாட்டு வேந்தன் இருதுபன்னன் தனது தேர்ப்பாகனாகிய வாகுகனுடன் குண்டினபுரம் விரைகின்றான். அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதே அடியிற் காணப்பெறும் பாடல்கள்.

## கலி நீங்கு காண்டம்

### வாகுகன் சமைக்க ஒருப்படல்

1. ஆதி நெடுந்தேர்ப் பரிவிட்டவை ஆற்றிக்
கோதில் அடிசில் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயில் கார்நீலம் கண்விழிக்கும் நாடன்
மடைவாயில் புக்காண் மதித்து.

### வாகுகன் சமையற்றொழில்

2. ஆதி மறைநூல் அனைத்தும் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை.

### தமயந்தி தன் தோழியிடம் கூறல்

3. இடைச்சுரத்தில் தன்னை இடையிருளில் நீத்த
கொடைத்தொழிலான் என்றயிர்த்த கோமான்—மடைத்
[தொழில்கள்
செய்கின்ற எல்லாம் தெரிந்துணர்ந்து வாவென்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து.

### வாகுகனிடம் மக்கள் செலல்

4. கோதை நெடுவேல் குமரனையும் தங்கையையும்
ஆதி அரசன் அருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயல்நா டென்றாள்
வளையாடும் கையாள் மதித்து.

### வாகுகன் மக்களிடம் வினவல்

5. மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

### மக்களின் மறுமொழி

6. மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவன்ஏக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான் என்றார் அழுது.

### மக்கள் மொழியைக் கேட்ட வாகுகன் வருந்துதல்

7. ஆங்கவர் சொன்ன உரைகேட் டழிவெய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான்—பூங்காவின்
வள்ளம்போல் கோங்கு மலரும் திருநாடன்
உள்ளம்போல் கண்ணீர் உகுத்து.

### மக்களைப் பார்த்து வாகுகன் வினவுதல்

8. உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்
திங்கண் உறைதல் இழுக்கன்றோ—செங்கை
வளவரசே என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

### மகன் மனம் நொந்து கூறியன

9. நெஞ்சால்இம் மாற்றம் நினைத்துரைக்க நீஅல்லால்
அஞ்சாரோ மன்னர் அடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய் எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

10. எந்தை கழலிணையின் எம்மருங்கும் காணலாம்
கந்து களியும் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியில் தேய்ந்த வடு.

### வாகுகனின் மறுமொழி

11. மன்னர் பெருமை மடையர் அறிவரோ
உன்னையறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல் என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

### தமயந்தி துயருரல்

12. கொற்றக் குமரனையும் கோதையையும் தான்கண்டு
மற்றவன்தான் ஆங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தார்அம் மாற்றம் மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது.

### தமயந்தி தன் தந்தையிடம் கூறல்

13. மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேரும் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்காண் எங்கள்
கொடைத்தொழிலான் என்றுள் குறித்து.

### வீம மன்னன், வாகுகனிடம் செல்லல்

14. போதலரும் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகண் டேறும் வளநாடன் தன்னைத்
தெரிதரிதா நின்றான் திகைத்து.

### வீமன் நளனை அறிதல்

15. செவ்வாய் மொழிக்கும் செயலுக்கும் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட உருவென்று—எவ்வாயும்
நோக்கினான் நோக்கித் தெளிந்தான் நுணங்கியதோர்
வாக்கினான் தன்னை மதித்து.

—புகழேந்திப் புலவர்.

**குறிப்புரை:—**

(1) ஆதி-முதன்மையான; கோது-குற்றம்; மேதி-எருமை; மடைவாயில்-சமையலறை; புக்கான்-புகு+ஆன், தன்னொற் றிரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று.

(2) ஆதி-பழமையான; நீதிநெறியாளர்-உயர்ந்த வழியில் நடக்கும் பெரியோர்; வரப்பாகன்-வரம்+பாகன்.

(3) அயிர்த்த-ஐயங்கொள்ளப்பட்ட; நைகின்ற-வருந்துகின்ற; இடைச்சுரம், இடையிருள்—இலக்கணப் போலி.

(4) கோதை-மாலையணிந்த; நாடு-கண்டறி; போத-மரூஉ.

(5) புக்கு-விரைந்துசென்று; வன்மபகைமைத்தன்மை கொண்ட; நடுங்கா, உயிரா, அணையா-செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

(6) வாழ்வேந்தன்-வாழ்வுக்குக் காரணமாகிய வேந்தன்; நகர்க்கு—வேற்றுமை மயக்கம்.

(7) வள்ளம் - கிண்ணம்; அழிவுஎய்தி - மனச்சோர்வுற்று; உள்ளம்போல்-அன்பின் காரணமாக; உகுத்து-சொரிந்து; நீங்கா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

(8) அரசு-அரசாட்சி; உங்கள் அரசு—வேற்றுமைத் தொகை; அன்றே—ஓகாரம் வினாப்பொருளில் வந்தது.

(9) அடுமடையா-சமையல் தொழில் செய்கின்றவனே; எஞ்சாது-தவறாமல்; மாற்றம்-சொல்; அல்லால்—குறிப்பு எதிர்மறை வினையெச்சம்.

(10) பணி-ஆதிசேடன்; கந்துசுழியும்-கட்டுத்தறியை முறிக்கும்; வடு-தழும்பு; எந்தை-எம்+தந்தை, மரூஉ; கழல்—ஆகு பெயர்; கடாக்களிறு—ஒரு பொருட் பன்மொழி.

(11) முனிந்து-சினந்து; கனிந்து-மனம் தளர்ந்து; வார-பெருக்கெடுத்தோட; முனிந்தருளல்—எதிர்மறைப் பொருளில் வந்த முன்னிலை ஏவல் வியங்கோள்.

(12) கொற்றம்-வெற்றி; அழிந்தாள்-மனமுடைந்து, முற்றெச்சம்; முற்றும்-முற்றும்மை.

(13) தனி-ஒப்பற்ற; கொடைத் தொழிலான்-ஈகையிற் சிறந்தவன்.

(14) போது-பூவரும்பு; ஓதம்-கடல், இருமடியாகுபெயர்; வரிவளை-கீற்றுக்களுடைய சங்கு; தெரிவரிதா-தெரிந்துகொள்ள இயலாமல்.

(15) எவ்வாயும்-எல்லாத் தன்மைகளையும்; நுணங்கிய-நுட்பமான; செவ்வாய்-செம்மை+வாய், குணப் பண்பு குறித்து நின்றது.

## (உ) சிலப்பதிகாரம்

சிலம்பு + அதிகாரம், எனப் பிரிக்கலாம். சிலம்பால் விளைந்த கதையைக் கூறும் நூல் எனப் பொருள்படும். சிலம்பு வேற்றுமைப் புணர்ச்சியில் சிலப்பு என வன்றொடராயிற்று.

இந்நூல் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. ஐம்பெருங் காப்பியங்களாவன: சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். இது புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் எனும் மூன்று காண்டங்களையும், மங்கல வாழ்த்துப் பாடல் முதலாக வரந்தரு காதையீருக முப்பது உறுப்புக்களையுமுடையது.

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்," என்று புதுமைக் கவிஞரால் பாராட்டப் பெற்ற இந்நூலை ஆக்கியோன் இளங்கோவடிகளாவர். இவர் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் இளவல். "அரைசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டு," என்று தன்னை நோக்கி உரை செய்த நிமித்திகன் கூற்றைப் பொய்ப்பிப்பான் வேண்டி, அரசு துறந்து, துறவு பூண்டு, குணவாயிற் கோட்டத்துச் சென்று தங்கினர் என்ப. இளங்கோவாகவிருந்து அடிகளாயினமையின் இளங்கோவடிகள் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப் பெற்றார். சமண மதக் கொள்கைகளைப் பலவிடத்தும் விரித்துக் கூறியிருத்தலாலும், அடிகள் என்னும் பெயர் வழங்குதலாலும் இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கூறுதல் பொருந்தும். இவரது காலம் இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னர் எனலாம்.

இப் பாடற் பகுதி மதுரைக் காண்டத்து, வழக்குரை காதையில் வந்துள்ளது. வழக்குரைப்பதற்காகத் தன்முன் நின்ற கண்ணகியிடம் மதுரை மன்னன் "யாரையோ, நீ?" என்று வினவ, அதற்குக் கண்ணகி இறுக்கும் பதிலாக அமைந்துள்ளது.

வழக்குரைகாதை.

தேரா மன்ன செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்

புள்ளூறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்திங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே யெனப், பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள் வேற் கொற்றங்காண்என ஒள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே, எனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே.

—இளங்கோவடிகள்.

## குறிப்புரை

தேரா-ஆராயாத, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். செப்புவது-கூறுவது; எள்ளறு-இழிவற்ற; எள்-முதனிலைத் தொழிற் பெயர்; ஏசா-நிந்தித்தலற்ற; சூழ்கழல்-வினைத்தொகை; கோறல்-கொல்லுதல், தொழிற் பெயர்; வெள்-ஒளியுடைய கொற்றம்-அரசுரிமை; படரா-அடையாத; அரி-சிலம்பின் பருக்கைக்கல். தேமொழியுரைத்தது-தேமொழி, உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

# IV. பல்சுவைப் பகுதி

## (அ) இயற்கை எழில்

### (1) திருக்குற்றாலக் குறவஞ்சி

குறவஞ்சி என்பது குறத்தி ஒருத்தி குறி சொல்லுவதாகப் பாடுவது. திருக்குற்றால நகரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாகிய திரிகூடநாதரைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற இந்நூல் திருக்குற்றாலக் குறவஞ்சி எனப் பெயர் பெற்றது. இப்பொழுதுள்ள குறவஞ்சிகளுள் காலத்தால் முற்பட்டது திருக்குற்றாலக் குறவஞ்சியாகும். இந்நூல் சொல்லழகு, பொருளழகு, கருத்தாழம் மிக்கது. ஓசையின்பமும், எளிய, இனிய நடையும் வாய்ந்தது.

இதன் ஆசிரியர் திரிகூட இராசப்பக் கவிராயர் ஆவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியை அடுத்துள்ள மேலகரம் என்னும் ஊரில் பிறந்தார். சைவ வேளாண் குலத்தினர். திருக்குற்றால நாதர் மீது பதினான்கு நூற்கள் பாடியுள்ளார். அவற்றுள், பொருள் வளத்திலும் சொல் வளத்திலும் சிறந்ததெனக் கற்றோரால் போற்றப்படுவது இந்நூலேயாம். இவர் காலத்தில் மதுரையை ஆண்ட முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கரவர்கள், இந்நூலைப் பாடியதற்காகக் கவிஞர்க்குக் "குறவஞ்சிமேடு" என்னும் பெயர் கொண்ட சிறந்த நன்செய் நிலத்தை வாரம் வரியின்றி முற்றூட்டாக வழங்கினர். இவர் ஏறத்தாழ இற்றைக்கு 250 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்.

திரிகூட மலையிலுள்ள இன்பமுள்ள மோகினியாகிய வசந்தவல்லி முன்பாக மிகுந்த காதல் நோயைத் தீர்க்கும் சஞ்சீவி மருந்து போல குறவஞ்சி தோன்றி, திருக்குற்றால நாதரின் பெருமையைக் கூறுவான் தொடங்கி, முதற்கண் அவர் எழுந்தருளியிருக்கும் மலைவளத்தைக் கூறுகிறாள்.

மலைவளம் கூறல்

முழங்குதிரைப் புனலருவி கழங்கென முத்தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்
டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்கு கொடை மகராசர் குறும்பலவில் ஈசர்
வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே.

—திரிகூட இராசப்பக் கவிராயர்.

குறிப்புரை

முழங்குதிரை-வினைத்தொகை; கழங்கு-கழற்சிக்காய்; சிற்றில்-குழந்தைகள் அமைக்கும் மண் வீடு; கிம்புரி-யானைக் கொம்பிற் பூண், இருமடியாகு பெயராக யானையை உணர்த்திற்று; வெம்பும்-விரும்பும்; வாசம்-வாசனை.

2. கம்பராமாயணம்

காலையில் கதிரவன் தோன்றும் காட்சிக் கவிஞரால் எழிலுற அடியிற் குறிப்பிடும் பாடலில் வர்ணிக்கப்பட்டுள்ளது. அயோத்தியா காண்டத்தில் கங்கைப் படலத்தில் வரும் இப்பாடல் இயற்கையின் எழிலைக் கற்போர்கண் முன் சித்திரித்துக் காட்டும் தன்மையது.

கதிரவன் வருகையும் தாமரை மலரும்

செஞ்செவே சேற்றில் தோன்றும் தாமரை தேரில்
தோன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கிய விரிந்த வேரோர்
அஞ்சன ஞாயி றன்ன ஐயனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதனம் என்னும் தாமரை மலர்ந்த தன்றே

—கம்பர்.

### குறிப்புரை

செஞ்செவே-நேராக; செல்வன்-ஞாயிறு; வெஞ்சுடர்-பண்புத் தொகை; ஐயன்-இராமன்; வஞ்சி-கொடி; விரிந்த-தெரிநிலை வினைமுற்று.

## 3. நைடதம்

நிடத நாட்டு மன்னனும் நளன் சரிதையைக் கூறும் இந் நூற்கு நைடதம் எனப் பெயர் வந்தது. இந் நூலில் காதலின் சிறப்பும், சூதின் கொடுமையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. 'நைடதம் புலவர்க்கோர் ஔடதம்,'' என்னும் முதுமொழி தமிழில் புலமை பெற விரும்புவோர் நைடதத்தை நன்கு கற்றிருத்தல் அவசியம் என்னும் உண்மையை உணர்த்தும்.

இதன் ஆசிரியர் அதிவீரராம பாண்டியர். இவர் திருநெல்வேலி பகுதியை ஆண்டு வந்தார். புலவர்களைப் பெரிதும் போற்றியவர். தாமே கவி பாடும் திறனுடையார். சைவ சமயத்தைச் சார்ந்தவரெனினும் பொது நோக்குடையவர். இவரால் இயற்றப் பெற்ற நூற்கள்:--காசிக் காண்டம், கூர்ம புராணம், கருவை நூற்கள், வெற்றிவேற்கை முதலியனவாம்.

இயற்கை எழிலைச் சிறப்புற இயம்பும் அடியிற் குறிப்பிடும் பாடல் நாட்டுப் படலத்தில் காணப்படுவது.

### மயிலும் குயிலும் மயங்குதல்.

பூங்கரும் புடைந்த தீஞ்சா றடுபுகை புயலென் றெண்ணி
மாங்குயிற் றெகுதி யாவும் வாய்விடா தொழிந்த மஞ்ஞை
தூங்கிசை வண்டுந் தேனுஞ் சுரும்போடு ஞிமிறும் பாடத்
தேங் மழ சோலை தோறுஞ் சிறைவிரித் தாடு மாதோ.

—அதிவீரராம பாண்டியர்.

### குறிப்புரை.

பூங்கரும்பு-செங்கரும்பு; தீம்-இனிய; அடுபுகை-வினைத் தொகை; வாய்விடாது-பாடாது; ஒழிந்த-வினைமுற்று. மஞ்ஞை-

மயில்; தூங்கு-மெலித்தல் விகாரம்; தூக்கு-உயர்ச்சி; தேண்-வாசனை.

## (ஆ) இரட்டுறமொழிதல்

### 1. நெல்லைச்சிலேடை வெண்பா

ஒரு சொல் அல்லது தொடர் இரண்டு பொருள்படக் கூறுவது சிலேடையாகும். திருநெல்வேலியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் குறித்துச் சிலேடையாகப் பாடப் பெற்ற நூற்கு நெல்லைச்சிலேடை வெண்பா என்று பெயர்.

இதன் ஆசிரியர் வெ. ப. சுப்பிரமணிய முதலியாராவர். திருநெல்வேலியைச் சேர்ந்த வெள்ளக்கால் என்னும் ஊரினர். தந்தையார் பழனியப்ப முதலியார். வேளாளர் குலத்தில் தோன்றியவர். சைவ சமயத்தினர். இவரியற்றிய வேறு நூற்கள்:—கம்பராமாயணசாரம், அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், சுவர்க்க நீக்கம் முதலியன.

1. மேய விருந்தினரு மேதக்க நண்பினரு
நேய மனமடுக்கு நெல்லையே—காய்விற்
செருவுள்ளம் பற்றூர் சிவனவன்பற் றூர்க்குத்
திரு வுள்ளம் பற்றூர் செறிவு.

—வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

### குறிப்புரை

மேய–பொருந்தின.

நேயமன மடுக்கும்-நேயம் + அனம் + அடுக்கும்-நெய் பெய்த அன்னத்தை உண்பர்; நேய + மனம் + அடுக்கும்—அன்புடைய மனத்தோடு பொருந்தியிருப்பர், என இரண்டு விதமாகப் பொருள் கொள்க.

காய்-கோபத்தோடு; சிவன-உவமை உருபு.

மேய, நெல்லை-மரூஉ,

## (2) தனிச் செய்யுட் சிந்தாமணி

இந் நூலைத் தொகுத்தவர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர். இவர் மதுரையில் 'விவேக பானு' என்னும் இதழின் ஆசிரியராக விருந்த பெரும் புலவர். தொகுப்பித்தவர் மதுரை மாவட்டம் முகறையூர் பழ சி. சண்முகஞ் செட்டியார் என்பவர். அடியிற் குறிப்பிடும் பாடல் சிவபெருமானது இருக்கையைக் குறித்து அம்மானை ஆடும் பெண்கள் பாடி மகிழ்வதாக அமைந்துள்ளது.

### இருப்பம்பலம்

மன்னு வெள்ளி யம்பலமும் மாசறுபொன் னம்பலமும்
என்னுடைய ஈசற்கினவ யிரண்டுண் டம்மானை
என்னுடைய ஈசற்கி வையிரண்டுண் டாமாயின்
இன்னுமிருப் பம்பலமொன் றில்லையோ அம்மானை
இருப்பம்பல மடியா ரிதயங்கா ணம்மானை.

—தனிச் செய்யுட் சிந்தாமணி.

### குறிப்புரை

வெள்ளியம்பலம்-மதுரையிலுள்ள ஒரு மன்றம். பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் இருவர்பொருட்டு சிவபெருமான் நடனதரிசனம் தந்தருளிய இடம். பொன்னம்பலம்–சிதம்பரத்துள்ள பொற்சபை. இருப்பம் பலம்—இருப்பு—அம்பலம் எனப்பிரிக்க; அம்மானை-ஒரு விளையாட்டு.

## (3) கலைசைச் சிலேடை வெண்பா

கலைசை யென்பது தொண்டை நாட்டிலுள்ள ஒரு திருப்பதி. அவண் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது சிலேடையாகப் பாடப் பெற்ற இந் நூல் கலைசைச் சிலேடை வெண்பா எனப் பெயர் பெற்றது.

இதன் ஆசிரியர் தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர் கி. பி. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். சிவஞான முனிவரின் தலை சிறந்த மாணாக்கருள் ஒருவர்.

ஆயக் சிருர்படமு மார்க்குங் கடாசலமுங்
காயத் திரியும் கலைசையே–நேயமுடன்
பைத்த பதஞ்சலியார் பார்த்துருக பொற்பொதுவில்
வைத்த பதஞ்சலியார் வாழ்வு.

—தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர்.

### குறிப்புரை

படம்-பட்டம்; கடாசலம்-யானை; காயத்திரியும்-காயத்து+இரியும், ஆகாயத்தில் உலவும், காய+திரியும்-பகை வரைக் கொல்ல உதவும் என இருவகையாகப் பிரித்துப் பொருள் கொள்க. பைத்த பதஞ்சலியார்-விரிந்த பதஞ்சலி முனிவர்; பதஞ்சலியார்—பாதம் நோவாது ஆடுபவர்.

## (இ) சீட்டுக்கவி

கொடைவள்ளல்களை நேரில் காணும் வாய்ப்புப் பெருத புலவர்கள் ஓர் ஓலைச் சீட்டிலே தம் தகுதியையும், தமக்கு வேண்டும் பொருளையும் பாட்டாக எழுதி அனுப்புவது வழக்கம். இத்தகைய பாட்டு 'சீட்டுக்கவி' என்றும் 'தீட்டுக்கவி' என்றும் பெயர் பெறும்.

பாடப்பகுதியில் வரும் பாடலை எழுதியவர் அந்தகக் கவி வீரராகவ முதலியார் ஆவர். இவர் காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள புதூரில் பிறந்தவர். தந்தை பெயர் வடுகநாத முதலியார். இவர் இலங்கைக்குச் சென்று பரராசசேகர அரசனிடம் பரிசில் பெற்று மீண்டவர்.

இவரியற்றிய நூற்கள்:—கழுக்குன்றப் புராணம், கழுக்குன்ற மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க்கலம்பகம், திருவாரூருலா, சந்திரவாணன் கோவை, கயத்தாற்றரசனுலா முதலியன.

அடியில் வரும் பாடல் கவிஞர் குதிரையொன்று வேண்டி குலசேகர பாண்டியனுக்கு விடுத்த சீட்டுக் கவியாம்.

பூவாத மா வொன்று தருக

ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத் தெழுதிப்
படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர ராகவன்
விடுக்கும் ஓலை
சேடாதி பன்சிரம் அசைத்திடும் புகழ் பெற்ற திரிபதகை
குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த செழியன் எதிர்
எதிர் கொண்டு காண்க
பாடாத கந்தருவம், எறியாத கந்துகம், பற்றிக்கொ
லாத கோணம்,
பறவாத கொக்கனற் பண்ணாத கோடை, ஐம்
படையில் தொடாதகுந்தம்
சூடாத பாடலம், பூவாத மாவொடு தொகுத்துமுடி
யாத சடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளை யொன்றெங்கும்
துதிக்கவர விடல் வேண்டுமே.

—அந்தகக் கவி வீரராகவமுதலியார்.

குறிப்புரை

விரகன்-வல்லவன்; சேடாதிபன்-திருமால்; செழியன்—பாண்டியன்; கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், மா, சடிலம், கிள்ளை, முதலிய சொற்கள் கொடுத்துள்ள அடைமொழிகளால் குதிரையை உணர்த்தின ஒரு பொருட் பன்மொழிகள்.

## (ஈ) சிறு நூற்கள்

### (1) பிள்ளைத் தமிழ்

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றுள் ஒன்று பிள்ளைத் தமிழ். அதன் இலக்கணமாவது தெய்வங்களை யேனும், பெரியோர்களையேனும் குழந்தையாக பாவித்துத் தம் அன்புடைமை தோன்றப் பாராட்டிப் பாடுவது ஆகும்.

அப்பிரபந்தம் ஆண்பாற் பிள்ளைத் தமிழென்றும், பெண்பாற் பிள்ளைத் தமிழென்றும் இரு வகைப்படும். ஆண்பாற் பிள்ளைத் தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறு பறை, சிறு தேர் ஆகிய பத்துப் பருவங்களும் கூறப்படும். பெண்பாற் பிள்ளைத் தமிழில் ஆண் பாற்குக் கூறப்பட்ட சிற்றில், சிறு பறை, சிறு தேர் என்னும் மூன்று பருவங்களும் நீக்கி அம்மானை, நீராடல், ஊசல் என்னும் மூன்று பருவங்களும் சேர்த்துக் கூறப்படும்.

நமது பாடப் பகுதியுள் காண்பது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழெனும் நூலில் வருகைப் பருவத்தைக் குறிக்கும் பத்துப் பாடல்களுள் ஒன்றாகும். வருகைப் பருவமாவது குழந்தை வருதலை விரும்பிய பருவம்.

இதன் ஆசிரியர் குமரகுருபர அடிகள். இவர் பாண்டி நாட்டிலுள்ள சீவைகுண்டத்தில், சைவ வேளாளர் குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயரும், அவர் மனைவியார் சிவகாமி யம்மையாரும் செய்த நற்றவத்தின் பயனாய் அவதரித்தார். ஐயாட்டைப் பருவம் வரையில் மூங்கைப் பிள்ளையாய்க் காட்சி யளித்த இவர், பின்னர் செந்திலாண்டவன் துணையால் ஊமை நீங்கினார். முருகப்பெருமான் ஆணைப்படி குமரகுருபரர் ஒருகால் வட திசைச் செல்லும்போது 'மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' என்னும் நூலை இயற்ற, அக்காலத் தரசராகிய திருமலை நாயக்கர் மீனாட்சியம்மை அருளால் அஃதறிந்து குமரகுருபரரை வருவித்து அந்நூலை அம்பிகையின் சன்னதியில் அரங்கேற்றினாரென்றும், அப் பிள்ளைத் தமிழின் வருகைப் பருவத்து ஒன்பதாம் செய்யுளும், நம் பாடப் பகுதியில் சேர்க்கப் பட்டுள்ளதுமாகிய "தொடுக்கும் கடவுள் பழம் பாடல்" என்று தொடங்கும் செய்யுளுக்குக் குமரகுருபரர் பொருளுரைக்கும் போது மீனாட்சியம்மையார் அருச்சகரின் பெண் தோற்றங் கொண்டு அரசர் கழுத்திலணிந்திருந்த மணி வடத்தைக் கழற்றிக்



ELE.—6

குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினுள் என்றும் கூறுவர்.

இவரியற்றிய வேறு நூற்கள், மீனுட்சியம்மை குறம், மீனுட்சி யம்மை இரட்டை மணி மாலே, மதுரைக் கலம்பகம், நீதி நெறி விளக்கம், திருவாரூர் நான் மணி மாலே, கந்தர் கலி வெண்பா, சகல கலா வல்லிமாலே, காசிக் கலம்பகம் முதலியன வாகும்.

### வருகைப் பருவம்

தொடுக்கும் கடவுட் பழம்பாட்ல் தொடையின் பயனே
நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே அகந்தைக்
கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும்
விளக்கே வளச்சிமய
இமயப் பொருப்பில் விளேயாடும் இளமென்
பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற ஒருவன்
திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோ வியமே
மதுகரம் வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே
வருக வருகவே

—குமரகுருபரவடிகள்.

### குறிப்புரை

கடவுட் பழம் பாடல்-வேத சிவாகமங்கள்; துறைத்தமிழ்-பல துறைகளேயுடைய தமிழ்; அகந்தைக் கிழங்கு-காரியவாகு பெயர். ஆணவம் எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூலமாயிருத்தலின் அதனைக் கிழங்கு என்றுர்; தொழும்பர்-அன்பர்; ஒருவன்-சிவ பெருமான்; மதுகரம்—வண்டு; குழற்காடு-உருவகம்.

## (2) தமிழ் விடுதூது

தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களுள் இஃது ஒன்றுகும். அது, தலைவன் தலைவிகளுள் விரகத்தால் துன்புற்ற ஒருவர் மற்றொருவர் பால் தம்முடைய வருத்தத்தைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருள்களையேனும், அஃறிணைப் பொருள்களை யேனும் தூது விடுப்பதாகக் கல்வியில் வல்லுநராற் பாடப் படுவது.

தமிழ் விடுதூதென்னும் நூல், மதுரை சோமசுந்தரக் கடவுள் பால் காதல் கொண்ட ஒரு தலைவி, விரகத்தால் துன்புற்றுத் தமிழை அவர் பால் தூது விடுத்ததாக இயற்றப்பட்டுள்ளது.

இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று அறிவதற்கில்லை; எனினும், இந்நூலின் அமைப்பை நோக்குமிடத்து, அவர் தமிழ் மொழியில் மிக்க பற்றுடையவரென்றும், கல்வி கேள்விகளிற் சிறந்தவரென்றும், சிவபெருமானிடத்தும் நாயன்மாரிடத்தும் அன்புமிக்கவரென்றும் தெரிகின்றன. இந்நூல் 268 கண்ணிகளை யுடையது.

### இருந்தமிழே உன்னுலிருந்தேன்

(1) இருந்தமிழே யுன்னு லிருந்தே னிமையோர்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்—வருந்தினன்
மால்

(2) வெல்லானை தின்ற விளங்கனியா னேன்விரகக்
கல்லானை தின்ற கரும்பானேன்—நல்லவரைத்

(3) தேடுநிழற் சிந்தனையிற் றேம்பினேன் வெம்பனியால்
வாடிய செந்தா மரையொத்தேன்—ஓடமிசைக்

(4) கொள்ளம்பூ தூர்வெள்ளக் கொள்ளைகடந் தாயென்மால்
வெள்ளங் கடத்திவிட வேண்டாவோ—தள்ளென்று

(5) மாறிட்ட சாக்கியரை வன்கழுவே றச்செய்தாய்
சீறிட்ட வேளையது செய்யாயோ.

### குறிப்புரை

மால்வெல் ஆனை-காம மயக்கமாகிய வெல்லும் யானை. உருவகம். ஆனையென்றது விளங்கனிக்கு வருவதொரு நோயை. விரகம்-பிரிவு. கல்லானைக்குக் கரும்பு அருத்தியது, சோம சுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களில் ஒன்று. நல்லவரைத் தேடு நிழற் சிந்தனையில்-நல்ல அவரைக் கொடி படர்ந்த பந்தரின் தேடிய நிழலிலுள்ளார் அறிவுபோல; அவரை நிழலில் இருப்பவர்களின் அறிவு தேயுமென்பது ஆயுள் தூற்றுணிபு.

கொள்ளை-மிகுதி; சாக்கியர்—சமணர்.

## (உ) வழிபாட்டுப் பாடல்கள்

### (1) தேவாரம்

சைவ சமயாச்சாரியர் நால்வருள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் சிவபெருமானைப்பற்றிப் பாடிய பாக்கள் தேவாரம் எனப்படும். தேவாரம் என்னும் சொல்லை, தே+ஆரம் எனப் பிரித்து, தேவனுக்குச் சூடும் மாலை யென்றும், தே+வாரம் எனப் பிரித்துக் கடவுளிடத்து அன்பு காட்டும் நூல் என்றும் இரு வகையாகப் பொருள் கொள்வர். இது சைவத் திருமறைகள் பன்னிரண்டனுள் முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. தேவாரம் ஓதுவதாலும், கேட்பதாலும் வினையொழியும், துயர் நீங்கும், பிறவி அறும் எனச் சம்பந்தரும், சுந்தரரும் தங்கள் பதிகங்களின் இறுதியில் கூறியுள்ளார்கள்.

அடியில் வரும் பாடல் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற தேவாரங்களுள் ஒன்றாகும். மருள் நீக்கியார் என்ற பிள்ளைப் பெயருடைய இவர், இளமையில் சமண சமயத்தைச் சார்ந்து தரும் சேனர் என்ற பெயரோடு விளங்கிப் பின்னர், இறைவனருளால் சைவ சமயத்தைச் சார்ந்தார். சிவ தலங்களில் உழுவாரப் படைகொண்டு தொண்டு புரிந்தும், இறைவன்மீது

இனிய பாக்கள் புனைந்தும் இவர் வழிபட்டு வந்தார். இவரு தொண்டின் திறத்தால், சமணனாக இருந்த பல்லவப் பேரரசன் மகேந்திரவர்மன் சைவ சமயத்தை ஆதரிப்பானாயினான்.

### சிவகதி வேண்டுவோர் செய்யத்தக்கன

மெய்ம்மையாம் உழவைச் செய்து, விருப்பெனும்
வித்தை வித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கி, பொறை எனும்
நீரைப் பாய்ச்சி
தம்மையும் நோக்கிக் கண்டு, தகவுஎனும் வேலி யிட்டு,
செம்மையுள் நிற்பர் ஆகில், சிவகதி விளையும் அன்றே.

—திருநாவுக்கரசர்.

### குறிப்புரை

மெய்மை ஆம்-உண்மை ஆகிய; மெய்யுணர்தல் உழவுத் தொழிலாக உருவகப் படுத்தப் பெற்றுள்ளது.

வித்தி-விதைத்து; வாங்கி-பறித்து; தகவு-ஒழுக்கம்.

மெய்மை, விருப்பு, பொய்மை, பொறை, தகவு, சிவகதி என்பன முறையே விதை, களை, நீர், வேலி, விளைவு ஆகியவற்றைச் சுட்டி முற்றுருவக வணியாகக் காட்சியளித்தல் கவிதையின் சிறப்பு.

### (2) நாலாயிர திவ்விய பிரபந்தம்

ஆழ்வார்கள் பன்னிருவரால் திருமாலின் சிறப்பியல்புகளைக் குறித்துப் பாடப்பட்டதாகும். இது திருமாலின் உயர் நலங்களில் ஆழ்ந்துள்ளளோரால் திருவருட் பாக்களாகப் பாடப் பெற்றமையாலும், தெய்வத் தொடர்புடைமையாலும் திவ்விய பிரபந்தம் என்று சொல்லப்படுகின்றது.

நம் பாடப் பகுதியில் வரும் பாடல் குலசேகராழ்வாரால் இயற்றப் பட்ட பெரிய திருமொழி என்னும் பாடற்றொகுதியில் வருவது.

பெரிய திருமொழி.

மருத்துவன் நோயாளன்

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட் டம்மாநீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

—குலசேகர ஆழ்வார்.

குறிப்புரை

மருத்துவன்-வைத்தியன்; மாளாத-அழியாத; மீளா-ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

ஆளா-தலைவனாக-

(3) தேம்பாவணி

இஃதொரு கிறித்துவ சமயத் தமிழ்க் காப்பியம். கிறித்துவ சமயத் தொண்டர் வீரமா முனிவரால் எழுதப் பெற்றது. கிறித்து பெருமானது வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றை எளிய, இனிய நடையில் பல அணிகளுஞ் செறிய நயமுடன் சுவை மிக எடுத்துரைக்கிறது. அறம், பொருள், இன்பம், வீடெனும் நாற்பொருளையும் பயக்கும் இக்காவியம் கிறித்துவ சமய நூலாயினும் எச்சமயத்தாரும் விரும்பிப் பயிலும் வண்ணம் அமைந்துள்ளது.

தேம்பாவணி என்பதற்கு வாடாத மாலை என்பது பொருள். இதனைத் தேம்+பா+அணி எனப் பிரித்து இனிய பாக்களின் வரிசையால் ஆகிய நூல் என்று பொருள் கொள்வாருமுளர். இது மூன்று காண்டங்களையும், 36 படலங்களையும், 3615 பாடல்களையும் கொண்டது.

இதன் ஆசிரியராகிய வீரமாமுனிவர் ஓர் உரோமன் கத்தோலிக்க மதகுரு. இவர் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் கற்று சதுரகராதி, தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், அன்னையழுங்கலந்தாதி, அடைக்கல நாயகிக் கலம்பகம் முதலிய நூற்களை இயற்றினர். கி. பி. 1680 முதல் 1747 வரை வாழ்ந்தார்.

அறந்தாய் தந்தை சுற்றமுமற்
றனைத்தும் நீயே கதிநீயே !

பிறந்தாய் உலகிற் குயிரன்னாய் !
பிறந்தெம் துயரும் எம்பகையும்

துறந்தாய் எங்கள் சிறைதீர்த்தாய்
துகள்பூட் டியவீட் டுயர்வாயில்

திறந்தாய் இவையா வருமறியத்
திறன்செய் தருள் செய் திரங்காயோ.

—வீரமாமுனிவர்.

## குறிப்புரை

அறந்தாய் தந்தை-உம்மைத் தொகை; கதி-புகலிடம்; துறந் தாய்-அகற்றினாய்; துகள்-பாவம்; உயர் வாயில்-வினைத்தொகை; திறன்-இலக்கணப் போலி.

## (4) முதுமொழி மாலை

இஃது ஒரு இசுலாமிய காவியம். இசுலாம் மதத்தின் அருமை பெருமைகளைத் தமிழ் நாட்டினர்க்கு எடுத்துக் காட்டுவது. இதை இயற்றியவர் உமறுப் புலவர். இவர் எட்டையபுரம் சமத்தானப் புலவராயிருந்த கடிகை முத்துப் புலவரது மாணாக்கர்களில் ஒரு வர். கி. பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். சீறாப்புராணம் என்னும் சீரிய நூல் இவரியற்றியதாகும். இனி இவர் பாடிய பாடலைப் பார்ப்போம்.

அறநெறி வழுவாத் தவத்துறை வேந்தை
அருமறைப் பொருளினும் பொருளைத்

தரைதனில் இட்ட காமியம் உதவு
சற்குண கற்பகா டவியைக்

குறைவி லானந்தத் துறையிடத் தமர்ந்த
கொண்டலை லோக நாயகரை
மறைபுகழ்ந் தேத்தும் ஞான வாரிதியை
முகம்மதை என்று காண்குவனே.

—உமறுப் புலவர்

### குறிப்புரை

அறநெறி-அறம்+நெறி. இட்ட காமியம்-நினைத்த பொருளை நினைத்தபடி பெறும் பேறு; கற்பகாடவி-கற்பகம்+அடவி, அடவி-காடு; கொண்டல்-மாரி; வாரிதி-கடல்; ஞானவாரிதி-உருவகம்.

### (5) திருவருட்பா

இறைவன் திருவருளைப் பெறுவதற்குப் பாடிய பாக்களைக் கொண்ட நூல் என்று பொருள்படும். இவர் பாடல்கள் அனைத்தும் இனிமையும் எளிமையுமுடையனவாய், கேட்டோர் பிணிக்கும் தகையனவாய், ஊனையும் உயிரையும் உருக்குபவை யாய் உள்ளன

இதன் ஆசிரியராகிய இராமலிங்க அடிகள் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூரில் பிறந்தார். தந்தை இராமையா பிள்ளை; தாயார் சின்னம்மையார். இளமையில் தாய் தந்தை யரை இழந்து, தமையனாரால் ஆதரிக்கப்பட்டு, பின் துறவை மேற்கொண்டார். சிதம்பரத்தில் சிலகால் தங்கிப் பின் வடலூர் சென்று, அங்கு சத்திய தருமச் சாலையும், ஞான சபையும் நிறுவி, பொது நோக்க நெறியாகிய சமரச சன்மார்க்கத்தை மக்களிடையே பரப்பி வந்தார். தமது ஐம்பதாவது வயதில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

இவரியற்றிய நூற்கள் :—திருவருட்பா, சீவகாருண்ணிய ஒழுக்கம்; மனுமுறைகண்டவாசகம், சன்மார்க்க விண்ணப்பங்கள் முதலியன.

## தாயும் தந்தையும் நீயே

தாயுந் தந்தையுந் தெய்வமுங் குருவுந்
தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்,
ஆயு மின்பமு மன்புமெய் யறிவு
மனைத்து நீயென வாதரித் திருந்தேன்,
ஏயு மென்னள விரக்கமொன் றிலையே
லென்செய் வேனிதை யார்க்கெடுத் துரைப்பேன்,
சேயு நின்னரு ணசையுறுங் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழொளி விளக்கே.

—இராமலிங்க அடிகளார்.

### குறிப்புரை

ஆதரித்து-விருப்புடன்; ஏயும்-பொருந்தும்; நசையுறும்-விரும்பும்; இடை-ஏழன் உருபு; திகழ்-விளங்குகின்ற.

## (ஊ) தமிழும் தமிழரும்.

தமிழனின் தனிச்சிறப்பைக் குறித்து நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் இயற்றிய பாடல்களே அடியில் காணப்படுவன. இக்கவிஞர் கி. பி. 1888ஆம் ஆண்டில் வேங்கடராம பிள்ளை என்பாருக்கும், அம்மணி அம்மாளுக்கும் சேயாகத் தோன்றியவர். காவியப் புலவராதலோடு ஓவியக் கலைஞராகவும் புகழ் பெற்றவர். நமது நாட்டில் சுதந்திரப் போராட்டம் நடந்தபோது அழகிய பாடல்கள் மூலம் மக்களுக்கு தேசீயவுணர்ச்சியை யூட்டியவர். இவர் பாடிய, "கத்தியின்றி இரத்தமின்றி யுத்த மொன்று வருகுது," எனும் பாடலை அறியாதார் யாதொன்றும் அறியாதாரே. காந்தியடிகளிடம் நீங்காத அன்பு பூண்டவர். சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டு அரசாங்கம் இவரை அரசாங்கக் கவிஞராக ஏற்றுச் சிறப்பித்தது. இவர் எளிய, இனிய நடையில் கவிதைகள் பல இயற்றியுள்ளார். உரைநடை நூற்களும் பல இவரால் எழுதப்பட்டுள்ளன.

### (1) தமிழன் இதயம்

தமிழன் என்றொரு இனமுண்டு;
தனியே அவர்க்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை மொழியாகும்;
அன்பே அவனுடை வழியாகும்.
மானம் பெரிதென உயிர்விடுவான்;
மற்றவர்க் காகத் துயர்படுவான்;
தானம் வாங்கிடக் கூசிடுவான்;
'தருவது மேல்' எனப் பேசிடுவான்.

—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

### குறிப்புரை.

மானம் பெரிதன உயிர்விடுவான் – "உயிர் நீப்பர் மானம் வரின்," எனும் குறட் கருத்தைத் தாங்கியுள்ளமை அறிக.

தருவது மேல் – 'கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று' எனும் புறநானூற்றுக் கருத்தை வலியுறுத்தும்.

### (2) தமிழின் இனிமை

தற்காலத்திய தலைசிறந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவராக விளங்குபவர் கவிஞர் பாரதிதாசன். கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரிடம் தமக்குள்ள அளவற்ற அன்பைக் காட்டுதற்காக இப்பெயரைக் கொண்டுள்ளார். இவர் இயற்பெயர் கனக சுப்புரெத்தினம் என்பது. முத்தமிழிலும் துறை போகியவர் என்று யாவராலும் பாராட்டப்படுபவர். இவர் எழுதிய கவிதைகள் யாவும் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. நம் பாடப் பகுதியில் வரும் பாடல், அவரது கவிதைத் தொகுதியில் தமிழின் இனிமை கூறும் பகுதியில் காணப்படுவதாகும்.

கனியிடை ஏறிய சுளையும்—முற்றற்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,

நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

—கவிஞர் பாரதிதாசனார்

குறிப்புரை

முற்றற்கழை – முற்றிய கரும்பு; பனி – குளிர்ந்த; பாகு – சர்க்கரை காய்ச்சிய குழம்பு; நனி – பெருமை.

(3) கொடி வணக்கம்

ஒரு நாட்டின் குறிக்கோள், பண்பு, இலட்சியம் ஆகியவற்றை எடுத்துக்காட்டுவது அந்நாட்டின் கொடி. நாட்டின் தலைசிறந்த சின்னமாக அது மதிக்கப்படுவதால், அதற்கு செய்யப்படும் இழிவு நாட்டுமக்கள் அனைவருக்கும் செய்யப்பட்ட இழிவாகக் கருதப்படும். கொடியின் காரணமாக இவ்வுலகில் ஏற்பட்டுள்ள போர்கள் எண்ணிலடங்கா.

நம் மூவர்ணக் கொடி, சுதந்திர இந்தியாவின் சின்னமாக விளங்கிவருகிறது. சுதந்திரப் போராட்டம் நிகழ்ந்த காலை இம்மூவர்ணக் கொடியின் மானங்காத்து உயிர்நீத்த பெரியார்கள் பலர். இக்கொடியில் காணப்படும் மூன்று வண்ணங்களின் தன்மைகளையும், நடுவண் பொறிக்கப்பட்டிருக்கும் சின்னத்தின் குறிக்கோளையும் செவ்வனே சித்தரித்துக் காட்டுகின்றது அடியில் வரும் பாடல்.

இதன் ஆசிரியர் திருவாளர் T. முத்துக்கண்ணப்பராகும். தமிழ்ப்பணியே தலைசிறந்த பணியாகக் கொண்டு பல பள்ளிகளில் தமிழாசிரியராக பணியாற்றியுள்ளார். இறுதியில் சென்னை கலைக் கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். நாட்டுக்குச் சேவை செய்தல் வேண்டும் என்னும் கருத்தால் உந்தப்பெற்ற இவர் ஆசிரியப் பணி இதற்கு இடையூறெனக் கண்டு அதனை விடுத்து, முழுமூச்சுடன் நாட்டின் நலத்திற்காகப் பாடுபடுபவர். தற்சமயம் தமிழ்நாட்டு மேற் சபையில்

அங்கத்தினராக இருந்து, தமிழ் மொழிக்கும், நாட்டிற்கும் அருந் தொண்டு புரிபவர். தற்காலத் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவர். தேசியக் கொடியைக் குறித்துத் தீந்தமிழில் அவர் தொகுத்துள்ள சிறப்புமிக்க பாடலைச் சிறிது சுவைத்துப் பாருங்கள்.

பாரத தேவியின் மணிக்கொடி பாரீர்
பக்தி யுடன்இதை வணங்குவம் வாரீர்!

1. வீரர்கள் உடல்பொருள் ஆவியும் கொடுத்து
வெடிதடி யடிசிறை யனைத்தையும் பொறுத்து,

தீரமாய் பாரத தேவிக்கே உழைத்துத்
திகழ்வதைக் குறித்திடும் திருக்கொடி காணீர்!

......பாரத

2. பலவளம் அன்பு(இ)வை காட்டிடும் பச்சை
பரிசுத்தம், உண்மையைக் காட்டிடும் வெண்மை

நலமுறு தியாகத்தைக் காட்டிடும் காவி
நடுநிலை, அறநெறி காட்டிடும் சக்ரம்

......பாரத

3. வானுற வோங்கி வளம்பெற வீசி
மாண்புற ஆடி வளைந்து குலுங்கி

ஆனந்த மாகப் பறந்திடும் நம்தம்
அன்னை மணிக்கொடி வாழிய வென்றே.

—முத்துக் கண்ணப்பர்

### குறிப்புரை

மணி – அழகிய; வெடிதடி அடிசிறை, உம்மைத்தொகை திகழ்வது – விளங்குவது. அறநெறி – அறம் + நெறி. உற – பொருந்த; என்றே – ஏகாரம் அசைநிலை.

# உரை நடைப் பகுதி

## 1. மறைமலை அடிகளின் பண்பும் சிறப்பும்

(புலவர் அரசு)

இடையறாத் தமிழ்ப் பணியாலும் சைவத் தொண்டினாலும் மறைமலை அடிகளார் தம் உணவு, உறக்கம் முதலியன பொதுவாக எல்லோருக்கும் குறித்த போதில் நடைபெறுவதில்லை. எனினும், உடல் கெடாவண்ணம் உணவிலும் பணியிலும் ஒரே முறையான ஒழுங்கை வைத்திருந்தனர். அவ்வொழுங்கு நமக்கு வழிகாட்டியாகுமென்பதில் ஐயமில்லை.

### அடிகளின் அன்றாட வாழ்க்கை ஒழுங்குகள்

அடிகள் காலையில் எட்டு மணிக்குத்தான் துயிலிலிருந்து எழுவார். பதினொரு மணி வரை காலைக் கடனும், நீராடுவதும், இறை வழிபாடுமாக நடைபெறும். பிறகு கஞ்சியுணவு கொள்வார். அவ்வுணவுடன் பக்குவப்படுத்தப் பெற்ற திராட்சை முதலிய பழ வகைகளைச் சுவைத்துண்பார். கஞ்சியெனினும் சிறிது சிறிதாக ஆற அமர இருந்து பருகுவார். சில நாட்களில் இட்டலியும் உண்பார். காலை சிற்றுணவு முடிந்தவுடன் பொது நிலைக் கழக மாளிகையைச் சுற்றி உலவி வருவார். பாதக்குறடு இட்டே நடப்பார். அரை மணி நேரம் உலவிய பிறகு, இருக்கையில் அமர்ந்து நூலாராய்வார்; கடிதம் எழுதுவார்; நூல் எழுதுவார். அடிகளின் இருக்கையும் மேசையும் தூயவைகளாக அழகுற இருக்கும். மேசையின் மேல் நூல்கள் நிரலே அணிபெற வைக்கப்பெற்றிருக்கும். ஊற்றுப் பேனாவும் தனக்குரிய நிலையிலே அமைந்திருக்கும். அடிகள் எழுதவும் படிக்கவும் மாளிகையின் கீழ் நிலையிலும் மேனிலையிலும் தனித்தனி இருக்கைகளும் மேசையும் எழுது கோல்களும் இருக்கும். ஓய்வாயிருக்கும்போது சாய்ந்து படுக்கப் பஞ்சு மெத்தையோடு கூடிய சாய்வான நாற்காலி முற்றத்திலே இருக்கும்.

அடிகளின் பகலுணவு இரண்டரை மணிக்கு மேல் மூன்று மணிக்குள் நடைபெறும். அரிசி நன்றாக மலர்போல வேக வேண்டும். அடிகட்கு விருப்பமானது பொன்னாங்கண்ணிக் கீரையும், மிளகு நீருமே. இந்துப்பே சேர்ப்பார். மிளகாயும் புளி யும் சேர்க்கமாட்டார். விருப்பமானவை ஆங்கிலக் கறிகாய்களும் பட்டாணியும் கோசுக் கீரையுமே. மிகவும் விழைந்து சேர்த்துக் கொள்வது எலுமிச்சம்பழத் தொக்கு. (எலுமிச்சைச் சாற்றில் இந்துப்பு, மிளகுத்தூள், பெருங்காயம், வெந்தயம், மஞ்சள் தூள் ஆகியவற்றை அளவாய்ச் சேர்த்து பக்குவஞ் செய்தது) உணவு சிறிதே உட்கொள்வார். ஆனால், ஆர அமர உண்ண அரைமணி நேரமாகும். இவ்வாறு உண்ட பிறகு, சிறிது ஓய்வு கொண்டு உறங்குவார். பிறகு நூல்களுக்கு உரையெழுதுவார். ஆங் கில நூல்களின் இதழோரத்தைப் பிரிப்பார். மாலை ஆறு மணிக்கு இஞ்சி நீர் பாலுடன் கலந்து இனிப்புச் சேர்த்துப் பருகுவார்; உலாவுவார்; இறை வழிபாடு செய்வார். இரவு எட்டு மணி முதல் பத்து மணி வரை எழுதுதலும் நூலாராய்தலுஞ் செய்வார். பதினொரு மணிக்கு 'எனிமா' வைத்துக் கொள்வார். பிறகு வேது பிடிப்பார். இரவு ஒரு மணிக்கே சிற்றுண்டி கொள்வார். பால் பருகுவார். படுக்கைக்குச் செல்ல இரண்டு மணியாகும். துயின்றெழுந்தவுடன் கண்ணாடியின் எதிரில் நின்று உள வுறுதிக்கான மொழிகளை நவில்வார். ஆடையைக் காலை மாலை இரு போதும் மாற்றுவார். எண்ணெய் கலந்த சிற்றுண்டிகளைத் தொடமாட்டார். நெய்யே யாவுக்கும் பயன் படுத்தல் வேண்டும். தாளிப்பும் நெய்யே. கடுகு சேர்க்க மாட்டார். காப்பி, தேயிலை முதலிய குடி வகைகள் அவரிடம் அணுகா. பசும்பாலும் நெய் யுமே சாலவும் செலவை மிகுதிப்படுத்தும். எனினும் உடலை நலனுறப் பேணும் வகையில் மிகவும் விழிப்பாகவேயிருப்பார் மறைமலையார். தாம் சொற்பொழிவு செய்யச் செல்லும் இடங்களி லும் இவ்வகை உணவையே செய்யவேண்டுமென அறிக்கை விடுப்பார். மக்கள் ஒவ்வொருவரும் தம் உடலுக்கான உணவு வகையறிந்து காலமும் அளவுமறிந்து உண்டால் 'யாக்கைக்கு

மருந்தென வேண்டாவாம்' என்பது அடிகளின் கடைப்பிடி யாகும்.

அடிகள் ஐம்பதாண்டுகளாக நாட்குறிப்பெழுதும் வழக்கமுடை யர். ஒவ்வொரு நாளும் நூல் நிலையத்திலுள்ள நூல்களைக் குறிப்பிட்ட அளவு எடுத்துத் தூசி தட்டி வைப்பது அடிகளுடைய வேலையே. தாம் எழுதி அச்சடித்து வைக்கப்பெற்றிருக்கும் நூல் களை வெளியே போக்குவதற்காக அவற்றை ஒழுங்குறக்கட்டி வைக்க மட்டும் வீட்டிலுள்ளவர்கள் துணை புரிவார்கள். எழுத வேண்டிய கடிதங்களைத் தம் கைப்படவே எழுதுவார். அடிகளை ஒழுங்குற உழைக்கும் ஒரு பொறியெனவே உரைக்கலாம். ஒவ் வொரு நாளும் விளக்குகளைத் தம் கைப்படத் துடைத்து வைப் பதற்கும் அலுப்படையார். கடிகாரம் சாவி கொடாமலும் 'காலண்டரில்' அன்றுடம் நாள் மாற்றாமலும் அடிகள் காலத் தில் இருந்ததில்லை. வீடுகளில் தூசி தும்புகள் இரா. தோட்டத் தில் இலைகள் உதிர்ந்து கிடவா. வீட்டினுள் பொருள்கள் நிலை மாறியிரா!

சொற்பொழிவு செய்யப்போகும் இடங்களுக்கு, முன்னமே அஞ்சல் மூலம் தமக்கு வேண்டியவற்றை ஒழுங்குற அமைத்து வைத்திருக்கத் தெரிவிப்பார். புகைவண்டி நிலையத்திற்குக் குறிப் பிட்ட காலத்திற்கு முன்னரே செல்வார். எடுத்துச் செல்லும் பொருள்களை ஒழுங்காக எண்ணியே எடுத்துச் செல்வார். சொற் பொழிவு செய்யச் செல்லுமிடங்களில் தம்மை வரவேற்பவர் களிடம் தம் பொருள்களை அருகிலிருந்து எண்ணி ஒப்படைத்த பிறகே, ஊர்தியில் அமர்வார். தம் பொருள்களைக் கண்ணுங் கருத்துமாகக் காப்பதில் அடிகளுடன் ஒப்பிடத்தக்கவர்கள் இலர் எனலாம். தம்மிடம் உரையாடவோ, நூல் நிலயம் பார்க்கவோ வருவோரிடம் அன்புடனும் மதிப்புடனும் நடந்து கொள்வார். இங்ஙனம் அடிகள் நடந்துகொள்வது நமக்கெல்லாம் வழி காட்டியாகும்.

### அடிகளின் புற அகத் தோற்றங்கள்

பொன்னையுருக்கி வார்த்தாலனைய சிவந்த மெய்யும், உயர்ந்த இனிய காட்சியும், புன்முறுவலும், அறிவொளி ததும்பும் மலர்க் கண்களும், கத்தரித்துவிட்ட முடியும், காவியுடையும், நிமிர்ந்த நடையுமாக அடிகளின் 'எழிலின் மிக்கதோர்' தோற்றத்தினைக் கண்டோர் கவர்ச்சியுறுவர். சிவராசயோக பிராணயாமத்தினாலும் அடிகளின் உடல் முதுமையினும் கட்டு விடாமல் இளமை தவழ்ந்தது. கவலையற்ற நிலையினால் முதுமையினும் இளமைத் தோற்றம் பெற்றிருப்பதாக பிசிராந்தையார் கூறியது இங்கு நினைவு கொள்ளத் தக்கது.

இங்ஙனம் காணும் புறத்தோற்றம் போலவே அகத்தோற்றமும் அடிகட்கு இனியது. அடிகளின் அகத்திலே அன்பும் அருளும் அழகுற மிளிரும். அங்ஙனமே உரையினும் அறிவு மணிகள் ஒளிவிடும்; இனிது தவழும். குயிலனைய தீங்குரலால் வெளிவரும் மொழிகளினும் சுவை ததும்பும் இசை தவழும் பாக்களினும் பேரவை கட்டுண்ட நாகமென அசைவின்றியிருக்கும்.

### அடிகளின் சிறப்பியல்புகள்

அடிகளை நமக்கு நினைவுகூறச் செய்வன அவருடைய சிறப்பியல்புகளே. 'ஞானத்தின் திருவுரு' ஆகிய அடிகள் சைவம், வைணவம், சமணம், புத்தம், கிறித்தவம், இஸ்லாமியம் என்னும் பல்வேறு சமயங்களையுந் துருவி ஆய்ந்த பேரறிவினர். எதனையும் ஆராய்ந்து தவறுதலின்றி விளங்குமாறு கூறுந்திருவினர். தாம் கண்ட முடிபினை யாவர்க்கும் அஞ்சாது நவில்வார். அடிகள், 'சொலல் வல்லர், சோர்விலார், அஞ்சார். அவரை இகல் வெல்லல் யார்க்கும் அரிது.' இந்நிலைக்குப் பிறரெவரையும் அடிகட்குவமை கூறல் ஒவ்வாது. அடிகளுடைய மனமொழி மெய்கள் ஒழுங்கும் கட்டுப்பாடும் உறுதியும் நேர்மையுந் தெளிவும் பொருந்தியிருக்கும் என சுருங்கக் கூறலாம்.

### பெருந்தன்மை

'கல்வி தறுகண் இசைமை கொடையெனச்—சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே' என்பர் தொல்காப்பியர். தொல்காப்பியமே அடிகள் மேற்கோளாகக் கொள்ளும் தமிழ்ப் பெருநூலாகையால் அம்முறையே அடிகளின் பெருமிதம் ஈண்டு சுருங்கக் கூறப்படுகிறது.

### கல்வி

தமிழினை யெழுத்தெண்ணிப் படித்தவர் அடிகளே. 'தன்னெஞ்சம் ஏடெனக் கற்றவர்'. சிவஞான போதத்தில் 12 நூற்பாக்கள்; 40 வரிகள்; 216 சொற்கள்; 624 எழுத்துக்கள் என எண்ணிப் பார்த்துக் குறிப்பிட்டவர் அடிகளேயென்பர். இவ்வாறே பிற நூல்களினும் சிறப்புடையவற்றை நன்கு நெட்டுருச் செய்தவர். அங்ஙனமே ஆங்கிலத்தினும் புலத்துறை முற்றியவர். ஆங்கிலப் புலமையிலே பட்டம் பெற்றவர்களெல்லோரும் அடிகளைப்போல நன்கு விழுமிய கட்டுரையெழுத வல்லவரல்லர் எனல் மிகையன்று. வடமொழியினும் விழுமிய அறிஞர். திருக்காட்டுப் பள்ளியென்னுந் திருத்தலத்தில் மறையுணர்ந்த அந்தணர்கள் முன்னர் 'சிவலிங்க வழிபாடு' என்னும் பொருள் பற்றி வடமொழி மேற்கோள் காட்டிப் பேசியபோது அடிகள் கூறியவை 'வேதத்தின் உண்மைப் பொருள்கள்' என மறையவர்கள் பாராட்டியதாகக் கூறுவர். இங்ஙனம் மும்மொழியிலும் துறைபோய பேரறிஞர் அடிகள்.

### தறுகண்மை

இங்ஙனம் தாங்கற்றுத் தெளிந்தவற்றை உலகிற்குணர்த்துவதையே கடைப்பிடியாகக் கொண்ட அடிகள், அவற்றை வெளியிடுவதற்குச் சிறிதும் அஞ்சுதல் செய்யார்.

தமிழகம் அடிகள் காலத்தில், 'ஆன்றோர் செய்த நூல்களிற் குற்றங்குறை யேதும் இரா. நமக்குக் குற்றமாகத் தோன்றுவன நம் அறிவிற் கெட்டாதென என்று கொளல் வேண்டும்.' எனும் ஒரு வகையான நெறியிலேயே சென்றது.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு"

என்று திருவள்ளுவர் கூறிய மெய்ம்மொழியைச் சிறிதும் சிந்தித்திலது. ஆராய்வோரையும் புறம் பழித்துப் பொருந்தா மொழிகளால் தாக்கும் புன்மையது. இத்தகைய உலகில் அடிகள் தாங்கண்ட முடிவுகள் பல முன்னோர் கூறிய மொழிக்கு வேறாக இருத்தல் கண்டார். இவற்றை வெளியிட வேண்டு மெனத் துணிந்தார். நாற்றிசையினுமிருந்து வருந்தாக்குதல் களைப் பொருட்படுத்தாமல் வெளியிட்டார். பலர் மறுத்தனர் அவற்றிற் கெல்லாந் தக்க விடையிறுத்துத் தங்கோள் நிறீஇயினார்.

அவற்றுள், முதற் குறள் வாத நிராகரணம், முனிமொழிப் பிரகாசிகை என்பவைத் தம் ஆசிரியர் சோமசுந்தர நாயகர் சார்பில் அடிகள் தம் கட்டிளமைக் காலத்தே வரைந்த கன்னித் தமிழ் மறுப்பு நூல்கள்.

சோமசுந்தரக் காஞ்சியாக்கத்தின்கண் ஆனந்தக் குற்றம் உண்டெனத் திருமயிலை திரு. சண்முகம் பிள்ளை, திரு. நா. கதிரைவேற் பிள்ளை, திரு. வைத்தியலிங்கம் பிள்ளை முதலாயினார் நிகழ்த்திய தடைகளைத் தகர்த்து விடை தந்தனர்.

சேக்கிழாரிடம் பேரன்புடையார் அடிகள். எனினும், சிவபிரான் விடுத்த திருமுகப் பாசுரம் பெற்றவர் சுந்தரர் காலத்திருந்த சேரமான் பெருமாள் நாயனாரல்லர் என்றும், இறைவன் பலகை யிடுவித்தது திருநீலகண்ட யாழ்ப் பாணார்க் கன்று என்றும், சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரையுஞ் சங்கிலியாரையுஞ் மணந்தது முற்பிறப்பில் திருக்கைலாயத்திலே நிகழ்ந்த காம நோக்கினால் என்று கூறுவது பொருத்தமில்லை என்றும், பல இடைச்செருகல்கள் திருத்தொண்டர் புராணத்தில் உள்ளன என்றும் அஞ்சாது வரைந்துள்ளனர்.

சைவத்தைத் தம் உயிரென ஓம்புவோர் அடிகள். வட நாட்டிலே காசி, அரித்துவாரம், டேராடூன், மதுரை, பிருந்தாவனம்,

பம்பாய் முதலிய இடங்களில், ஆங்கிலத்திற் சைவ சமயச் சொற்பொழிவுகள் செய்து சமயக் கொள்கையை நிறுவியவர்; ஆரிய சமரசத்தைச் சார்ந்த திரு. பால முகுந்தன் என்பவருக்குச் சிவலிங்க வழிபாட்டை விளம்பி, ஆரிய சமாசிகள் சிவலிங்க வழிபாட்டைப் பழியாமற் பாராட்டச் செய்தவர். எனினும் சைவ சமய நூல்களில் உரைகண்ட பெரியார்கள் வடமொழி வேதமே சைவ சமயத்தின் பிறப்பிடம் என்பதனையும் சிவஞான போதம் வடமொழியின் பெயர்ப்பெனவுங் கூறி வருவதை மறுத்துப் 'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' என நிறுவினவர். அடிகளின் கோளை மறுத்து வந்த மறுப்புக்களை மறுக்கும் முகத்தான், 'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா' 'சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்,' 'சீர்திருத்தக் குறிப்புக்கள்,' 'பண்டைத் தமிழர் ஆரியர்' என்பன போன்ற கட்டுரை நூல்களை வரைந்து தங்கோள் நிறுவினர்.

இனி, இக்கால மறுமலர்ச்சியக்கத்தார் சிலர் பல்வகைச் சமயங்களிலும் உள்ள உண்மை நெறிகளை யோராது போலிப் புராணக் கதைகளையே சமயமெனக் கொண்டு அவற்றைப் பழிப்பதைக் கண்டித்து 22—6—1928இல் நடைபெற்ற கூட்ட மொன்றிற் பேசியுள்ளார்கள். இவ்வாறு இந்த இயக்கத்தார் புராணக் கொள்கைகளையே எடுத்துப் பழிப்பதையும் புராணத் தையே ஆதரவாகக் கொண்ட சைவர்கள் சிலர் புராணக் கொள்கையையே இறுகப்பிடித்துச் சாதியினாலும் மூடப் பழக்க வழக்கங்களினாலும் சைவ சமயத்தைக் கறைபடுத்துவதையும் கண்டு வருந்திய அடிகள் 'சைவ சமயத்தின் நெருக்கடியான நிலை' என்னுங் கட்டுரை யொன்றையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

இங்ஙனம் அஞ்சாமல் தங்கோள் நிறுவுவதில் அடிகளுக்கு நிகராவார் ஒருவர் இற்றை நாளில் இலர். அடிகளின் ஆசிரிய ரான சோமசுந்தர நாயகரிடம் பழகியதாலும் சிவஞான முனிவரின் மறுப்பு நூல்களை யெல்லாஞ் செவ்விதிற் கற்றமை யாலும் இவ்விரு வகையானும் பெற்ற கல்வி கேள்வித் தெளிவினை

இவர் மறுப்புக்களிற் காணலாம். மற்றும், அடிகளின் மறுப்புரைத் தொடர்களிற் பலவும் வீறு கொண்டவைகளாகக் காணப் பெறும்; கிளர்ச்சியை ஊட்டும். இடையிடையே, 'நெகிழ்ந்துரையாடி இழுக்கினர் என்க' 'விடுக்கு மாறறியாது விழிக்கும் நீரார்' 'வெள்ளிடை மலையென விளங்கற் பாற்று' 'மைத்துனர் பல்கி மருந்திற் றெழியாத பித்தனென் றெள்ளப்படும்' 'வைரத் தூண் என நாட்டப்பட்டமை காண்க' 'உண்மையாதல் செல்லா தென்று கடைப்பிடிக்க' 'மிகப் பெரியதோர் ஏதமாம் என்க'— என்பன போன்ற வாய்பாடுகள் இனிமையாகக் காணப் பெறும்.

இனி, அடிகள் பொதுநிலைக் கழகம் நிறுவித் தமிழ் நாட்டிற்குப் பணிபுரிய விரும்பியவர். அதற்கேற்ற நன்கொடை நல்க வல்லாரை அண்மி அவர் வழி நின்று பெற்றிருக்கலாம். அடிகளின் பொதுநிலைக் கழகமும் அச்சகமும் நன்கொடைகளாலும் தம் உழைப்பிற் சேர்ந்த பொருளாலுமே நிறுவப் பெற்றதென அறிவோம். அறிவுக் கடல் வெளியீடும் சில மலர்கள் அங்ஙனம் சில அறிஞரின் துணை கொண்டே நடந்தன. எனினும், யாவரிடங் குற்றங்காணினும் அஞ்சாது மறுத்து நலம் விளைவிக்கும் நோக்கமுடைய அடிகள் நகர வணிகர் அற்றை நாளிற் செய்து வந்த சமயப் பணிகளிற் குறைகண்டபோது மறுத்தே வந்தனர்.

நம் நாட்டில் இறைவனை வழிபட அளவற்ற திருக்கோயில்கள் உள்ளன. ஆனால், வழிபடச் செல்வோர் அருகி வருகின்றனர். அங்ஙனஞ் செல்கின்றவர் தாமும் தூயவுள்ளத்துடன் வழிபட அறியாதவரே பெரும்பாலராயிருக்கின்றனர். இத்தகைய நாட்டில் இறை வழிபாடு சிறத்தல் வேண்டுமெனின் மக்களுக்கு இறை வழிபாட்டின் நலத்தையுஞ் சமய அறிவையும் ஊட்டுதல் வேண்டும். இங்ஙனமிருக்கவும் நகர வணிகர்கள் பழைய கோயில்களை இடித்துப் புதிய கோயில்கள் கட்டு வதிலும் பழைய கோயில்களிருக்கவும் புதிய இடங்களிற் கோயில்களெடுப்

பதிலும் என இங்ஙனம் கோயில் கட்டுவதிலேயே யீடுபடுவதைக் கண்ட அடிகள் தமிழ் வளர்ச்சிக்கும் சமய அறிவிற்குமாகப் பொருளைச் செலவிடுதலே இக்காலை செய்யத் தக்கது என அஞ்சாமல் அறிவுக் கடலில் வெளியிட்டனர். இது கண்ட இவரை நாத்திகரென இகழ்ந்தாருமுளர். பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டு விழாப் பேரவையிலே வெளிவந்த சீர்திருத்தக் கருத்துக் களையும் நோக்குக.

இங்ஙனம் தறுகண்மையுடையராய்த் தமிழினுஞ் சைவத் தினும் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் ஆவார் அடிகளார்.

---

## திருக்குறளும் பொது நோக்கமும்

(பேராசிரியர் ச. ஆறுமுக முதலியார்.)

கடவுள் திருமுன் அனைவரும் ஒத்தவரே என்னும் பொது நோக்கம் நம் நாட்டிலே பேசப்பட்டு, நகரங்களில் மட்டுமின்றிச் சிற்றூர்களிலும், காட்டுத் தீயை போலப் பரவி, மக்களிடையே உணர்ச்சியை உண்டுபண்ணிவரும் இக்காலத்தில் "பொது மறை" யாகிய திருக்குறளில், இந்நோக்கம் அமைந்திருக்கும் பான்மையை, நூல் முழுவதும் பொதுவாக நோக்கிக் கண்டறிவது சாலவும் பொருத்தமுடையதேயாம்.

இவ்வகைச் சுவைகள் எற்ற அளவிற்கலந்து ஒத்து இயங்குங் கால் ஒருவிதப் புதுச்சுவை தோன்றிச் சுவைப்போர்க்கு மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும். அதே போன்று ஒரு நாட்டிலே பல மக்கட்டொகுதிகளும் இனப் பிரிவுகளும் இருப்பினும், அவற் றிடையே ஒத்த உணர்ச்சியும் பொதுநோக்கமும் அன்பும் நிலவி ஒற்றுமை மிகுமாயின், அந்நாடு முன்னேற்றமடைந்து சிறப்புறும். பிறப்பினாலேயே உயர்வு தாழ்வு எற்படுகிறது என்றும், இனத் தாலும் குலத்தாலும் உயர்ந்தோர் தான் உயர்ந்தோர் என்றும் நினைக்கின்ற போலிக் கொள்கைகளும் போலி உயர்வும் பொது நோக்காளிக்கில்லை. ஆதலினால் பொது நோக்கம் மிகுந்த

நாட்டில், இனத்தாலும் குலத்தாலும் உயர்ந்தோர், தாழ்த்தப் பட்டோர், ஒடுக்கப்பட்டோர் என்ற வேற்றுமைகள் இல்லை.

''பொது நோக்கத்தை'' மக்களுக்குப் புகட்ட வந்த உலகத்துச் சான்றோர் பலரும், அவ்வுணர்ச்சி மக்களுக்குச் சொல்லளவில் மட்டுமின்றி, வாழ்க்கையிற் செய்து காட்டலிலும் உண்டாகும்படி யான பலவழிகளைத் தம் வாழ்க்கை வழியாகக் காட்டிச் சென்றுள்ளனர். ரஸ்கின், டால்ஸ்டாய், தாயுமான முனிவர், இராமலிங்க அடிகள் போன்ற பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்போர் இதனுண்மையைக் கண்டறிவர். உலகம் போற்றும் கவியரசராம் இரவீந்திரரும் காந்தியடிகளும் இவ்வழியிலே மக்களைப் பயிலுவித்துத் தம் அன்புச் சமயத்தால் உலக முழுவதையும் ஒன்றுபடுத்தி வந்துள்ளனர். பிறப்பு வேற்றுமைகளை அறவே ஒழித்து, எவ்வுயிரையும் தம்முயிர் போலக் கருதி, உயர்பதவி, செல்வப்பொருள் முதலிய அழிதன் மாலையவாம் போலிப் பொருள்களில் மனம் வையாது, பிறருக் குழைக்கும் பெருமை ஒன்றனையே ஒவ்வொருவரும், தத்தம் உலக வாழ்க்கையின் முடிந்த குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமென்று இப்பெரியார்கள் நமக்குக் காட்டும் வழியாகும். சுருங்கக் கூறின் பிறர் குற்றமே பார்த்தல், புறங்கூறல் முதலியன இன்றி, மனத்துக்கண் மாசிலராகித் தம்மின் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைத் தம்மாற் கூடிய வரையில் முன்னேற்ற முயற்சிப்பதே பொது நோக்கத்தின் அடிப்படையான கொள்கையாம்.

இத்துறையில் இறங்குபவர்களுக்கு நேரும் இடையூறுகள் பல விருக்கலாம். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தங்கள் கொள்கையைக் கொண்டு செலுத்தவேண்டும். மேலும், வெளிக்குப் பொது நோக்காளி போல் நடித்துப் பொது நோக்கத் தின் பெருமையைப் பிறர்க்குப் புலப்படும்படி மேடைகளிற் பேசித் திரிந்து, தமது வாழ்க்கையில் அதற்கேற்ற ஒன்றும் செய்யாது வாழும் போலித்தொண்டர்க்கு, ஈங்கு இடமில்லை. தாம் செய்யும்

தொண்டிற்குக் கைம்மாருகப் பயன் யாதொன்றையும் எதிர் பார்ப்பாரும் இதற்கு உரியரல்லர். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று கருதிய ஆளுடைய அரசரது தூய தொண் டுள்ளமே வேண்டற்பாலது. எனவே, இந்நிலைக்கு வேண்டுவன பிறர்க்கென வாழும் பெற்றியும், தனக்கென வாழாத் தன்மை யும், அவற்றை நடத்திக் காட்டுவதற்குரிய மனத்திட்பமும், இடுக்கண் அழியாமையுமாம். இவற்றை எல்லாம் ஊடுருவிச் செல்லும் அன்புடைமையும் வேண்டற் பாலதே. "அன்பின் வழியது உயிர் நிலை" யாகலின் எல்லா உயிர்களிடத்தும் அன்பில்லை யாயின், அவற்றிற்காகத் தாம் செய்யும் நற்செயலு மில்லையாம்.

இன்னும், பொது நோக்கமும் ஒழுக்க முடைமையும் பிரிக்க முடியாத ஒரு தொடர்பைப் பெற்றிருக்கின்றன. ஒன்றை யொன்று எப்பொழுதும் தழுவியே நிற்கும். சிறந்த ஒழுக்க முடையோர்கள் சிறந்த பொது நோக்காளிகளாகவும், சிறந்த போதுநோக்காளிகள் எல்லோரும் உயர்ந்த குணமேன்மையும் ஒழுக்கமும் உடையவர்களாவும் இருந்திருப்பதை நாம் அறி வோம். ஒழுக்கமுடைமையே உயிரினும் பெரிதாக ஒவ்வொரு வராலும் போற்றப்படுவது. தக்கார் தகவிலர் என்பது ஒருவரது பிறப்பினாலன்றி, ஒழுக்கத்தினாலேயே அறியப்படுமாதலின், நாம் வாழ்க்கையிற் செய்யும் செயல்களனைத்தும் நம் ஒழுக்க முடைமையின் வழியாகவே ஆராயப்பட்டுத் தகுதி உற்றன அல்லது தகுதி அற்றன என்று மதிக்கப்படுவனவாம். ஒழுக்க மேம்பாட்டையும் குணநலத்தையும் தவிர்த்து மக்களுக்கு உயர்ந்த அணிகலன்கள் வேறில்லை. அன்பு நெறியாகிய இல்லறத்தில் நின்று அன்பு ஒப்புரவுகளைச் செய்யும் பொது நோக்காளிக்கும், மனத்துக்கண் மாசிலராகி, அகப்பற்று புறப் பற்றுக்களைக் கைவிட்டு மெய்யுணர்வு விழைந்து எவ்வுயிரையும் அருட்கண் கொண்டு பார்க்கும் முதிர்ந்த அருள் நெறியில் நிற்கும் துறவுள்ளங்கொண்ட பொது நோக்காளிக்கும் பிறருக் கும் ஒழுக்கம் இன்றியமையாததாகும்.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்!"

என்பன போன்ற குறள்கள் இப்பொது நோக்க கொள்கைக்கு அடிப்படையானவை என்று கருதலாம்.

பொது நோக்கத்தின் தன்மையையும் நடைமுறையையும் பயனையும் தம் வாழ்க்கையில் உணர்ந்து நடத்திக்காட்டிய "நுண்மாண் நுழைபுலம்" உடைய பொது நோக்கப் புலவ ராகிய திருவள்ளுவரும் தம் பெருநூலில் தலைசிறந்த பொது முறையை விதந்தோதுகின்றனர். மேற்கூறிய பொது விதி களின் இன்றியமையாமையை வற்புறுத்தி, ஒழுக்கத்தின் விழுப்பத்தை எடுத்துக் காட்டி, இல்லற துறவற இயல்களில் அன்பு அருள் நெறிகளை அமைத்துள்ளார். இவ்வியல்களை முறையே படிப்போர் அன்பு அருள்கள் இல்லற துறவறங்களில் முறையே வளர்ந்து கொண்டே போய்ப் பயன் செய்வதை அறியாமற் போகார். முடிவில் சமுதாய சமய வாழ்க்கை களிலும் பொதுநோக்கம் அமைந்துள்ள பான்மையையும் தாமேயறிவர்.

தமிழ்நாடு செய்த தவப் பயனாய்த் தோன்றிய திருவள்ளுவர் உலகத்தோருக்கு ஒழுக்க முறை வகுத்த சான்றோர் வரிசையில் சிறந்த ஒருவராக வைத்து எண்ணப்படுகிறார் என்பது நாமறிந்த தொன்றும். உலகம் போற்றும் தம் பெருநூலில் ஆசிரியர் வகுத்துப்போந்த ஒழுக்கமுறை இன்னார் இனியார் என்ற வரை யறையின்றி யாவரும் கையாளுவதற்குரியதாய்ப் பொது நோக்கப்பார்வையோடு அருளிச் செய்யப்பட்டது. ஒழுக்க முடையோர் விழுப்ப மடைவர் என்பதனைத் தம் வாழ்க்கை

யிலேயே நடத்திக் காட்டிக் "கூடாவொழுக்க"த்திற் கண்டிக் கப்பட்ட போலித் துறவொழுக்கம், உலகத்தாரை ஏமாற்று வதற்கே உரியது என்பதனையும் உலகத்துக்குக் கற்பித்து "மனத்துக்கண் மாசில" ராகித், "குணமென்னும் குன்று ஏறிநின்ற" திருவள்ளுவர், அனைவரும் ஏற்றுக்கொண்டு கையாளுவதற்குரிய ஒழுக்கமுறையை வகுத்தது ஒரு வியப் பன்று.

தம் வாழ்க்கையில் தாம் பட்டறிந்தவற்றையே, "யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்," என்று சுரந்தெழும் அருள் மிகுதி யினால், திருவள்ளுவர் அனைவரும் உய்யுமாறு, ஒப்பற்ற ஒழுக்க முறையாகத் திருக்குறளை நமக்கு அருளிச் செய்தார் என்பதிற் படும் இழுக்கொன்றுமில்லை. சிறந்த ஒழுக்க முறை வகுத்த இக் காரணத்தால் இவரைத் தமிழ்நாட்டு சாக்ரடிஸ் என்று கொள்வாருமுண்டு.

தெய்வப் புலவர் அருளிய பொதுமறை உலகத்தெழுந்த ஒழுக்க நூல்கள் பலவற்றிலும் தலைசிறந்து விளங்குகிறது. உயரிய கொள்கைகளையும், இவர் தாம் கையாளுவதென்ற வரைறை யின்றி, உலகத்து மக்கள் எல்லோருமே ஒருங்கே ஏற்றுக் கொண்டு ஒழுகும் முறையையும் கொண்டுள்ள ஒரு நூல், எம் மொழியில் எழுதப்படினும் அது அனைவராலும் போற்றிப் படிக்கப்பட்டுப் பல்வேறு மொழிகளிற் பெயர்த்தெழுதவும் படுகிறது. இனம், குலம், சமயம், காலம், நாடு முதலிய பிரிவு களைப் பொருட்படுத்தாது, சிறந்த ஒழுக்க முறையை எல்லோருக்கும் பொதுவாக எடுத்துக் கூறி செல்வதே இதற் குரிய காரணமாகும். இக்காரணம் பற்றியே திருக்குறள் உலகோர் அனைவராலும் போற்றப்படுகிறது என்று கூறுவது மிகையாகாது பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் அமைந்த நம்மாசிரியர், கைம்மாறு கருதாது, தமக்கென வாழாது, பிறர்க் கெனவே வாழ்ந்த திருவள்ளுவர், தம் வாழ்க்கையிற் பட்டறிந்த வற்றையும் நினைத்த எண்ணங்களையும் கருத்துக்களையும்

பேசிய அறிவுரையாடல்களையும் அறிவுரைகளையுமே பிறரும் அறிந்துகொள்வான் வேண்டித் திருக்குறளில் பெய்து வைத் துள்ளாராதலின் இந்நூல் முழுவதும் பொது நோக்க மணம் வீசிக் கொண்டிருக்கிறது. நூலின் முதலிலிருந்து முடிவு வரையிலும் இம்மணமே உள்ளது. இல்லறம் நடத்தும் முறையும், தூய துறவறமாகிய சமயநெறியும், சமுதாய ஒழுக்க முறையும், இல்லறத்துக்கு முன்பு தலைவன் தலைவியர் மேற் கொண்டு ஒழுகிய களவு முறையும், அரசனும், அவனுடைய அமைச்சர்களும் பிற அங்கங்களும் மேற்கொள்ள வேண்டிய அரசியல் முறைகளும் இன்னோரன்ன பிறவும், சுருங்கக் கூறின் மக்கள் வாழ்க்கையின் ஒப்பற்ற முழுக் குறிக்கோளும் ஆசிரியரால் பொது நோக்கங்கொண்டே புகலப்படுகின்றன. தமது கால நிலையை ஒட்டியே, தாம் கூற வந்த செய்தியைத் திருவள்ளுவர் தமிழ்நாட்டார் மட்டுமின்றி உலகோரனைவரும் ஒப்புக் கொள்ளு மாறு பொது நோக்கம் ததும்பி ஊற்றெடுத்தோடி, அனைவரும் அள்ளிப் பருகி உய்யப் பொதுமறை எழுதியுள்ளார். அவர் வகுத்த ஒழுக்க முறை தமிழ்நாட்டோடு மட்டும் தன் செல்வாக்கை நிறுத்திக் கொள்ளாமல் உலகு முழுவதும் ஒரு தனிச் செங்கோல் ஓச்சி வருவது நம் மொழிக்குள்ள ஒரு பெருஞ் சிறப்பாகும். தமிழ் உலகிலே, தோன்றிய எத்தனையோ நூல்கள் அழிந்தும் உருத்தெரியாமல் மாறுபட்டும் போக, தன்னகத்தே கொண்டுள்ள பொது நோக்கப் பெருமையால், திருக்குறள் மட்டும் எறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்பிறையே போன்று நாள்தோறும், பெருமை குறையாது, மேன் மேலும் வளர்ந்து கொண்டே வந்து உலகத்தினர் அனைவர்க்கும் பயனைச் செய்து வருகிறது. இலத்தீன் போன்ற, பண்டைக்கால ஐரோப்பிய உயர்தனிச் செம்மொழிகளிலும், ஜெர்மன், பிரெஞ்சு போன்ற தற்கால ஐரோப்பிய மொழிகளிற் சிறந்த வற்றிலும், சிறப்பாக ஆங்கில மொழியிலும், தென்னாட்டு மொழிகளிலும், இந்தியிலும் இந்நூல் பெயர்த்தெழுதப் படுமாயின் இதன் பெருமையை யாரே கணித்தறிய வல்லார்?

வடமொழியிலும் இதன் மொழிபெயர்த்திருப்பதாகத் தெரிகிறது.

"எல்லாப் பொருளும் இதன் பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளுமில்லையால்"

என்னும் திருவள்ளுவ மாலையடிகள் இதன் பெருமையைத் தொகுத்துக் கூறுவன.

இனி இத் தமிழ் மறையின் பொதுத் தன்மையைப்பற்றிப் பிற புலவர்கள் கூறுவதென்ன என்று சில புறச் சான்றுகள் காட்டுவோம். பண்டு தொட்டு இன்று காறும் இதன் பொது நோக்கத்தைத் தமிழ்ப் புலவர்களும் பிறரும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் பலரிலும், M. ARIEL என்பார்.

"திருக்குறள் தமிழிலக்கியத்தின் தலைசிறந்த நூலாவதோடு மக்கட் சிந்தனையின் மிக உயர்ந்ததும் தூய்மையானதுமான வெளியீடாகும். திருவள்ளுவர், குலம், இனம், கொள்கை முதலியவற்றைக் கருதாது மனித இனம் என்பதொன்றையே குறிக்கோளாகக் கொண்டு நூல் இயற்றியுள்ள திறம் ஒன்றே எல்லாவற்றையும் விட மிகவும் வியக்கத்தக்கதாயுள்ளது. இவர், ஒப்புயர்வற்ற ஒழுக்க முறையையும் எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடிய நெறிகளையுமே வகுத்துள்ளார். மேலும், இவர் அறம் வாய்மையாகிய இரண்டையும் பிழிந்தெடுத்து, என்றும் பொன்றுக் கருத்தியல் முறையில் வெளிப்படுத்தியுள்ளார். இல்லற சமுதாய வாழ்வியல்களின் உயர்ந்த விதிகளை, ஒரே தொகுதியாக மக்களுக்கு வழங்கியுள்ளார்" என்று கூறியுள்ளது போற்றிப் படித்தற்குரியதாகும்.

"எனவே இச் சீரிய நூல் எக் குலத்தினர்க்கும் எந் நாட்டினர்க்கும் எச் சமயத்தாருக்கும் எக் காலத்தாருக்கும் பொருவாகிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாக இருக்கிறது." சில நூல்கள் தாம் எழுந்த காலத்து வாழும் மக்களின் கருத்தைக் கவரும் பொருள்

பற்றிக் கூறிச் செல்கின்றன. அந்தத் தலைமுறையில் வாழும் மக்கள் மறையவே படிப்பாரின்றி அவைகளும் மறைகின்றன. பிற்காலத்துத் தோன்றுவோரின் கருத்துக்களும் குறிக்கோள் களும் மாறிவிடுகின்றன. ஆனால் எக்காலத்துக்கும் பொருந் தக் கூடிய உறுதிப் பொருள்களைத் தெரிவிக்கும் நூல் முக் காலத்துக்கும் நின்று நிலவும். பிறவிப் பேறுகளாகிய அறம் பொருளின்பங்களையும் அவற்றின் வழியாக வீட்டின் திறத் தையும் தெரிந்து திருவள்ளுவர் செய்த நூல் "எக் காலத் திலும் மாறுப் பயன் தரும் மாண்புடை நூலாக விளங்கு கிறது." இதைக் "காலங்கடந்த நூல்" என்றே கூறிவிட லாம்.

இதைப் போன்றே திருக்குறள் குலப்பொது நூலாயும் விளங்குகிறது. நான்கு குலங்களாகிய பிரிவைப் பரிமேலழகர் தம் முரையிற் புகுத்திப் பலவிடங்களில் வலிந்து பொருள் கொள்ளினும் நான்கு குலங்களைப் பற்றியும் அவை தமிழ் நாட்டில் ஏற்றுக்கொள்ளத் தக்கவையென்றும் தம் நூலில் ஆசிரியர் யாண்டும் கூறினாரில்லை; அனைவரையும் பொதுக் கண் கொண்டு பார்க்கின்றார். இந்நூலுக்கு எல்லோரும் உரியர். இத்தன்மையைக் கீழ்க்காணும் திருவள்ளுவ மாலை வெண்பாக்கள் இனிது விளக்குகின்றன:—

1. "செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரியா ரல்லாதா ரில்." — வெள்ளி வீதியார்

2. "ஆற்றல் அழியுமென் றந்தணர் கணுன் மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல் சோரா தின்று." — கோதமனார்

காலஞ் சென்ற தமிழறிஞர் திருவனந்தைச் சுந்தரம் பிள்ளை யவர்களும்,

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்
தோர்கள்

உள்ளுவ ரோ மனுவாதி யொரு குலத்துக்கொரு நீதி"

என்று இந்நூலின் பொது நோக்கப் போக்கை இனிது விளக்கினர். உரையாசிரியராம் பரிமேலழகரும், "எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லோர்க்கும் பொதுப்படக் கூறுதல் இவருக்கு இயல்பு" என்கின்றார்.

இனி, இதன் சமயப் பொதுத் தன்மைக்கு ஒன்றிரண்டு புறச் சான்றுகள் தருவோம். அக்காலத்து, தமிழ்நாட்டுப் பல சமயங்களும் திருவள்ளுவரைத் தம் சமயத்தவர் என உரிமை கொண்டாடின. திருக்குறள் எல்லாச் சமயங்களுக்கும் இடங் கொடுத்தது, அனைவருக்கும் இது உரியது என்பதைக் காட்டுகின்றதன்றோ ?

கல்லாடமுடையார்,

"சமயக் கணக்கர் தம் மதிவழி கூறுது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்,"

என்றும், கல்லாடர், திருவள்ளுவ மாலையில்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றெனப வாறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி,"

என்றும் இதன் பொது நோக்கத்தை எடுத்துப் புகழுகின்றனர்.

புலவர் புராணமும்,

"நால்வர் சொல் சைவர் வேதம் நளிர்குரு கூரன்சொல்லைப்
போலவலார் சிலர் தாம் சொல்லும் பொருவில் பாகவதர்
வேதம்

வால் வளைபுலவும் வீதி மயிலைவள் ளுவன்சொல்
யார்க்கும்

இழ்மையை யகற்றி மேன்மை யருளுநல் வேதமாமே"

என்று முழங்குகிறது.

கிறித்துவரும் வரவர இதன் பெருமையை அறிய ஆரம்பித்த னர். தமிழ்க் கடலின் எல்லை கண்டவரும், திருக்குறளை ஆங்கில யாப்பில் மொழி பெயர்த்தவருமாகிய டாக்டர் G. U. Pope பாதிரியார் "எங்கள் ஏசுநாதர் மலைமேற் செய்த அறிவுரையின் எதிரொலியாகும் இத் திருக்குறள்," என்பர். இதில் எவ்வளவு உண்மை உளது என்று ஆராய்ச்சிக்குட் புகாமல், இதனின்றும் திருக்குறளின் பொது நோக்கமும் நன்கு புலப்படுவதை உய்த் துணர்வது நமது கடமையாகும். இவ்வாறு பலவகைச் சமயத்தி னரும் திருக்குறளைத் தம் நூல் என்று போற்றிப் புகழ்கின்ற தன்மையால் அவ்விழுமிய நூல் உலகிலுள்ள உயரிய சமயக் கொள்கைகளை எல்லாம் தன்னகத்தே அடக்கித் தனக்கு அங்கங்களாய் அமைத்துக்கொண்டு, அவையனைத்திற்கும் தலைமையாய் நிற்கும் தகுதி வாய்ந்த ஒரு தனி நூல் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

திருவள்ளுவர் காலத்துக்கு முன்னும், அக்காலத்தும் பொது நோக்கம் தமிழ்நாட்டில் மலிந்து, மக்களை உயர் நிலையில் வைத்திருந்தது. திருவள்ளுவருக்குப் பிறகும் நாளது வரையில் நம் நாட்டில் பல சமயங்களுக்கிடையே சமயக் குரவர்களும், பிறரும் தத்தம் சமய நெறியில் நின்றுகொண்டே, சமரசத்தைப் புகட்டி யுள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் திருவள்ளுவர் வழிகாட்டி யாய் இருந்தார் என்று கூறுவதாற்படும் இழுக்கென்னை? திரு வள்ளுவர் கருத்துக்களையும், தொடர் மொழிகளையும், "முன்னோர் மொழி பொருளேயன்றியவர் மொழியும் பொன்னே போற் போற்றுவம்" என்பதற்கிணங்க, பொன்னே போல் போற்றித் தம் நூல்களில் தழுவிக்கொள்ளாத புலவர்களும் உண்டோ? நம் நாட்டில் சைவ வைணவ சமயக் குரவர்களும், சித்தாந்த ஆசிரியர்களும் பிறரும் குறள்கள் பலவற்றைத் தம் நூல்களில் அமைத்திருப்பதற்குக் கணக்கற்ற எடுத்துக்காட்டுகளை நாம் காட்டலாம். அவருடைய விழுமிய பொது நோக்கக் கொள்கை கள் பின் வந்தோரால் தழுவிக் கொள்ளப்பட்டு, மக்களுக்குப் புகட்டப்பட்டன என்றும், பின் வந்தோர் கூறும் கொள்கைகளை

எல்லாம் வருமுன் காணும் வல்லமையால் திருவள்ளுவர் கண்டு வைத்தார் என்றும் நாம் ஐயமறக் கொள்ளலாம்.

பொது நோக்கமெனும் செல்வம் நிறைந்துள்ள களஞ்சிய மாகிய திருக்குறள் என்னும் தெய்வப் பனுவலைப் படிப்போரும், படிக்கக் கேட்போரும், மனமாற்றம் அடைந்து, தமக்கெனவே வாழும் தன்மையினின்று நீங்கி, பிறர்க்கென வாழும் பெற்றி யுற்று, உயர்ந்த பொது நோக்காளியாவரேல் நம்நாடு எவ்வளவு மேன்மையுறும்? ஆனால் இதைப் படிப்போர் எத்துணை பேர் உளர்? திருக்குறள் என்றால் என்ன? திருவள்ளுவர் யார்? என்று உணராத தமிழ் மக்கள் பல்லாயிரவர் நம் நாட்டில் இன்றும் உளர் என்பது யாருமறிந்ததொன்றாகும். நமது மொழி யில் சிறந்த பெறலரும் மணிகள் போன்ற நூல்களிருப்பதையும் அறியாராய், தாழ்ந்த, பிழை மலிந்த, பொய்க் கதைகளையும் சிற்றின்ப நூல்களையும், புனைந்தெழுதப்பட்ட பலப்பல புன்னூல் களையும் பாடங்களையும் படித்துப் படித்துப் போலி மகிழ்வெய்திப் பொது மக்கள் காலத்தை வீணாக்குகின்றனரே? இங்ஙனம் அறியாமை இருளில் தடுமாறியும் அழுக்குச் சேற்றில் புதைந்தும் கிடந்துழலும் நம் நாட்டு மக்களிடைக் கல்வி யைப் பரப்பி ஒழுக்கச் சீர்திருத்தத்திற்குரிய நூல்களிற் சிறப்பாகத் திருக்குறளின் அறவுரைகளை எடுத்துக் கூறச் சில பல அன்பர்கள் முன் வருவ ரேல், அவர்கள் செயல் பேருதவியாகுமன்றோ? நம்மனோர் தினந்தோறும் ஒரு குறளாவது கற்றுணர்ந்து அதன்படி ஒழுகினால் அது வாழ்க்கையில் மிகவும் பயன் படுமல்லவா?

திருக்குறள் அறிவைப் பொது மக்களிடைப் பரப்புவது சிறப்பாக இக்காலத்து நம் நாட்டுக்கு வேண்டப்படுவதொன்றும். இத்தொண்டு இப்பொழுது நாட்டுக்கு நல்ல பயனைச் செய்யும். தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், தீண்டாதோர் என்றெல்லாம் சமயத்தின் பெயரால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளவர்களும் முன் னேறி மேனிலை எய்த வேண்டுமென்று மேடைகளிற் பேசியும், செய்கையிற் செய்தும் வருகின்ற இந்நாட்களில் திருக்குறளின்

பொது நோக்கப் போக்கு அதற்குச் சாலவும் உதவுமென்று கூறவும் வேண்டுமோ? இது மேல் நிலையெய்திருக்கும் மக்களின் கடமையாகும். திருக்குறளை அனைவரும் படித்துப் பயனெய்தியும், படிக்காதோரும், படிக்கத் தெரியாதோரும் பிறகு அதைப் படித்தோர் கூறிப் புகட்ட அறிந்து அதன்படி நடந்து பயனெய்தியும் நம் நாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் இதன் அறிவுரை சென்றடையுமாறு, பிறமொழிகளிலும் இதன் கருத்தையும், கொள்கைகளையும் எடுத்தெழுதியும், இதைப்பற்றிப் பலபட ஆராய்ந்து, ஆராய்ந்து புதுக் கருத்துக்களைக் கண்டுபிடித்தும் இதன் மணம் உலகெங்கும் பரவும்படி செய்தல் நம்மனோர் கடமையாகும். இதன் பயனாகப் பொது நோக்கம் உலகெங்கும் தழைத்தோங்கி அதன் தண்ணிழற் கீழ் மக்கள் சென்றின்புறுவதே திருவள்ளுவருக்கு நாம் செய்யும் கைம்மாறு ஆகும். ஆனால், "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரி மாட்டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்று அறிவுறுத்தும் ஆசிரியர் கைம்மாறு கருதியோ திருக்குறளை உலகுக்கு வழங்கினர்?

---

## சமரச சன்மார்க்கம்

(திரு. வி. க.)

சமரசம் யாண்டுளதோ ஆண்டுச் சன்மார்க்கமும் உண்டு. சன்மார்க்கம் யாண்டுளதோ ஆண்டுச் சமரசமும் உண்டு. ஆகவே சமரசத்தைச் சன்மார்க்கமென்றும், சன்மார்க்கத்தைச் சமரசமென்றும் கொள்ளலாம்.

உலகிலுள்ள பன்மார்க்கங்கள் சமரசங் கூட்டாமையானும், சன்மார்க்கம் ஒன்றே சமரசங் கூட்டுதலானும், உலகம் சன்மார்க்கத்தைச் 'சமரச சன்மார்க்கம்' என்று வழங்கிவருகிறது. சன்மார்க்கத்தில் சமரசம் பொலிதலால், அதனைச் சமரசம் என்னும் அடையின்றிச் 'சன்மார்க்கம்' என்று கொள்வது சாலும்; 'சமரச சன்மார்க்கம்' என்று விளக்கமாகக் கோடலும் பொருந்தும்.

## பன்மையில் ஒருமை

"உலகம் பலவிதம்" என்பது பழமொழி. பலதிறப்பட்ட உலகில் சமரசம் எங்ஙனம் நிலவும் என்று சிலர் கருதலாம். "உலகம் பலவிதம்" என்பது எவரும் அறிந்ததொன்று. ஆனால் அப்பன்மை, ஒருமைச் சமரசத்தைக் கூட்டாது என்று கோடல் தவறு. உலகையும், உலகிலுள்ள பல பொருள்களையும் உற்று நோக்குழிப் பன்மைவழி, ஒருமை நிலவலையே, அவை அறிவுறுத்தல் காணலாம். நமது யாக்கையை எடுத்துக்கொள்வோம். பல உறுப்புகள் சேர்ந்த ஒன்றே யாக்கை என்பது. பன்மை உறுப்புகளிடை ஒருமை யாக்கை மிளிர்தல் கருதற்பாலது. பல செடி, கொடி, மரம் முதலியவற்றால் ஆக்கப்பட்ட ஒன்று, காடு என்று வழங்கப்படுகிறது. எனவே, பன்மையில் ஒருமை மிளிர்தலே நியதி என்க. அவ்வொருமை தேருது, பன்மையில் மட்டும் பார்வை செலுத்தல் இடர் விளைக்கும். ஆதலால் பன்மையில் ஒருமை காண்டலே அறிவுடைமை.

உலகை உற்று நோக்குவோம். உலகம், நாடு, மொழி, இனம் முதலியவற்றால் ஆக்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம். நாடு, மொழி, இனம் முதலிய பன்மைகளில் மட்டும் கருத்தைப் பதித்து, அதனதன் அளவில் சமரசங் கொண்டு, மக்கள் வாழ்வு நடாத்தப் புகுங்கால், பொறாமையும், போரும், பிணக்கும் நிகழ்கின்றன.

நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகள் இல்லாதொழியுமோ? ஒருபோதும் அவையில்லா தொழியா. அவையாவும் இயற்கையில் அமைந்திருக்கின்றன. அவை எங்ஙனம் ஒழியும்?

வேற்றுமையுள்ள மட்டும் பொறாமை, போர், பிணக்கு நிகழல் இயல்பு என்று சிலர் முடிவு காண்கிறார். அம் முடிவு பொருந்தியதொன்றன்று. யாக்கையில் உறுப்பு வேற்றுமைகள் இருக்கின்றன. இவ் வேற்றுமை கொண்டு, உறுப்புகள் ஒன்றோடொன்று பிணக்கின், யாக்கை நிலை என்னும்? யாக்கையின்

நலனுக்கு உறுப்புகள் யாவும் ஒன்றி உழைக்கின்றன. அவ்வுழைப்பால் அவ்வுறுப்புகளும் நலனுறுகின்றன. இவ்வண்ணம் நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமை கொண்டு, மக்கள் ஒருவரோடொருவர் பிணங்கிப் போரிடுவரேல், உலகில் அமைதி நிலவாது. அவ்வமைதியின்மை, பிணங்கிப் போரிடும் மக்கட்கும் இன்பமூட்டாது. மக்கள் பிணங்கிப் போரிடாது ஒன்றி வாழ்வரேல் அவர்களிடை இசைந்த இன்பம் செறியும்.

மக்கள் வாழ்வின் நோக்கம் என்னே? இன்பம் நுகர்வதன்றோ? வீண் போராலும் பிணக்காலும் எற்றுக்கோ பெறற்கரிய இன்பத்தை அருமை மக்கள் இழத்தல் வேண்டும்? வேற்றுமைகளிடையே ஒற்றுமை காணின் இன்பம் நுகரலாம். அவ்வொற்றுமையுணர்வு, வேறுபாடுகளால் போரையும் பிணக்கையும் உண்டுபண்ணாது; அவைகளிடை அன்பும் ஆர்வமும் உண்டுபண்ணும். ஆதலால், வேற்றுமையில் ஒற்றுமை காணவே மக்கள் முயலல் வேண்டும்.

### சத்மார்க்கம்

அவ்வொற்றுமை யுணர்வை உலகிற் கூட்டவே பல பெரியோர்கள் ஆங்காங்கே தோன்றிச் சன்மார்க்க போதனை செய்தார்கள். சன்மார்க்கம் என்பது, சத்தெனுஞ் செம்பொருளை யுணர்த்தும் மார்க்கமாகும். சத்-உண்மை அல்லது கடவுள்; மார்க்கம்-நெறி. உண்மை நெறி அல்லது கடவுள் நெறியே சன்மார்க்கமென்பது. இச் சன்மார்க்கமே உலகில் சமயம் என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகளில் நிலைபெறுக நின்று வேற்றுமை உணர்வில் பழுத்த மக்கள், சன்மார்க்க மெனுஞ் சமயத்தையும் கூறிட்டு, வேறுபடுத்திப் போர்களைக் கிளப்பினார்கள்.

### ஒரே கடவுள்

உலகிலுள்ள சமயங்கள் யாவும் சத்தெனுஞ் செம்பொருள் ஒன்றையே குறிக்கொண்டு நிற்கின்றன. அவ்வந் நாட்டார்,

தத்தம் மொழியில் கடவுளைப் பல பெயரால் போற்றுகிருர். அம் மொழி வேற்றுமையன்றிப் பொருள் வேற்றுமையில்லை. ஆங் காங்குத் தோன்றிய அருளாளர் அறிவுறுத்திய சன்மார்க்கம், பின்னை நாளில், அவரவர் பெயரால் பலப்பல சமயங்களாக வழங் கப்பட்டது. அப்பெயர் வேற்றுமைகள் உலகில் சமயப் போர்களாக முடிந்திருந்திருக்கின்றன. நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகளுள் சமயமும் ஒன்ருக கொள்ளப்பட்டது. மக்கள் அறியாமையால், பல சமயங்களைக் கற்பித்துக்கொண்டாலும், அச் சமயங்களின் உள்ளக்கிடக்கை ஒரு பொருளையே பற்றி நிற்றல் வெள்ளிடைமலே. இது குறித்து, ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்னும் நூலின் இறுதியில் சிறிது விரித்துக் கூறியுள்ளேன். விரிவு ஆண்டுக் காண்க. * போதிய ஓய்வு கிடைப் பின் சன்மார்கத்தைப் பற்றி விரிந்த நூலும் ஒன்று எழுத எண்ணியிருக்கிறேன்.

எந்நாட்டாரும், எம் மொழியினரும், எவ்வினத்தாரும், எல் லாரும் சத்தெனுஞ் செம்பொருளாம் ஒரு கடவுளையே பல்வேறு பெயரால் போற்றுகிருர். நாடு, மொழி, இனம் முதலிய வற்ருன் வேறுபட்டாற்போல வாழும் மக்களை, ஒற்றுமைப்படுத்த வல்லது சத்துக்குரிய மார்க்கம் ஒன்றே என்று அறுதியிட்டுக் கூறலாம். ஆதலால், நாடு, மொழி, இனம் முதலிய வேற்று மைகளில் ஒற்றுமை கண்டு, இன்பம் நுகர்தற்கு, மக்கள் சன் மார்க்கத்தைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டும். அவ் வொழுக்கத்தான் ஒருமை இன்பம் நுகரலாம்.

---

* ஈண்டுக் குறிக்கப்பெற்ற நூல் பின்னே எழுதப்பட்டது. அதன் பெயர் '' சமரச சன்மார்க்க போதம் '' என்பது.

## சத்தும் சன்மார்க்கமும்

### சத் விளக்கம்

சத்தெனுஞ் செம்பொருள் தோற்றக் கேடுகளின்றி, என்றும் ஒரு பெற்றியாயிருப்பது; எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. அதற்கு உடலில்லை; உறுப்பில்லை. அது மாற்ற மனங்கடந்து நிற்பது; சொலற்கரிய சூழலுடையது; எல்லாமாய் அல்லவுமாய் விளங்குவது; எல்லாவற்றையும் இயக்குவது. அஃதின்றி ஓரணுவும் அசையாது. அத்தகைய ஒன்றன் உண்மையை எங்ஙனம் உணர்வது?

### சத்தும் இயற்கையும்

கண்ணுக்குப் புலனாகும் இயற்கை வடிவங்களின் வாயிலாகவே அப்பரம் பொருளின் இருப்பை உணரல் வேண்டும். இயற்கையை ஆராய ஆராயச் சத்தெனுஞ் செம்பொருளின் உண்மை புலனாகும். ஓர் பேர் ஒன்றுமில்லா ஒன்றன் இருப்பை உணர்த்துங் கருவி, இயற்கை என்று சுருங்கச் சொல்லலாம். இயற்கையின் வாயிலாகவே சத்தெனுஞ் செம்பொருள் தன் அருட்டொண்டை நிகழ்த்தி வருகிறது. ஆகவே, சத்தை உணர்த்தும் மார்க்கம், இயற்கை. இயற்கை என்பது கருதற்பாலது. சத்தெனுஞ் செம்பொருட்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பை என்னென்று கூறுவது? அதை எழுத்தால் எழுதல் முடியுங்கொல்! சத்தெனுஞ் செம்பொருளாகிய இறைவனை எனது அப்பன் என்றும், இயற்கையை எனது அன்னை என்றும் யான் கொள்கிறேன்.

### செயற்கைச் சேறு

இயற்கையோடியைந்து வாழ்வு நடாத்தல் இறைநெறி நிற்பதாகும். இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தாது, செயற்கைச் சேற்றில் வீழ்வது இறைநெறி நிற்பதாகாது. இயற்கையோடியைந்து நிற்குமாறு படைக்கப்பட்ட மகன், நெறியல்லா நெறியாகிய செயற்கையில் வீழ்ந்து கிடத்தலால், அவன், தான் பிறந்த நாடு, தான் பேசும் மொழி, தனக்குரிய இனம் முதலிய கட்டுப்

பட்ட சிலவற்றைக் கடவுளாகக் கொண்டு, மற்ற நாடு, மொழி, இனம் முதலியவற்ருேடு பிணங்கி, இடரிழைத்து வருகிருன். ஒருவன், தான் பிறந்த நாடு, மொழி, இனம் முதலியவற்றில் சத்தெனும் செம்பொருளிருப்பது போல, மற்ற நாடு, மொழி, இனம் முதலியவற்றிலும் அப்பொருளிருத்தலே உணராமையால், அவன் வேற்றுமை உணர்வால் இடர்ப்படுகிருன். யாண்டும் அப்பொருளுண்மையை உணர்வனேல், அவன் இடர்ப்படாது இன்பம் நுகர்வன்.

**இயற்கையின் ஒருமையும், இயற்கையின் பன்மைக் கோலமும்**

சத்தெனுஞ் செம்பொருள் என்றும் ஒரு பெற்றியாய்த் திரிபு முதலிய மாறுபாடின்றியிருப்பினும், அதை யுணர்த்தும் கருவியாயுள்ள இயற்கை பல்வேறு வடிவாகப் பரிண மித்துக் காட்சியளிக்கிறது. பல நாடுகள், பல மொழிகள், பல வழக்க ஒழுக்கங்கள் முதலிய யாவும் இயற்கை அன்னையின் திருவிளையாடல்கள். பன்னுடு பன்மொழி முத லியன இயற்கை அமைப்புக்கள். இயற்கை யோடியைந்த வாழ்வு செலுத்துவோர்க்கு அப்பன்மை வடிவங்களின் பெருமை புலனுகும்.

**பன்மையின் மாண்பு**

''இயற்கை அன்னை பன்மை வடிவங்களாக என் காட்சியளிக் கிருள்? அதனுலன்ருே உலகில் போரும் பிணக்கும் எழுகின் றன?'' என்று சிலர் ஐயுறலாம். அப்பன்மை இல்லையேல் உலகம் நடைபெருது. மனிதன் கை, கால் உறுப்புக்களின்றித் திண்மையாக ஒரே பிண்டமாகப் பிறப்பனேல், அவனுல் என் செய்தல் இயலும்? இங்ஙனே பிறவும். மனிதனது ஒவ்வோர் உறுப்பும் தன் தன் கடனுற்றித், தனக்கும், தன்னுடைய முதலுக்கும் இன்பூட்டுவது போல அவ்வந்நாட்டவரும், மொழி யினரும், பிறரும் தத்தங் கடனுற்றித் தமக்கும் உலகிற்கும் இன்பூட்டல் வேண்டும். இதற்கு ஒருமையுணர்வு வேண்டற்பாலது என்று மீண்டும் நினைவூட்டுகிறேன்.

## இயற்கை வழி நிற்றல்

எவரெவரை இயற்கை எங்கெங்கே பிறப்பிக்கிறதோ, அவரவர் ஆங்காங்கே உள்ள வழக்க ஒழுக்கங்கட்கு இயைந்த வாழ்வு நடாத்துவது, இயற்கை அன்னையை வழிபடுவதாகும். ஆங்காங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ற வண்ணம், இயற்கை அன்னை, மொழி, பொருள் முதலியவற்றை வழங்கி இருக்கிறாள். அவ்வளவில் உள்ள நிறை கொண்டு வாழ்வது இயற்கை வாழ்வாகும். நிறை கொள்ளாது பேராசையால் மற்ற நாடுகளையும் பொருள்களையும் பற்றி வாழ விரும்புவது செயற்கை வாழ்வாகும். இதனால் இயற்கைக்கு மாறுபட்ட வினைகள் நிகழ்கின்றன. அவ்வினைகளால் ஏற்றத்தாழ்வும், அடக்கு முறையும், பிற கொடுமைகளும் உலகிடை நுழைந்து துன்புறுத்துகின்றன; உலகில் இன்ப நுகர்ச்சியும் இல்லா தொழிகிறது. இப்பொழுது உலகம் எந்நிலையிலிருக்கிறது? செயற்கை வெம்மையில் வீழ்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. இது நிற்க.

## வாழ்வு

உடலும் உயிரும் வெறும் இயற்கை வாழ்வு என்றால் ஒழுங்கு முறை இல்லாததா என்று சிலர் கடாவுவர். வாழ்வை அளித்த இயற்கை அன்னை, ஒழுங்கு முறைகளை வகுக்காதொழிவளோ? இயற்கையில் உலக நடை முறைக்கெனச் சில வாழ்வு முறைகள் கோலப்பட்டிருக்கின்றன. வாழ்வு என்பது இருதிறத்தது. ஒன்று உடல் வாழ்வு; மற்றொன்று உயிர் வாழ்வு. உடல் வாழ்வு உலகியலைப் பற்றி நிற்பது; உயிர் வாழ்வு கடவுளைப்பற்றி நிற்பது. இவ்விரண்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. உயிர் வாழ்வதற்கென்றே உடல் வாழ்வு ஏற்பட்டது. உடல் வாழ்வின்றி உயிர் வாழ்வு நலம் பெறல் அரிது. எனவே, கடவுள் நெறிக்கு உலகியல் இன்றியமையாதென்க.

## நான்கு துறைகள்

உலகியல் நடைமுறைக்கு நான்கு துறைகளும், கடவுள் நெறிக்கென வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்நான்கில் எல்லாத்

துறைகளும் அடங்கலால், பிறவற்றை விரித்துக் கூறவேண்டுவ தில்லை. உலகியல் செவ்வனே நடைபெறற் பொருட்டு மக்கள், தொழிலாளர் என்றும் வாணிபர் என்றும், அரசினர் என்றும், பார்ப்பனர் என்றும், பிரிந்து கடனாற்றி வரலானார்கள். இப்பிரிவு இயற்கையின் பாற்பட்டது. மக்கள் அனைவரும் ஒரே கடனாற்றப் புகுவரேல், உலகம் இயங்கி வருகிறது. எங்குத் தொழிலாளரில்லை? எங்கு வாணிபரில்லை? எங்கு அரசினரில்லை? எங்கு ஆசிரிய ரென்றும் பார்ப்பாரில்லை? அவ்வத் தொழிலாளர் யாண்டும் உளர். இஃது உலகியல் முறை.

உயிர் வாழ்விற்கும் நான்கு துறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவை: உலகு, உயிர், கடவுள் முதலியவற்றை அறிவுறுத்தும் கல்வி ஒன்று; கற்றதை நிகழ்ச்சியில் கூட்டவல்ல இல்வாழ்வு மற்றொன்று; அவ்வில் வாழ்வால் பெறும் அன்பால் மனைவியுடன் உயிர்களுக்குதவும் அறம் வளர்ப்பது இன்னொன்று; அதன் வழி அழுக்காறு, அவா, வெகுளி முதலிய மாசுகளி னின்றும் விடுதலையடைந்து, எவ்வுயிரிலும் சத்தெனும் செம் பொருள் பொலிவது கண்டு, உயிர்கட்குத் செந்தண்மை பூண்டொ ழுகும் முடிந்த நிலை எய்துவது வேறொன்று. இந்நான்கும் மக்கட்கு வேண்டற்பாலன. இவையும் உலகில் இயங்கி வருகின்றன. எந் நாட்டில் மாணாக்கரில்லை? எந்நாட்டில் இல்வாழ்வோரில்லை?. எந்நாட்டில் அறவோரில்லை? எந்நாட்டில் துறவோரில்லை?

இவ்விரு முறைகளின் வழி, வாழ்வு நடாத்துவது இயற்கை யோடியைந்த வாழ்வு நடாத்துவதாகும்; அதாவது சன்மார்க் கத்தில் நிற்பதாகும்.

## அமெரிக்கர் வாழ்க்கை

### (ஏ. கே. செட்டியார்)

உணவுச்சாலையில் சாப்பிடுவதைக் காட்டிலும் வீட்டில் சாப்பிடு வதுதான் உடம்புக்கு நல்லது. அமெரிக்க நாட்டில் சமையல் செய்வது மிகவும் சுலபமானது. சமைத்த அரிசிப் பொட்டலங்கள்

வாங்கலாம். வேண்டிய அளவு அந்த அரிசியையும் தண்ணீரையும் சேர்த்துக் கொதிக்கவைத்தால், மூன்று நிமிஷத்தில் சோறு தயாராகிவிடும். ரசம் முதலிய பல பதார்த்தங்களைத் தயாரித்து, சிறிய தகர டப்பிகளில் அடைத்திருப்பார்கள். அவற்றை வாங்கிக் கொதிக்க வைத்தால் போதும். ரொட்டிகளில் எத்தனை வகை! எத்தனைவிதமான சுவை! ரொட்டியைக் கைப்படாமல் இயந்திரத்தினுல் சிறு சிறு துண்டுகளாக (Slices) வெட்டி, மணமும் குணமும் கெடாத முறையில் நல்ல காகிதத்தில் கட்டிக் கொடுப்பார்கள். அமெரிக்கர் தினந்தோறும் இரண்டு முட்டையாவது சாப்பிடுவார்கள். கடையில் ஒரு முட்டை சுமார் ஆறணு. ஆனுல் உணவுச் சாலையில் ஒரு முட்டைக்கு முக்கால் ரூபாய் வரை கொடுக்கவேண்டும். அமெரிக்க நாட்டில், ஏழை பணக்காரர் என்ற வித்தியாச மில்லாமல், எல்லோருக்கும் தினந்தோறும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் இரண்டு. அவை சத்துள்ள பாலும் ஆரஞ்சுப் பழரசமும்.

சாமான்கள் வாங்குவதில் கஷ்டமே இல்லை. கடை மூடிவிடுவார்களே என்று யோசிக்க வேண்டாம். பெரிய நகரங்களில் உள்ள சில கடைகளில் இரவு பகல் எந்நேரத்திலும் சாமான்கள் வாங்கலாம். ஹாலிவுட்டிலுள்ள மூடாத கடையொன்றுக்கு ஒருநாள் இரவு இரண்டு மணிக்குச் சென்றேன். அந்நேரத்திலும் அக்கடையில் நூறு பேருக்கு மேல் சாமான் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இரவு நேரத்தில் வேலை பார்த்தபின் வீடு திரும்புகிறவர்கள் பலர், அக்கடைக்கு வந்து சாமான் வாங்குவதாக அறிந்தேன். பெரிய கடைகளிலே சாமான்கள் திருட்டுப் போகாமல் பாதுகாப்பதற்காக, சில துப்பறியும் வேலைக்காரர்களை அமர்த்தியிருந்தார்.

அமெரிக்காவில் பொது மக்கள் உபயோகத்துக்காகப் பல இடங்களில் டைப்ரேட்டர்கள் (Typewriter) வைத்திருந்தார்கள். அவற்றை உபயோகிக்கப் பத்துக் காசு—எட்டணு கொடுக்க வேண்டும். பணத்தை யாரிடமும் கொடுக்கவேண்டாம்

டைப்ரேட்டரிலேயே காசு போடுவதற்கு வசதி இருக்கும். பத்துக் காசு அதில் போட்டு விட்டால் முப்பது நிமிஷம் 'டைப்' (Type) அடிக்கலாம். முப்பது நிமிஷம் முடிந்ததும் டைப்ரேட்டர் ஓடாது. சில சமயங்களில் நாம் பாதி வார்த்தை டைப் அடித்த தோடு நின்று விடும். மறுபடியும் டைப்ரேட்டரை இயங்க வைக்க வேண்டுமானால் மீண்டும் பத்துக் காசு போடவேண்டும்.

நாம் எந்த விஷயத்தை டைப் அடிக்க விரும்புகிறோமோ, அதைப்பற்றி முன்கூட்டியே நன்கு சிந்தித்து முடிவு செய்து ஒரு காகிதத்தில் எழுதிவைத்துக் கொள்ளவேண்டும். இல்லையானால், டைப் அடிக்கும் போது, சிந்திக்கும் நேரத்திற்கும் வாசகத்தில் நேரும் பிழைகளை நீக்குவதில் ஏற்படும் தாமதத்துக்கும் சேர்த்துப் பணம் செலவாகும்.

துணிகளைச் சலவைக்குக் கொடுத்து வாங்குவது எந்த நாட்டிலுமே ஒரு பிரச்னை. சில நாடுகளில் செலவு மட்டும் அதிகமாகாது ; கவலையும் அதிகமாகும். சில சமயங்களில், குறித்த காலத்தில் துணிகள் கிடைத்துவிட்டால், நாம் அடையும் மகிழ்ச்சியே தனி.

அமெரிக்காவில் பெரும்பாலான குடும்பங்களில், துணி வெளுக்கும் இயந்திரங்களை வைத்திருந்தார்கள்.

குடும்பமில்லாமல் தனியாக வாழ்க்கை நடத்துகிறவர்கள் எத்தனையோ பேர். அவர்களுடைய சௌகரியத்தையும், பிரயாணிகளுடைய சௌகரியத்தையும் கருதி, பல இடங்களில் தானே இயங்கும் சலவைச்சாலை, (Laundromat) ஏற்படுத்தியிருந்தார்கள்.

அந்தச் சலவைச் சாலைகளில் துணி வெளுக்கும் இயந்திரங்கள் பத்து அல்லது பன்னிரண்டு வைத்திருப்பார்கள். துணிகளை மின்சாரத்தால் உலர்த்துவதற்கான வசதிகளும் உண்டு. ஒவ்வொரு இயந்திரத்திலும் ஒரே சமயத்தில் சுமார் முப்பது உருப்படிகளைச் சுத்தம் செய்யலாம். நல்ல கால்சட்டை, கோட்டு, 'டை'

என்னும் கழுத்துப்பட்டை முதலியவைகளை அவ் இயந்திரங்களில் போடக் கூடாது. அவைகளைச் சலவை செய்ய வேறு இடங்கள் உண்டு. வேலை பார்க்கும் போது அணிந்துகொள்ளும் காற்சட்டை, இரவில் தூங்கும் பொழுது உபயோகிக்கும் ஆடைகள், 'பனியன்' காலில் அணிந்துகொள்ளும் உறை, துண்டு, கைக் குட்டை போன்றவைகளைத் தான் இயந்திரத்தில் போட்டுச் சுத்தம் செய்யலாம். சலவைச் சாலைகளில் சாதாரணமாக ஒரு பெண் வேலை செய்வாள். நாம் அங்கே சென்றதும், காலியாக உள்ள இயந்திரத்தைத் திறப்பாள். நாம் எடுத்துச் செல்லும் துணிகளை நாமே அதில் போடவேண்டும். நமக்கு அவள் ஒரு ரசீது கொடுப்பாள். துணிகளைச் சுத்தம் செய்ய அரைமணி நேரம் செல்லும். அவைகளை உலர்த்துவதற்கு அரைமணி நேரமாகும். சுத்தம் செய்ய முப்பது காசு; உலர்த்த முப்பது காசு. ஒரு துணிக்குச் சராசரி இரண்டு காசுதான் ஆகும். துணிகளை நாம் எண்ணிப் போடுவதில்லை; அவர்களும் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆனால் போட்ட துணி குறையாது. நாம் காத்திருக்க விரும்பினால் ஒரு மணி நேரத்தில் நமது துணிகள் கிடைத்துவிடும். பொதுவாக யாரும் காத்திருப்பதில்லை. காலையில் வேலைக்குப் போகும் பொழுது துணிகளைப் போட்டுச் சென்றால், மாலையில் வீடு திரும்பும் பொழுது அவைகளை வாங்கி வரலாம்.

நகரத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் சலவைக் கடைகளைக் காணலாம். அவைகளில் பெரும்பாலனவை, பெரிய சலவைச் சாலைகளின் பிரதிநிதிகளே. நாம் ஒரு சட்டையைச் சலவைக்குக் கொடுத்தால், அவர்கள் அதனைப் பெரிய சலவைச் சாலைக்கு அனுப்பி, சலவை செய்து வாங்கித் தருவார்கள். ஒரு சட்டைக்குச் சலவைக் கூலி இருபது காசு—ஒரு ரூபாய் ஆகும்.

ஆனால், பெரிய சலவைச் சாலைகளின் கிளைகள் சில இருந்தன. அங்கே சென்று நமது சட்டையைக் கொடுத்தால் சலவைக் கூலி பதினாறு காசுதான். ஏனெனில் இடை மனிதர் இல்லையல்லவா?

கிறிஸ்துமஸ் வந்தது. கடைகளிலே எள் விழ இடமில்லை. அவ்வளவு கூட்டம். இரவில் வெகு நேரம் வரையிலும், விடுமுறை தினங்களிலும் கடைகளைத் திறந்து வைத்திருந்தார்கள். ஹாலிவுட் புல்வார்ட் என்ற அழகான வீதியையும், மற்றும் சில கடைத்தெருக்களையும், மரங்களாலும், வர்ணக் கொடிகளாலும், பிரகாசமான விளக்குகளாலும் அலங்கரித்திருந்த காட்சி அற்புதமாக இருந்தது.

கிறிஸ்துமஸ் விழாவில் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் பரிசு கொடுத்தாக வேண்டும். கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் பரிசளிக்க வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கும், (வயதான) பிள்ளைகள் பெற்றோர்களுக்கும் பரிசளிக்க வேண்டும். அதுமட்டுமல்ல; உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பரிசளிக்க வேண்டும். பரிசுச் சாமான்கள் வாங்குவதற்குக் கையில் பணமில்லாவிட்டால் கவலைப்படவேண்டாம். பெரிய வியாபார நிலையங்களில் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட தொகைக்குச் சாமான்களைக் கடனாகத் தருவார்கள். அதனைப் பத்துத் தவணைகளில் மாதந்தோறும் செலுத்தலாம். அதாவது அடுத்த கிறிஸ்துமஸ் வரை அவர், அந்தக் கடைக்காரருக்குக் கடனாளியாக இருப்பார்.

வெளியூர்களில் உள்ளவர்களுக்கு, பரிசுச் சாமான்களைத் தபாலில் அனுப்பவேண்டும். வெளியூர்களுக்கு அனுப்பினாலும், சரி, உள்ளூரிலேயே கொடுத்தாலும் சரி, பரிசுப் பொருள்களைக் கவர்ச்சியான முறையில் கட்டி அனுப்ப வேண்டும். ஒவ்வொரு சாமானுக்கும் தக்க அளவு கனத்த அட்டைப் பெட்டிகள் வாங்கி விலையுயர்ந்த வர்ணக் காகிதங்களாலும், பட்டு நாடாக்களாலும் அவைகளைக் கட்டி, சித்திர வேலைப்பாட்டுடன் அச்சிட்ட சிறு அட்டையில், பரிசு பெறுவோரின் பெயரைப் பிழையின்றி அழகாக எழுத வேண்டும். அமெரிக்காவில் பரிசுப் பொருள்களைக் கட்டி அனுப்புவது ஒரு தனிக் கலையாக வளர்ந்து விட்டது.

நாம் பரிசு கொடுக்கும் சாமான்களில், நாம் வாங்கிய கடையின் பெயரும், சாமானின் விலையும் அச்சிட்டு ஒட்டியிருக்கும். அதனைப் பெரும்பாலோர் நீக்கிவிடுவதில்லை. அமெரிக்காவில் ஒருவருக்கு நாம் கிறிஸ்மஸ் பரிசு கொடுக்கிறோம். அந்தப் பரிசுப்பொருள் அவருக்குப் பிடிக்கவில்லையானால், அவர் சாமான் விற்ற கடைக்குச் சென்று, தமது பரிசுப் பொருள் என்ன விலையோ அந்தத் தொகைக்குத் தாம் விரும்பும் சாமானை வாங்கிக்கொள்ளலாம். விருப்பமில்லையானால் பரிசுப் பொருளின் விலையையே ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளலாம். இது அமெரிக்க முறை.

எல்லாக் கடைகளிலும் அம்மாதிரி மாற்றவோ அல்லது பணத்தைத் திருப்பிப் பெறவோ இயலாது. பெரிய வியாபார நிலையங்களில் தான் அந்த வழக்கம். அதற்காகவே, கிறிஸ்து மஸ் தினத்துக்கு மறு நாளிலிருந்து மூன்று நாட்கள் வரை, பெரிய கடைக்காரர்கள் தங்கள் கடைகளைத் திறந்து வைப்பார்கள். அந்த மூன்று நாளைக்குள் தான் சாமான் மாற்றுதலோ அல்லது பணம் திருப்பிப் பெறுதலோ முடியும்.

பரிசு பெறுவோரில், சாமான்களை மாற்றுவோர் நூற்றுக்கு ஐம்பது பேர் இருக்கலாம். என்றாலும், மூன்று நாளைக்குள் மாற்ற வேண்டுமாதலால், அந்த நாட்களில் கடை திறப்பதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னிருந்தே நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையாகக் காத்திருந்தார்கள். சிலர் சாமான்களை மாற்று வதற்குப் பதிலாகப் பணத்தையே விரும்பினார்கள்.

கடைக்காரர் எல்லாச் சாமன்களையும் ரொக்கத்துக்கு விற்க வில்லை. தவணைகளில் செலுத்தும் வகையிலும் விற்றிருந்தார். கடனுக்கு விற்ற பரிசுப் பொருள்கள் திரும்பி வரும்பொழுதும், கடைக்காரர் அவைகளுக்கெல்லாம் தமது கையிலிருந்து ரொக்கமாகப் பணம் கொடுக்க வேண்டும்.

அமெரிக்க நண்பர் ஒருவரின் மகளுக்குத் திருமணம் நடை பெற்றது. ஏதேனும் சிறு பொருள் ஒன்றைப் பரிசாக அனுப்ப

விரும்பினேன். அதிகாலையில் ஸ்டுடியோவுக்குச் சென்று, மாலையில் நேரங்கழித்துத் திரும்பியதால், கடைக்குச் சென்று சாமான் வாங்க நேரமில்லை. எனது பிரச்னையை அண்ணியிடம் கூறினேன்.

"இதற்காகக் கவலைப்பட வேண்டாம். திருமணங்களுக்குப் பரிசுப் பொருள் அனுப்புவதற்காகவே ஒரு கடை இருக்கிறது. நீங்கள் யாருக்கு அனுப்புகிறீர்களோ அவர்கள் பெயரையும், உங்கள் பெயரையும் டெலிபோனில் சொன்னால் போதும். அழகான கார்டுகளில் அந்தப் பெயர்களை அச்சிட்டுக் கவர்ச்சியாகக் கட்டி அனுப்பி விடுவார்கள். பின்னர் பட்டியல் கிடைத்ததும் பணம் செலுத்தினால் போதும்" என்றார் அண்ணி.

"என்ன பொருள் பரிசு கொடுக்கலாம்?" என்றேன்.

"ஒரு கரண்டி பரிசு அனுப்பினால் போதும். அதன் விலை ஐந்து டாலர் இருக்கலாம்" என்றார் அண்ணி.

"அவ்வாறே செய்யுங்கள். தங்கள் பெயருக்கே பட்டியல் வரட்டும்" என்று சொல்லி மணப் பெண்ணின் பெயரையும் விலாசத்தையும் எழுதிக் கொடுத்தேன்.

ஒரு மாதம் சென்ற பின்னர், மணப் பெண்ணிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. பரிசுப் பொருளுக்கு நன்றி செலுத்தி அந்தக் கடிதத்தில் கரண்டி கிடைத்ததாக எழுதவில்லை; வேறு ஏதோ ஒரு சாமான் கிடைத்ததாக எழுதியிருந்தது.

அக்கடிதத்தை அண்ணியிடம் காட்டினேன். அதனைப் பார்த்ததும் "கடையில் கரண்டி கைவசமில்லை என்றும், வேறு ஒரு சாமான் அனுப்புவதாகவும் கூறினார்கள். அதற்கு சம்மதித்தேன் அதைத் தங்களிடம் கூற மறந்து விட்டதற்காக ஆனால் வருந்துகிறேன்" என்றார் அண்ணி.

நான் அனுப்பிய பரிசுப் பொருள் என்னவென்று எனக்கே தெரியாது! அப்படித்தான் பல பரிசுப் பொருள்கள் அனுப்பப் பெறுவதாக அறிந்தேன். அமெரிக்கரின் வாழ்க்கையில், பரி

களிப்பது என்பது பெருபாலும் உணர்ச்சியற்ற சடங்காக அமைந்துவிட்டது போலத் தோன்றியது. நானும் அதற்கு விலக்காகவில்லை.

---

## வள்ளல்-ஆய்-அண்டிரன்

### (சிவ குப்புசாமிப் பிள்ளை)

### இயல்–1, காட்சி–3.

இடம்:— பாடிநகர்.

காலம்:—மாலைப்போது.

உறுப்பினர்:—வேள் ஆய்-அண்டிரன், நற்குடிவேள், திருமேனி, இளந்திரையன்.

ஆய்வேள், தம்மீது படையெடுத்து வந்த கொங்கனின் சிறுமை நோக்கி இகழ்தலும் பின்பு தன் படைத்தலைவனுக்குப் பரிசு வழங்குதலும்.

**ஆய்வேள்:**—(போர்க்கோலம் புனைந்து தனியே நின்று) உலகம் மகிழ உயர்நலஞ் சுரக்கும் உண்மைப் பொருளே! பெருங் கருணைப் பெருமானே! என்னே இவ்வுலகத்தின் மாண்பு! நீர்க்குமிழியென்ன இளமையும், நெடுந்திரை போன்ற செல்வமும், நீரின் எழுத்தாகும் உடலும் என்றும் அழிவுறுதனவெண மயங்கலாகுமோ? 'நேற்று வாழ்ந்து மகிழ்ந்த ஒருவன் இன்று உயிரற்றுப் போனான்' என்ற பெருமையொன்றையே பேரணியாக இப்பூவுலகு பூண்டிருப்பதைத் தெளிவுறத் தெரிந்தும், ஒரு நாளும் அதை நோக்காது வாழ் நாட்கள் யாவும் வீணுட்களாகச் செலவிடுவது நன்றாகுமோ? நாக்குழற, கண் சுழல, காதடைக்க மேலுயிர்ப்பெழுந்து காலன் திசை நோக்கி வருந்து நாள் கூடுமுன் வீட்டுநெறி நாடி நல்வினையில் உள்ளத்தை ஊன்றுது, என்றும் அழிவுறும் இழி பொருள்

ளிலேயே கருத்தையூன்றி மானம், மறுமைப் பயன் இவற்றை எள்ளளவும் உள்ளத்திற் கொள்ளாது உண்டு, உடுத்து, உயிர்த்து உறங்கும் ஒருவன் உலகெலாங் கட்டி ஆளினும்—சீ ! அஃது ஒரு பேறுகுமா ? அறவினையால் பெற்ற ஒன்றினையே உளமுவப்பக் கொண்டு நல்வினை ஓம்பி, அல்வினை கடிந்து வறியாரைப் புரந்து வாழ்கின்றவனன்றோ எத்தகைய தாழ்ந்த மரபிற் பிறந்தவனுயினும், உயரிய தகுதியும் உலகு போற்றற் குரிய புகழும் படைத்த பெருமகனுவான் ? அவனுலன்றோ புயலும் பூமிசைப் பொழிகிறது ! மாநிலமும் தழைக்கிறது ! (அமைதியுடன் குனிந்து சற்று உலாவல்) அருட்குணக் குன்றே ! யான் எந்நாளும் அக்கொங்கனுக்கு ஒரு தீங்கும் கருதிய தில்லையே ! முன்பு ஒரு நாள், இந்நாட்டினின்று மணமிக்க சந்தணப் பேழைகளும் களிற்றுக் கொம்புகளும் பிறவும் அவன் விழைந்தவாறே போதும் போதுமென அவா அடங்கிப் புகலு மளவும் நான் கொடுத்தபோது, 'ஆய் நாட்டு மன்னன் என் தாய் நாட்டுத் தோழன்' என வாயார வாழ்த்திய அவ்வரச னுக்கு இப்போதுற்ற கேடுதான் என்னையோ ? உள்ளத்தில் கள்ளமும் உதட்டில் வெல்லமும் கொண்டுள்ள அவ்வஞ்சகனும் ஒரு நாட்டு மன்னனும் ! ஆம் ! ஆம் !! ஊழ்வினையை வெல்ல யாரால்தான் ஆகும் ! (உடைவாளை உருவிச் சினத்தால் பற்களைக் கடித்தல்) பேய் மகனே ! ஆய் நாட்டு அண்டிரன்து ஆண்மை மிக்க போர்த்திறனை நன்கு அறியாது இவண் போருக்கு எழுந்தனையா ? கூற்றுவனும் என் வலிமைக்கு ஆற்ருது தோற்றுக் காற்றெனப் பறப்பானெனில் மெல்லிய னுகிய நீ எற்கு எம்மாத்திரம் ? நன்று ! நன்று !! (அமைதி யுறல்) எனது படை இதுகாறும் பகைஞருடன் போரிற்கை கலந்திருக்கும் இன்னும் ஒரு நாழிகைக்குள் எனக்கு வெற்றிச் செய்தி கிட்டாதாயின், யானே அவண் சென்று எனது மாற்றலர் தம் உயிரைக் கூற்றெனக் குடிப்பேன். (புறத்தே நோக்கி) எங்கே எனது அமைச்சர் ? (அமர்தல்).

**நற்குடிவேள்:**—(வந்து ஆய் முன் வணங்கி) என் தலைவ! யான் இங்கேயே இருந்தேன். பொறுத்தருள்க! தங்கள் சீற்றம் தணிவதாக. பெரும! நம் படைகள், வீர முழக்கத் துடன் போர்க்களஞ் சென்றபோது, நமக்கு ஒன்றன் பின் ஒன் றாகத் தொடர்ந்து, நன்னிமித்தங்கள் பல தோன்றின. மேலும், என்றுமில்லாத ஒருவகை எனது உள்ளத்துள்ளே பொங்கிக் கரைபுரண்டெழுகின்றது. இக்குறிகளால் நாம் வெற்றி பெறு வோம் என்று தோற்றுகிறது.

**ஆய்வேள்:**—நன்று அமைச்ச! அவ்வாறே ஆருக. நீ, ஏதேனும் நம் மாற்றலரின் நிலையினை உணர்ந்தாயோ?

**நற்குடிவேள்:**—பெரும! ஒரு சிறிது அறிவேன். அருளுடன் செவி சாய்த்திடுக. 'கொங்கு மன்னன் ஆய்நாட்டைப் பற்ற ஆயத்தமாயுளன்' என்ற செய்தி நமக்குக் கிட்டியவுடன் நம் ஒற்றன் திருமேனியை மாற்றானது படைத்திறன் அறிந்து வருமாறு அனுப்பினேன். அவன் கொங்கு நாட்டிற் சென்று உளவறிந்து, அப்படைஞர் நம் எல்லையை அணுகுவதற்கு ஆறு நாட்களின் முன்னரே என்னிடமும் தானைத் தலைவர் இளந்திரைய னிடம் யாவும் விளங்கக் கூறினன். அஃதாவது, 'கொங்கர், நமது படையைவிடப் பதின் மடங்கு பெரிய படையைப் பெற் றிருப்பினும் அப்படைத் தலைவனையும், அணி முதல்வனையும் நம் தானைத் தலைவர்களுடன் ஒப்பிடின் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை உண்டு' என்றனன். மேலும், "கொங்கரது காலாட் படையை அணி வகுத்துள்ள முறை, நம் வீரர் அதற்குள் எளிதிற் புகுந்து சிதறடிக்கக் கூடியவாறுளது' என நம் படைத் தலைவரும் இன்று செய்தி அனுப்பியதோடு, 'தாங்கள் எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை; வெற்றி நமதே' என்ற உறுதிமொழி யும் விடுத்துள்ளார்.

**ஆய்வேள்:**—நன்று, அமைச்ச! நீ கூறியது எமக்கு அள விறந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. நம் படைஞர் மிக்க ஊக்கத் துடன் போர் முனையில் நின்று செருவாற்றும் திறம் பெற்றவர்

என்ற உறுதி எமக்கு இருப்பினும், நாம் நேரே அவர்களது திறனைக் காணுது இங்கிருக்க உளம் இசையவில்லை. புறப்படுவாய்! நாம் இருவரும் போர்க்களஞ் சென்று, நமது படைத் தலைவரும், அவரது துணைத் தலைவரும் வீரத்துடன் பகைஞரைத் தாக்கிப் போர் புரியுமாறு ஊக்குவிப்போம்.

**நற்குடிவேள்:**—பெரும! தாங்கள் கூறுவதும் நலனே. தங்கள் திருவுளப்படியே புறப்படுவோம்.

**ஆய்வள்ளல்:**—நற்குடி வள்ளால்! நாம் போர்க்களஞ் செல்லுமுன் நம் வெற்றிச் செல்வியாய வீரமாதேவியையும் நம் குலக் கடவுளாய முருகவேளையும் நமக்கு வெற்றியும் புகழும் அருளுமாறு வழிபட்டுப் பரவுவோம்.

**நற்குடிவேள்:**—அண்ணலே! அவ்வாறே தொழுவோம். (தொழுகின்றனர்)

ஆயும் அமைச்சனும் தலைவணங்கி நிமிர்தல்.

**நற்குடிவேள்:**—ஆ! பெரும! நம் ஒற்றன் திருமேனி, அதோ ஓடிவருகிறுன். அவனது வேகத்தை நோக்கின் வெற்றிக் குறி தோற்றுகிறது. (ஒற்றன் ஓடிவந்து இருவர் முன் வணங்க) வருக, திருமேனி! நமக்குக் 'கனி' தானே?

**திருமேனி:**—'கனி' தான், பெரும! (ஆயை நோக்கி) தங்கள் இணையடி என் முடிமேலாக்கி அருள்க. நாம் கனி கொள்வதன்றிக் காய் பெறுவதில்லையே. நமது படை வீரர்க்குக் 'காய்' என்னுஞ் சொல் 'செருக்களஞ் சென்று பகைஞர் கெடுமாறு சினத்தீயால் சுட்டெரி' என்ற பொருள் பயக்குமேயன்றி வேறென்றுண்டோ?

**ஆய் வள்ளல்:**—ஒற்ற! நன்று கூறினுய். நின் நற்செய்தி என்ன? போர் நிகழ்ச்சி எவ்வாறுளது?

**திருமேனி:**—எம் குலநலம் காக்குங் கொற்றவ! நம் படைகள் இன்று கொங்கரோடு கைகலந்த அளவில், ஊழிப்பெருநாள்

போல எங்கும் பேரொலியும், பெருமுழக்கமும் கேட்டவர் நெஞ்சம் திடுக்கிடுமாறு எழுந்தன. மேலும் நாற்றிசையிலும், 'பிடி, தொ ' என்பாரும், ' வெட்டு, குத்து ' என்பாரும், ' அடி, பிடி ' என்பாருமாகத் தோன்றினர். தரையில் எள் விழவும் இடமின்றிப் படைகள் ஒன்றொடொன்று கலந்து பிணைந்து போர் புரிந்தன. மலைகளும் மலைகளும் பொருதாற்போலத் தேர்ப்படைகள் மலைந்தன. முகிற்கூட்டங்கள் மின்னிப் பெருமுழக்கத்துடன் பொழிவது போன்று, யானைப் படைகள் தம் வெள்ளிய கொம்புகளால் பகைவர்களைக் குத்தி வீரமுழக்கஞ் செய்து மும்மதம் பெருக்கின. பெருங்கடலிற் புரண்டோடும் பேரலைகளையொப்ப நம் குதிரைகள் மாற்றலர் தம் படைக்குழுவில் தாவிப்பாய்ந்து சமர் முறுக்கின. கடல்மடை திறந்தாற்போல நம் வில்லேருழவர், சீற்றத்துடன் அம்புகளை வாரி இறைத்துப் பகைவரின் வலிமையை ஒடுக்கி அழித்தனர். பெரும! இவையாவும் ஒரு நொடிப்பொழுதில் நிகழ்ந்தன. ஒருமுறை கண்மூடித் திறப்பதற்குள் எத்தனை தலைகள் உருண்டன! அந்தோ! சொல்லொணுது ஆய் நாட்டாரின் வலிமையை இப்போது நன்குணர்ந்துள்ளார்கள் அக்கொங்கர்கள். அவர்கள் வலியிழந்து புறங்காட்டி ஓடிய ஓட்டம் மறக்கமுடியாத ஒரு காட்சி. இனிமேல் அவர் நம்மைத் தலையெடுத்து நோக்கார்; நாம் இருக்கும் திசை நோக்கித் தலைவைத்தும் சாயார், இத்துணைச் சிறுபொழுதில் அக் கொங்கு மன்னன் நம் படைக்கு ஆற்ருது தோற்று எஞ்சிய படையுடன் ஓடுவான் என்று நான் கனவிலும் க தவில்லை. தீவினையின் விளைவு! போர் என்ருல் பொரிகடலை எனக்கருதி வந்தான் போலும்!

**ஆய்வள்ளல்:**—போதும் நின் விளக்கம் தம் நிலையில் தாழ்பவர் இவ்வாறுதான் அழிவுற நேரும். நம்பால் நண்பனுக நடித்து, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த கொங்கன் நல்ல பரிசு பெற்ருன். விதியை மதியால் வெல்லலாகும் எனினும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுமாயின் அதனைத் தடுக்க எவரால் தான் ஆகும்? நன்று ஒற்ற! நம் படைத்தலைவர் இளந்திரையனை இவன் விரைவில் அழைத்து வருக.

**திருமேனி:**—பெரும ! அவ்வாறே கொணர்கின்றேன். (வணங்கிச் செல்லல், படைத்தலைவன் வருதல்).

**இளந்திரையன்:**—(வணக்கத்துடன்) ஆய்குடிப் பெருவள்ளளே ! வணக்கம். நம் பகைஞன் கொங்காள்வான், இனி நம் நாட்டின் பெயரைக்கேட்ட அளவிலேயே நடுநடுங்கி வெய்துயிர்த்து அஞ்சும் நிலையில், இன்று புறங்காட்டித் தோற்றோடினன். பெரும ! இவையாவும் நம்மிறைவன் திருவருளாலேயே நிகழ்ந்தன.

**ஆய்வள்ளல்:**—இளந்திரை ! நின் வீரச்செயல் எம்மைப் பெரிதும் களிக்கச் செய்கின்றது. நீயன்றோ இந்நாட்டினைப் புரக்கும் வீரன் ! நம் நாட்டின் பகைஞர் இனி ஆய்குடிப் படையெனில், தம் அடிவயிற்றில் பெரு நெருப்பையன்றோ கொள்வர்? 'இளந்திரை' என்றால் 'இடியொலி கேட்ட நாகம்' போன்றல்லவோ அஞ்சுவர் ? நமது பெருமை, தாய்நாட்டுப்பற்று, ஆய்குடிவேள் மரபின் உயர்வு இவற்றிற்காக நீ புரிந்த அரும்பெருந்தொண்டினைப் போற்றுகின்றோம். இன்று முதல் நினக்கு அரசஅவைக்கண் இருக்க ஓர் அரியணையும், வெளியே செல்லுங்கால் பொற்பல்லக்கு, ஈச்சோப்பி, நளிமுரசு, களிற்றுப்படை முதலிய விருதுகளும் தந்தனம். மேலும் இன்றுமுதல் நின் பெயர் 'கொங்குக் கூற்றன்—தமிழ்வேள் இளந்திரை' என அமைவதாக. நமது ஆய்குடித் தோன்றல்—வீரமாச் செல்வன்—கொங்குக் கூற்றன்—தமிழ்வேள் இளந்திரை, எமது கொற்றவையாகிய வீரமாதேவியின் அருளாலும், எங் குலக்கடவுள் குமரவேளின் கருணையாலும், நாளும் புகழ் பரப்பி நலம் படைத்து நீடு வாழ்க. (யாவரும்) வாழ்க ! வாழ்கவே !

ஆய்மன்னன் இளந்திரையனுக்கு முத்துமாலை சூட்டி, தனக்கு அருகே இட்ட அரியணை மீதேற்றல்.

**இளந்திரையன்:**—எனது ஆயும் ஐயனும் ஆசானும் அரசனும் ஆண்டவனுமாய அண்ணலே ! தங்கள் பூங்கழல் எந்நாளும் என் தலைக்கு அணியாகுக. தாங்கள் அடியேனுக்கு அருளிய

இத்தகைய பெரும்பேற்றைப் பெறுதற்கு உரிய பெற்றிவாய்ந்த பேரறிஞர்கள் பலர் இவண் இருக்கவும், என்பாலுற்ற பேரன்பினுல் என்னையும் ஒரு பொருளாக்கி ஏற்றமுந் தோற்றமுமளித்தீர்கள். இதற்கு யான் எழுமையும் நன்றியறிவுடையேனுவேன். (அவையோரை நோக்கி) பேரன்பர்களே! பெருங்குடி மக்களே! எளியன் இன்று நிகழ்ந்த போரில் பகைவரை வென்று ஆய்நாட்டு வீரக்கொடி உயர்த்திய செயல்—ஈண்டுள்ள வீரப் பெருமணிகளாகிய படையணித் தலைவர்களது துணைவலியின்றி யாகுமா? 'ஒருவர் உழைக்க மற்ருெருவர் திளைக்க' என்பது போல உங்கள் பெரு முயற்சியால் யான் பெருமை பெற்றேன். இப்பேறு அனைத்தும் எனது துணைவர்களாகிய படைத்தலைவர்கட்கே உரியதாகும். எவர் எவ்வாறு போர்புரியினும், நமது மன்னன் காட்சிக்கெளியனுய், கடுஞ் சொல்லறியானுய் நீதி நெறியுணர்ந்து, மக்கட்கு எவ்வகைத் துன்பமும் நேராது புரந்து, வேண்டுவார்க்கு வேண்டுவன முகமலர்ச்சியுடன் அளித்து, செங்கோல் செலுத்தி, தளர்ச்சியுற்ற குடிகளைத் தக்கவாறு பேணி, அற்ருர்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்தலால் வீரமாது வேறெவரையும் கருதாது, வேள்—ஆய் மன்னனையே என்றுந் தன் காதல் திருமகளுகக்கொண்டு இலங்குகின்ருள். இத்தகைய நல்வேந்தன் பன்னலமும் துய்த்துப் பல்லாண்டு வாழக் குறிஞ்சிக் கிழவனுய குமரனைப் பரவுவோமாக. (உயர்ந்த குரலில்) வாழ்க நம் மன்னர்! வாழ்க நம்நாடு!

(யாவரும்—வாழ்க, வாழ்கவே).

---

## இளைஞர்களுக்கு அறிவுரை

(நெ. து. சுந்தரவடிவேலு)

மாணவ மாணவிகளே!

உங்கள் பருவம் மீண்டும் கிடைக்காத பருவம்; பொன்போற் போற்றிப் பயன் படுத்தப்பட வேண்டிய பருவம். வாய்ப்போ கிடைத்தற் கரிய வாய்ப்பு. தொடக்கப் பள்ளிக்கூடங்களை

இல்லாத ஆயிரக்கணக்கான சிற்றூர்களும், படிக்க வாய்ப்பில்லாத பல இலட்சம் மக்களும் உள்ள இந் நாட்டில் உங்களுக்காவது ஏதோ படிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிற தென்றால், அதை எளிதானதாகவோ அலட்சியப் படுத்தக்கூடியதாகவோ கருதாதீர்கள்; இப்பருவத்தையும் வாய்ப்பையும் நன்றாக முழுதும் பயன் படுத்திக் கொள்ளுங்கள்; மாணவப் பருவத்தில் கற்கவேண்டுவன வெல்லாம் கற்றுக் கொள்ளுங்கள்; பெறவேண்டிய திறமைகளை யெல்லாம் பெற்றுக் கொள்ளுங்கள்; தேடிக் கொள்ளவேண்டுவன வெல்லாம் தேடிக் கொள்ளுங்கள்.

### கல்வி கரையற்றது

கற்க வேண்டுபவை உங்கள் பாட நூல்களோடு முடிந்து விட்டனவாக எண்ணுதீர்கள். கற்க வேண்டுபவைகளை அறிமுகப் படுத்துபவைகளே அவை. பாட நூல்களுக்கு அப்பால்—பரீட்சைகளுக்குத் தொடர்பில்லாதவை—பலவற்றை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்; படிப்பை முடித்தபின், அவைகளைக் கற்கலாம் என்று மட்டும் காலந்தாழ்த்தாதீர்கள்.

வெறும் ஏட்டுப் படிப்பு தகவல்களைத்தான் கொடுக்கும், அறிவொளியைத்தான் வீசும். அவற்றை வாழ்க்கையோடு இணைத்துப் பயன்பெறும் திறமையை நீங்கள் பெற முயல வேண்டும். வாழ்க்கைக்கு ஊக்கம், உறுதி, உழைப்பு, தன்னம்பிக்கை இன்றியமையாதவை. அவற்றை யெல்லாம் நீங்கள் இடைவிடாத பயிற்சியாற் பெறலாம்; அப்படிப் பெறத் தவறவேண்டா.

### பிஞ்சிற் பழுக்கவேண்டா

இளம் பருவத்தே உங்களை மயக்கக் கூடியவை பற்பல.

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு.''

என்ற அறிவுரையை மனதிற் கொண்டு கல்வியிலே உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள். கல்வியின் பகுதியாகத்தான் நீங்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றைப் படித்துச் சிந்தித்துத் தெளிவு பெற வேண்டும். மாணவர்களாக இருக்கும் போதே அரசியல் வாதிகளாகி விடவேண்டா என்று மட்டும் அறிவுறுத்த விரும்புகிறேன். எதற்கும் காலமுண்டு. காலம் வரும போது கருத்தோடு செயலாற்ற ஆயத்தம் செய்து கொள்ள வேண்டுவதே மாணவர் கடமை. மாணவர்களாக இருக்கையிலேயே அரசியல் வாதிகளாவது பிஞ்சிலே பழுப்பதாகும். அப்பழத்தின் சுவையும் பயனும் எப்படி இருக்கு மென்பது நீங்கள் அறியாததன்று.

## உடலோம்பல்

உடலோம்பலின் இன்றியமையாமையை நான் அதிகம் வற்புறுத்தத் தேவை இல்லை. அதன் தேவையையும் சிறப்பையும் உணர்ந்திருந்தாலும் வசதிக் குறைவும் வேறு பொழுது போக்குக் கவர்ச்சிகளும உடற்பயிற்சியை மறக்கச் செய்து வருகின்றன. இது பெருந் தீங்கு. "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்பது பொருள் நிறைந்த பொன்மொழி. உடல் வலிமை இல்லாதவன் எல்லா வசதிகளும் பெற்றிருந்தாலும், தனக்கும் பிறருக்கும் முழுப் பயன் அற்றவனாகத்தான் இருக்க நேரிடும். எனவே, எப்படியும் ஒழுங்காக உடல்பயிற்சி செய்ய வழி செய்து கொள்ளுங்கள்.

## ஒப்புரவு

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்,"

என்ற பொய்யா மொழியும் உங்களுக்கு நினைவூட்ட விரும்பு கிறேன். எட்டுப்படிப்பு அல்லது தொழிலறிவு ஆகியவற்றை ஊட்டு வதோடு கல்வி நிற்கக்கூடாது. அது நமக்குக் கட்டுப்பாட்டையும்,

ஒழுங்கையும் கற்பிக்கவேண்டும். ஒழுக்கம் என்னும்போது வழக்கமாகக் கூறும் ஐம்பெருங் குற்றங்களை நீக்குவதை மட்டும் நான் குறிக்கவில்லை; மக்களோடு மக்கள் எப்படிப் பழகுவது; எங்கெங்கு எப்படி நடப்பது, பொது இடங்களில் எப்படி நடப்பது என்பவைகளையும் சேர்த்துத்தான் குறிக்கிறேன். கட்டுப்பாடும், ஒழுங்கும் அற்ற அறிவாளி, கூடிய இடமெல்லாம் புரண்டோடிக் கண்டதையெல்லாம் பாழாக்கும் காட்டாறுபோன்று தீமை பயப்பவன் ஆவான். எனவே, கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் இளமையிலேயே கற்றுக்கொள்க.

### கற்றதனால் ஆய பயன்

நல்ல உறுதியான உடலும், கூரிய மதியும், கட்டுப்பாடும், ஒழுங்கும் எதற்குப் பயன்படவேண்டும்? யாருக்குப் பயன்படவேண்டும்? ஆக்கத்திற்கா? அழிவிற்கா? தனக்கா? பிறருக்கா?

அணுவைப் பிளந்து ஆற்றல் மிக்க சக்தியைக்கண்ட மனித சமுதாயம், அச்சக்தியால் உலகம் என்று அழிக்கப்படுமோ என அஞ்சி அஞ்சி அல்லலுறுகின்றதன்றோ? காரணம் என்ன? ஆக்க வேலைக்கு அவற்றைப் பயன்படுத்தத் தவறியதேயாகும். அறிவும் வலிவும் வளர்ந்த அளவுக்கு மக்களின் உள்ளம் வளர்ந்தபாடில்லை. ஆகவே, வலிமையெல்லாம்—அறிவெல்லாம்—இதுவரை "தான்" என்கிற சிறையிலிருந்து வெளிப்படவில்லை தன் பெண்டு, தன் பிள்ளை என்கிற தன்னலம் பொது நலத்திற்கு ஊறாக நிற்கிறது. "தான்" என்பதைக் குறைத்து "நாம்" என்பதைப் பெருக்கப் பெருக்கத்தான், நாம் மக்கள் நிலையை எய்துவோம். தனி உணர்ச்சி குறைந்து, சமூக உணர்ச்சி வளர வளரத்தான் நம் துன்பங்கள் தொலையும்.

### மக்கள் பண்பு

பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் உள்ள குறள்,

"அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்

மக்கட் பண் பில்லா தவர்,"

என்று இடித்துரைப்பதை மறந்து விடாதீர்கள். கல்வியின் நோக்கம் மக்கட் பண்பைப் பெறுவதே. எது மக்கட் பண்பு என்று சிறிது சிந்திப்போம். மக்கட் பண்பாவது, பிறிதினோய் தந்நோய் போல் நோக்குதலாகும். எனவே, மக்கள் துன்பத்தைத் தன் துன்பமாக எவன் கருதுகிறானோ, அவனே கல்விமான். மற்றவர்கள் எவ்வளவு அறிந்திருந்தாலும் எத்துணைப் பட்டங்கள் பெற்றிருந்தாலும், எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் மக்கள் நிலையை அடையவே நாம் எல்லோரும் விரும்புவோம் என்பது உறுதி. எனவே, நம்மைச் சூழ்ந்துள்ளோர் அடைகிற துன்பங்கள் எவை எவை, அவற்றை நீக்க வழிகள் எவை எவை என்று கவனிப்போம்.

### துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்

வறுமை, அதன் விளைவான பட்டினி; அறியாமை, அதன் விளைவான மூட நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள்; சாதி ஏற்றத்தாழ்வு, அதன் விளைவான சாதிச் சண்டை; சமயவெறி, அதன் விளைவான சமயப் போராட்டங்கள்; இவற்றின் கூட்டு விளைவான அமைதியின்மை—ஆகிய துன்பங்களை நாம் அனுபவித்து வருகிறோம். இத் துன்பங்களை நீக்க முடியுமா? இப்படியே விட்டு வைக்கலாமா? நீக்க முடியும், நீக்க வேண்டும் என்பதே என் முடிவு. பிற நாடுகள் செய்து காட்டிய முடிவுமாகும்.

### நல்குரவு

வறுமை ஒரு சமூகத் தொற்று நோய். அதைப் போக்குவது சமூகத்தின் முதற்கடமை. அதனை எவ்வழியிற் போக்குவது என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும். 'உழைப்பைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்கினால் எல்லோரும் வறுமையின்றி

வாழலாம் என்பது உண்மையா? பெற்ற பொருள்களை இப்போதுள்ள முறைக்கு மாறாக விநியோகிப்பது வாயிலாக வறுமையைப் போக்குவதா?' என்ற கேள்விகளுக்குப் பதில் என்னிடத்திலிருந்து எதிர்ப்பார்க்காதீர்கள். இரண்டில் எதைக் கொண்டாலும், இரண்டும் மறந்து விட்ட மற்றொன்றை நான் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். அது எது? செலவு முறை; நம் மக்களின் செலவு முறையைக் குறிப்பிடுகிறேன். மயக்கத்திற்கோ, வீண் பெருமைக்கோ ஆனவற்றிற்கு நாம் ஏராளமான செல்வத்தைப் பாழாக்குகிறோம். அவற்றைத் தடுத்து வாழ்க்கையை நிரந்தரமாக நல்வழிப் படுத்தும் துறைகளுக்கு மிகுதியாகச் செலவிடக் கற்றுக் கொள்ள வேண்டும். அளவறிந்து செலவிடத் தெரியாத மக்களை எம்முறையும் காப்பாற்றாது என்பதை மறவாதீர்கள்.

## அறியாமை

தற்குறித்தன்மை நமக்குள்ள அடுத்த துன்பம். மக்கட் பெருக்கத்திற்குப் பெயர் போனதைப் போன்றே தற்குறித் தன்மைக்கும் நம்நாடு உலகறிந்ததாய் இருக்கிறது. அறியாமையின் விளைவாய் நம்மிடையே உள்ள மூட நம்பிக்கைகளும் கண்மூடி வழக்கங்களும் எண்ணிறந்தன. நாம் மக்கள் தன்மையை முழுதும் அடைவதற்குக் குறுக்கே நிற்கும் இவற்றையெல்லாம் விரைவில் குழி தோண்டிப் புதைக்க வேண்டும். மன்னர்களாகி விட்டவர்களை மண்ணாங்கட்டி நிலையில் விட்டு வைப்பது இழிவு மட்டுமன்று, பெருந்தீங்குமாகும். எனவே, இத்தலை முறையின் முழுக் கவனமும் முயற்சியும்

"எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னரும் கலைஞானத்தால்,
பராக்கிரமத்தால், அன்பால்
உன்னத இமமலை போல்"

கீர்த்தி ஓங்குவதற்கான பணிகளில் திருப்பப்பட வேண்டும். இதற்கான பொறுப்பையும், உழைப்பையும் நாட்டு அரசிற்கு

மட்டுமே விட்டு விடாமல் பொது மக்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும்; விரைவில் பகிர்ந்து கொண்டு வேகமாகப் பணி புரிய வேண்டும். 'அப்படிப் பகிர்ந்து கொள்ள முடியுமா?' என்ற ஐயம் எழலாம். முடியுமென்பதில் எனக்கு ஐயமில்லை. இன்றும் நாட்டில் நடக்கும் 'தர்மங்களைப் பார்த்தவர்களுக்கு ஐயமிராது. நாட்டில் நடக்கும் அறங்களை யெல்லாம் கல்விக் கூடங்கள் மூலமாக நடக்கும்படி செய்வது நம்முடைய கடமை.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்"

என்ற காலத்திற்கேற்ற நல்லுரையை எடுத்துக் காட்டி, கல்விப் பணிக்கான எல்லா உதவிகளையும் செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

### சாதி வேற்றுமை

சாதி உயர்வு, தாழ்வு நம்மைப் பிடித்துள்ள மற்றொரு பெரு நோய்; தமிழர்கள் நல்ல நிலையில் இருந்த காலத்தே இல்லாத நோய்; இடையிலே பெற்ற நோய்; விரைவில் ஒழிக்கப்பட வேண்டிய நோய். 'உயர்வு, தாழ்வு எங்கு இல்லை? ஒவ்வோர் இடத்தில் ஒவ்வோர் உருவில் இருக்கிறது' என்கிற முடக்கு வாதம் நம்மை முன்னேற வொட்டாமல் தடுக்கும். அவ் வாதத்திற்குச் செவி கொடுத்தால் நீங்கள் மக்கள் தன்மையை எட்ட முடியாது.

"எல்லோரும் ஓர் குலம்.
எல்லோரும் ஓர் இனம்,"
"யாதும் ஊரே யாவரும் கேளிர்,"
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,"

என்ற நல்லுரைகளை நாம் பல்லாண்டுகளாகப் பலப்பல மேடைகளிலும் கேட்டுத்தான் வருகிறோம்; இவற்றைத்

தமிழனின் உயர்விற்கு எடுத்துக் காட்டாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆனால் நாம் உண்மையிலே சாதிகளை விட்டு மக்களாகும் வழியில் நடக்கிறோமா? தேர்தல்களில் ஆதரவு தேடும் முறையைக் கவனித்தாலே போதுமே, நம்மை விட்டுச் சாதிவெறி போகவில்லை என்பதற்குக் காரணம் என்ன? சாதிகளை வைத்துக் கொண்டே பேச்சளவில் சாதிப்பற்று வேண்டாமென்று கூறி, வெறும் பொழுது போக்காக வேலை செய்து கொண்டிருக்கிறோம். எனவே, இடமும் காலமும் கிடைத்த போது சாதிவெறி முழு ஆட்டம் ஆடுகிறது. மக்கட் பண்பை மறைக்கும் சாதிப்பற்று ஒழியவேண்டுமென்றால், சாதிகள் இல்லாத நிலை ஏற்பட வேண்டாவா ? அதற்கான வழியை இனித்தானா அறிந்து கொள்ளப் போகிறீர்கள்? அந்நிலை வெறும் விறுவிறுப்பான பேச்சால் மட்டும் கிட்டுமா? கூட்டத்திற் கூடி நின்று, கூடிப் பிதற்றி விட்டு நாட்டத்திற் கொள்ளாவிட்டால் ஏற்படுமா? நெஞ்சில் உரத்தோடு நேர்மைத் திறனோடு எல்லாச் செயல்களிலும் சாதியை நீக்கினால் அன்றோ முடியும்? அந்த நேர்மையும் உரமும் உங்களிடம் எதிர்பார்ப்பது அதிகமா?

### சமயவெறி

சமயப் பற்றும் சமய வெறியாக மாறி அடிக்கடி நம்மை அலைக்கழிக்கிறது. சமயம் மனிதனுடைய தனி விவகாரம். கூட்டு வெளிச்சத்திற்காக அதைப் பொது விவகாரமாக்கி, பகையை வளர்க்கும் வெறியாக மாற்றுவது நல்லதன்று. சமயம் மக்களை ஒழுங்கு படுத்திப் பண்படுத்தாமல் சண்டையை வளர்ப்பதா? சமயத்தின் மதிப்பு அதைப் பின்பற்றுபவர்களின் கோலத்தில் இல்லை; சீலத்தில் இருக்கிறது என்பதை நினைத்து, அதற்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்.

### முடிவுரை

உருவால் மக்களாய் பிறந்த நாம், நிலையால் மக்களாகாமல் இருப்பதற்கான காரணங்கள் சிலவற்றை உங்களிடம் காட்டினேன். அவற்றைச் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்பதில் எனக்கு

நம்பிக்கை உண்டு. அதன் விளைவாக உங்களுக்கு தெளிவு ஏற்படும் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. உங்கள் தெளிவில் பிறக்கும் நேரிய வழியில் நடக்க உரமும் உறுதியும் இருக்குமா என்பதைக் காலந்தான் காட்ட வேண்டும். அத்தகைய உரமும் உறுதியும் பெருக உங்களுக்குத் துணையாக நிற்கும்படி நாட்டின் நலத்தில் நாட்டமுடைய பெரியவர்களை வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறேன்.

" கற்க, கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக, "

என்ற வள்ளுவர் காட்டிய வழியை நினைவூட்டுவதோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

---

## பாரதப் பண்பாடு

(பேராசிரியர், சொல்லின் செல்வர் டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை.

பழம் பெருமை வாய்ந்தது பாரத நாடு. வடக்கே இமயமலை முதல் தெற்கே குமரிமுனை வரையுள்ள இப் பரந்த நாட்டிலே மொழிகள் பல உண்டு; மதங்கள் பல உண்டு; இன்னல்கள் பல உண்டு; ஆயினும் பாரதப் பண்பாடு ஒன்றே.

இத்தகைய பண்பாட்டின் ஒருமைப் பாட்டை உணர்த்துகின்றது தமிழிலக்கியம். பாரத நாட்டிலுள்ள வடமொழிக்கும் தென் மொழிக்கும் எந்நாளும் பிணக்கமில்லை. இரு மொழிகளும் இறைவன் அருளால் தோன்றின; ஆன்றோர் சேவையால் சிறந்தன; இம்மையின்பமும் மறுமையின்பமும் தருவன. ஆதலால் "இரு மொழியும் நிகர் என்னும் இதற்கு ஐயமுளதேயோ," என்று பட்டினர் வடநூற் கடலையும், தென்னூற் கடலையும் நிலைகண்டு உணர்ந்த சிவஞான முனிவர்.

வடநாட்டிலும் தென்னாட்டிலும் மதுரை (‌ெ பெயருடைய திருநகரம் உண்டு. வட மதுரையில் அவதரித்தார் கண்ணபிரான்; தென் மதுரையில் புகழ் பெற்றார் திருவள்ளுவர். கண்ணன் அருளிய கீதையும், வள்ளுவர் இயற்றிய குறளும், உலகம் போற்றும் உயரிய ஞான நூல்கள். இவ்விரண்டையும் அச்சாக உடையது பாரத ஞானரதம் என்னும் கருத்தை அமைத்துப் பாடினார் ஒரு பழங் கவிஞர்.

"உப்பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான்
உத்தர மாமதுரைக்(கு) அச்சென்ப—இப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற்(கு) அச்சு"

என்பது நல்கூர் வேள்வியார் பகர்ந்த நல்லுரை.

முன்னாளில் பாடலிபுத்திரம் என்னும் பெயருடைய இரு நகரங்கள் பாரத நாட்டில் சிறந்து விளங்கின: அவற்றுள் ஒன்று வடக்கே கங்கைக் கரையில் இருந்தது; மற்றொன்று தெற்கே கெடில நதிக் கரையில் இருந்தது. அசோக மன்னன் காலத்திலே சிறந்து விளங்கிற்று வடநாட்டுப் பாடலிபுத்திரம். பல்லவ மன்னர் காலத்தில் புகழ் பெற்றுத் திகழ்ந்தது தென்னாட்டுப் பாடலி புத்திரம். இப்பாடலி நகரங்கள் இரண்டும் கலைக் களஞ்சியங் களாகக் காட்சியளித்தன.

தமிழ்நாட்டுப் பாடலிபுத்திர நகரில் அமைந்த சமணக் கல்லூரியின் பெருமையைக் கேள்வியுற்றார் திருநாவுக்கரசர். கலைஞானக் கோயிலாய் விளங்கிய அக் கல்லூரியை நாடிற்று அவருள்ளம். அப்போது அவருக்குத் தந்தையுமில்லை, தாயு மில்லை. தமக்கையார் ஒருவரே இருந்தார். அவரிடம் விடைபெற்றுப் பாடலிக் கல்லூரியிற் சேர்ந்தார் திருநாவுக்கரசர். அவருடைய கலையார்வமும் மதி நுட்பமும் சமணப் பேராசிரியர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. கலை பயின்ற மாணவரின் இளமை யுள்ளம் சமண சமயத்தில் கவிந்தது. அது கண்டு மகிழ்ந்த சமண முனிவர்கள் அவரைச் சமண மதத்திலே சேர்த்தார்கள்; தருமசேனர் என்ற பெயரையும் சூட்டினார்கள்.

"அங்கவரும் அமணசமயத் தருங்கலை நூலானவெலாம்
பொங்கும்உணர் வுறப்பயின்றே அந்நெறியில் புலன்
சிறப்பத்
துங்கமறும் உடற் சமணர் சூழ்ந்து மகிழ்வார் அவருக்குத்
தங்களின்மே லாம்தரும சேனர் எனும் பெயர்
கொடுத்தார்"

என்று அவர் வரலாறு கூறுகின்றது. இவ்வாறு சமண சமயத்தில் சிறப்புற்றிருந்த அறிஞர் அவருடைய தமக்கையார் அருளால் மீண்டும் சிவநெறியை மேற்கொண்டு செந்தமிழ்ப் பாட்டிசைத்துச் செம்மையான தொண்டு புரிந்த செய்தியைத் திருத் தொண்டர் புராணத்திற் காணலாம்.

இத்தகைய சீர்மை வாய்ந்த பாடலி நகரங்கள் இக் காலத்தில் வேறு பெயர் பெற்றுள்ளன. வடநாட்டுப் பாடலி புத்திரம் பாட்னு (Patna) என்றும், தென்னுட்டுப் பாடலி புத்திரம் திருப்பாதிரிப்புலியூர் என்றும் இப்பொழுது வழங்கு கின்றன. பாடலி என்ற வடசொல்லுக்கும், பாதிரி என்ற தென் சொல்லுக்கும் பொருள் ஒன்றே. திருப்பாதிரிப்புலியூரில் கோயில் கொண்டுள்ள ஈசன் பாடலீசுரர் என்றே இன்றும் அழைக்கப் பெறுகின்றுர்.

பாரத நாட்டுப் புண்ணிய தலங்களும் காசி என்னும் வாரணுசியும், இராமேச்சுரமும் தலைசிறந்தன என்பது தக்கோர் கொள்கை. இந்திய நாட்டுத் தென் கோடியில் உள்ள இராமேச்சுரத்தை நாடிவருவர் வடநாட்டார். காசியிலுள்ள விசுவநாதரை வழிபடச் செல்வர் தென்னுட்டார். வடகாசியின் வாசியறிந்த தமிழ்மக்கள் தம் நாட்டிலும் ஒரு காசியை உண்டாக்கினர். தென்காசி என்பது அதன் பெயர். பராக்கிரம பாண்டியன் என்ற அரசன் "தென் காசி கண்ட பெருமாள்" என்று சாசனங்களிலே பேசப்படுதலால் அவனே தென் காசியை உருவாக்கி அங்கு விசுவநாதருக்கு ஒரு திருக்கோயிலும் கட்டினுன் என்று கொள்ளலாம்.

"ஓங்கு நிலைஒன்ப துற்றதிருக் கோபுரமும்
பாங்குபதி னொன்று பயிறுணும்—தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி உண்டோ தலத்து"

என்று பராக்கிரம பாண்டியன் செய்த திருப்பணியின் செம்மையைப் பாராட்டுகின்றது ஒரு சாசனப் பாட்டு.

நதிகள் ஒன்று கூடும் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் போற்றுதல் பாரத நாட்டுப் பண்பு. கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் கூடும் இடம் திரிவேணி சங்கமம் என்று வட நாட்டில் அழைக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் புண்ணிய நதிகள் கூடுமிடங்கள் பல உள்ளன. அத்தகைய இடங்களை முக்கூடல் என்று வழங்குவர் தமிழ் மக்கள். தென் பாண்டி நாட்டில் பொருநையாறும் சிற்றாறும் கயத்தாறும் ஒன்று சேர்கின்ற இடம் முக்கூடல் என்னும் பெயர் கொண்டு முற்காலத்தில் சிறந்திருந்தது. இந்நாளில் அந்த இடம் சீவலப்பேரி என்று வழங்குகின்றது. காஞ்சிமா நகரத்திற்கு அருகே பாலாறும், சேயாறும், கம்பையாறும் சேர்கின்ற இடம் திருமுக்கூடல் என்னும் பெயர் பெற்றுள்ளது. திரிவேணி சங்கமம் என்றாலும் முக்கூடல் என்றாலும்பொருள் ஒன்றே.

ஐந்து ஆறுகள்பாயும் வளநாட்டிற்குப் 'பஞ்சாப்' என்று பெயரிட்டனர் வட நாட்டார். தென்னாட்டில் அத்தகைய நாடு ஐயாறு என்றும் அழைக்கப் பெற்றது. திருவையாறு என்பது இப்போது ஓர் ஊரின் பெயராக அமைந்துள்ளது. பஞ்சநதம் என்பதும் அதுவே.

எல்லாம் வல்ல இறைவனை வைத்தியநாதன் என்னும் பெயரால் வழிபடும் வழக்கம் வட நாட்டிலும் உண்டு; தென் நாட்டிலும் உண்டு. சிதம்பரத்திற்கு அருகே வைத்தீஸ்வரன் கோயில் என்ற சிவஸ்தலம் இருக்கின்றது. அங்குள்ள ஈசன் "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்" என்று பாடினார் திருநாவுக்கரசர்.

வடநாட்டிலும் வைத்தியநாதன் கோயில் ஒன்று உண்டு. அதனை இந் நாளில் உலகறியச் செய்து விட்டனர் அங்குள்ள பண்டாக்கள். சில நாட்களுக்கு முன்பு தாழ்ந்த குல மக்கள் என்று கருதப்படும் அரிஜன அடியார்களோடு வைத்திய நாதனை (வைத்தியநாதன் என்பது வடநாட்டு வழக்கு) வழிபடச் சென்றார் விநோபா அடிகள். அடிகளையும் அடியாரையும் தடியால் அடித்துத் துன்புறுத்தினர் கோயிற் பண்டாக்கள். அவர்கள் செய்த சிறுமையால் இன்று வைத்திய நாதன் கோயிலை உலகம் அறிந்து கொண்டது.

இங்ஙனம் பல்லாற்றானும் ஒருமையுற்று விளங்கும் பாரதப் பண்பாட்டை ஒல்லும் வகையால் பேணி வளர்த்தல் நல்லறிஞர் கடனாகும்.

---

## விஞ்ஞானத்துக்கு விடுதலை

(ஜி. ஆர். தாமோதரன்)

"கி. பி. 1850 வரையிலும் மனிதன் தன் வாழ்வுக்காகச் செலவழித்த ஆற்றல் (சக்தி) எவ்வளவு இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த அளவு 9Q என்று குறிப்பிடு கின்றனர். 33,000 மில்லியன் டன் நிலக்கரியை எரித்தால் கிடைக்கக்கூடிய சக்தியை ஒரு Q என்பர். இப்படி 9Q சக்திதான் மனிதனால் 1850 வரை செலவழிக்கப்பட்டுள்ளது. 1850 முதல் 1950 வரை உள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில் செலவாகியுள்ள சக்தியோ 5Q! 18½ நூற்றாண்டுகளில் செலவழிந்ததில் பாதிக்கு மேல் ஒரு நூற்றாண்டில் செலவழிக்க மனிதன் கற்றுக்கொண்டு விட்டான்"— இப்படி 1956ஆம் ஆண்டின் பொங்கல் மலரிலே எழுதினேன்.

நிலவுலகத்து எரிபொருள்கள் வற்றாச்சுரங்கமல்ல என்று குறிப்பிடுவது அப்போதைய நோக்கம். சக்திக் களஞ்சியமாக மானிடனுக்கு இனி அணு ஆற்றலே பயன்படப்போகிறது

என்பதைச் சுட்டிக்காட்டி, அணு யுகத்தின் தோற்றத்தையும் சிறப்பையும் விளக்கினேன்.

இரண்டு ஆண்டுகளே ஆயின! ஆனால், அணுயுகம் என்பது பழங்கதையாகிவிட்டது இப்போது. இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அறிவியல் 'தலைதெறிக்க' ஓட்டமாக ஓடி அணு யுகத்தைக் கடந்துவிட்டது. இப்பொழுது ஸ்பூத்னிக் யுகம் பிறந்துவிட்டது!

இன்னும் எத்தனை நாளில் இதுவும் பழங்கதையாகுமோ! பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இத்துணை விரைவாக அறிவியல் முன்னேறுகிறது. இது பெரிதும் மகிழ்ச்சிக்கு உரிய செய்தி; பெருமிதத்துக்கும் உரிய சாதனை.

ஆனால், அறிவியல் உலகிலே மின்சாரம் கண்டபோது ஏற்பட்ட பெருமிதம் இந்த அணு யுகத்தாலோ, ஸ்பூத்னிக் வெற்றியாலோ உண்டாகியிருக்கின்றனவா ?

'அணு ஆற்றலின் பெருமையைக் கண்டறிந்தோம். காற்றை, கனலை, கனைகடலை, ககனத்தை வெற்றி கொண்டோம். திங்கள் மண்டலம் எங்கள் மண்டலம்; ஞாயிற்றினைச் சுற்றிப் பார்த்து அதன் தன்மை கண்டு வருவோம்'— என்றெல்லாம் பெருமையாகப் பேசிக்கொள்கிறோமா? அவலத்தின் கலப்பற்ற களிப்பும், பொறாமையின் நெடியற்ற பெருமிதமும் நம்மிடையே நிலவுகின்றன என்று சொல்லிக்கொள்ள முடியுமா? இல்லை, இல்லை

'நல்லறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்' என்று என்றோ படித்துள்ளேன். நல்லறிவின் பயன், நம் சொந்த அறிவின் விளைவாக இருக்க வேண்டும் என்று சான்றோர்கள் கூறமாட்டார்கள். 'அறிவியலுக்குச் சாதி, மொழி, இனம், நாடு, கண்டம் என்ற வேறுபாடுகள் இல்லை எனவே, அறிவியற் சாதனைகள் எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். ஆனால், நடைமுறையில் இது செயற்படுகிறது என்று சொல்லிக் கொள்ள முடியவில்லை.

ரஷ்யர்கள் செயற்கை கோளினை மிதக்க விடுவதில் முதலில் வெற்றி பெற்றுவிட்டார்கள். இந்தச் செய்தி அமெரிக்க அரசியல் அரங்கிலே வெறும் பரபரப்பை மட்டுமா ஊட்டிற்று? இல்லை; சீற்றமும் அங்கே ஊடாடிற்று. 'அவர்களால் முடிந்தது என்றால் நம்மாலும் முடியுமே! நம் நாட்டு விஞ்ஞானிகள் ஏன் தவறினார்கள்?' என்று அரசியலார் வாட்டமும் கொண்டனர். அமெரிக்கர்கள் முதலில் வான் வழியில் செயற்கைக் கோளை மிதக்க விட்டிருந்தால், ரஷ்ய அரசியல் அரங்கிலும் பரபரப்பும், வாட்டமும், சினமும் கட்டாயம் இடம் பெற்றிருக்கும்.

அறிவியலிலே பின்னேற்றம் ஏற்பட்டால், அரசியலார் வாடுவதேன்? ஆம், இந்த கேள்விக்குரிய விடையில்தான் விஞ்ஞானத்தின் இன்றைய நிலை தெளிவாக உள்ளது.

அறிவியல் என்பது விஞ்ஞான ஆராய்ச்சியாளரின் கையிலும் கருத்திலும் உள்ளது. உண்மைதான். ஆனால், அந்த விஞ்ஞானியோ அரசியல் சதுரங்களில் இப்படியும் அப்படியும் இழுத்து வைக்கப்படுகின்ற சூதாட்டக் காயாகச் சிக்கிக்கொண்டான். விஞ்ஞானி இன்றைய சமுதாயத்தில் அரசியலாரின் கைப்பாவையாகிவிட்டான். நம் சாதனைகளாகிய பெருங் கழனிக்கு வேர்ப் புழுவாக அமைந்துவிட்டது இந்த அவலமேயாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவது அன்று, இவ்வுலகத்து இயற்கை' என்று பாடினார் ஒரு புலவர். போர் செய்தல் வாயிலாக ஆதிக்கத்தை நிலைநாட்ட முயலும் அரசியலாகிய சூதாட்டம் மிகமிகப் பழமையானதுதான். இன்றும் அது தொடர்ந்து நடந்து வருகிறது.

ஆனால், முன்னைக் காலங்களைப்போல் இன்றைய மனிதனுக்குப் பயன்படுகின்றவை வெறும் கருவிகள் மட்டுமல்ல. ஒரு நாட்டின் ஆதிக்கம் கருவியாலோ, செல்வத்தாலோ நிலவும், நிலைக்கும் என்று நினைக்கும் காலம் மலையேறிவிட்டது. விஞ்ஞானத்தின் துணை ஒன்றுதான் இற்றைச் சமுதாயத்தில் ஆதிக்கத்தையும்

அதிகாரத்தையும் தரும் என்ற நிலைமை மாறிவிட்டது. எனவே சமுதாயத்தினை ஆளும் பொறுப்பினை மேற்கொண்டுள்ள அரசியல் வாதிகள் விஞ்ஞானிகளையே நாடுகின்றனர்; நாடுகின்றனர் என்று சொல்வது நாகரிகத்துக்காகத்தான். உண்மையை அப்படியே சொல்வதென்றால் விஞ்ஞானிகளைத் தங்கள் மனம் போன போக்குக்கு ஆட்டிவைக்கிறார்களென்றுதான் சொல்ல வேண்டும். விஞ்ஞான விளக்கத்தால்—அறிவியல் ஆராய்ச்சியால் மகிழ்ச்சி மட்டுமே ஏற்படவேண்டியது போய், ஒருவிதக் கலக்கமும் அச்சமும் தான் தெளிவுடையவர்கள் உள்ளத்தில் உண்டாகிறது.

இந்த ஏறுமாறான சூழ்நிலைக்கு அரசியல் ஆதிக்கவாதிகளே காரணம் ஆவார்கள். ஆனால், அரசியல் வாதிகளே பொறுப்பு என்று உணர்ந்துவிட்டால் போதுமா, மன அமைதி பிறந்து விடுமா?

ஏறுமாறான நிலை மாறவும், ஏற்றம் தரக்கூடிய நன்னிலை உருவாகவும் என்ன செய்ய வேண்டும்?— இந்த நினைப்பிலேயே சற்றேனும் இப்போது தோய்தல் நல்லது.

விஞ்ஞானம் என்பது என்ன? இப்படி ஒரு கேள்வி கேட்பதே பேதைமை என்று சொல்லத் தோன்றும். ஆனால், இந்த வினாவையே சற்று மாற்றிக் கேட்கலாம். விஞ்ஞானத்தில் எத்தனை பேருக்கு ஆர்வமும் அறிவும் உண்டு? விஞ்ஞானத்தின் புகலிடம் என்று சொல்லப்படுகின்ற மேலை நாடுகளில் கூட விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் மிகமிகச் சிலரிலும் சிலராகவே தாம் காணப்படுவார்கள். விஞ்ஞானத்தில் ஆர்வம் காட்டுவோர் அவர்களைவிடச் சற்றே பெருகியிருப்பர். ஆனால், சமுதாயத்தில் பெரும்பான்மையோருக்கு விஞ்ஞானத்தில் ஆர்வம் கிடையாது. அறிவும் கிடையாது. மேலை நாடுகளுக்கே இந்த நிலைமை என்றால், நம் நாட்டைப்பற்றிச் சொல்லவே வேண்டாம்!

பெரும்பான்மையோருக்கு விஞ்ஞான ஆர்வமோ அறிவோ கிடையாது என்று சொல்லும் பொழுது, ஒன்றை மனதில்

அமைத்துக்கொள்ள வேண்டும். மின்சாரம், வானொலி, தொலை பேசி முதலியவற்றைப் பயன்படுத்திப், பெனிசிலின் முதலான மருந்துகளை ஏற்று, விமானத்தில் பறப்பது விஞ்ஞான ஆர்வத்தையோ, அறிவையோ காட்டுவதில்லை. விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனை மனிதர்கள் பயன் படுத்திக்கொள்ளத் தயங்குவதில்லை என்பதையே இது காட்டும். இதைப் போலவே வேதனை தருகின்ற நச்சு வாயுக்குண்டு, கிருமிப் போர் முறை, அணுக் குண்டின் தீய விளைவுகள் ஆகியவற்றையும் மக்கள் 'ஏற்பார்கள்'. விஞ்ஞானத்தின் விளைவாகிய நல்ல கருவிகளும் தீய விளைவுகளும் மக்களிடையே தான் இன்பத்தையோ துன்பத்தையோ பரப்புகின்றன. ஆனால், மகிழ்ச்சியோடு வசதிகளில் திளைத்தும், வேறு வழி இல்லாமல் துன்பங்களில் துவண்டும் வாழ்கின்ற மக்களுக்கு—பெரும்பான்மையான சாதாரண மக்களின் கூட்டத்துக்கு—அறிவியல் பற்றிய அறிவும் இல்லை' ஆர்வமும் இல்லை.

அரசியலின் கைப்பாவையாகவும் போர்த் தேவதையின் ஆனைத் தீப் பசிக்கு இரையாகவும் விஞ்ஞானம் இருப்பது இன்றைய சமுதாயத்தின் முதல் அவலம்; அந்த அளவுக்கே பெரியதாகிய அவலம், விஞ்ஞான தெளிவு பெரும்பான்மை யோருக்கு இல்லாத குறை.

இந்த இரண்டாவது குறை நீங்கினால் முதற் குறையின் நெடி குறையும் என்பதில் ஐயமே இல்லை.

கல்விக்கூடங்களில் நாம் விஞ்ஞானம் பயில்கின்ற முறையிலே ஒரு மாற்றம் வேண்டும். விஞ்ஞானமே இன்றைய சமுதாய வாழ்க்கையின் அடிப்படையாகவும், பின்னணியாயும் உள்ளது. இந்த உண்மைத் தெளிவோடு விஞ்ஞானப் பயிற்சி தருதல் வேண்டும். இன்று—இந்த கணத்தில்—உலகின் ஏதோ ஒரு மூலையில் ஒரு விஞ்ஞானக் கூட்டத்தில் வெளியாகின்ற ஒரு புதிய ஆராய்ச்சி—அடுத்த கணத்திலேயே உலகக் கண்ணோட்டத்தோடு விசுவரூபம் எடுத்து விடுகின்றது. ரஷ்யர்கள் அனுப்பிய ராக்கெட்டு சந்திர மண்டலத்தைக் கடந்து கதிரவனைச் சுற்றத்

தொடங்கிவிட்டது என்றால், இங்கே பல தலைவர்களின் தலையே சுற்றுவது போல் இருக்கிறது! அமெரிக்கர்களுக்கு ரஷ்யர்களைப் பற்றிப் பயம்; ரஷ்யர்களுக்கு அமெரிக்கர்களைப் பற்றிப் பயம். இருவர் பயத்துக்கும் அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவுகள். வல்லரசுகளிடையே தலைமை தாங்குகின்ற நாடுகளாகிய அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றை மற்றது அச்சுறுத்திப் பார்ப்பதும், இரண்டு நாடுகளும் எவையேனும் சில மெலிந்த நாடுகளில் தங்கள் வலிமையைப் பரிசோதித்துக் கொள்வதும் இனி நெடுநாளைக்கு நடைபெற முடியாது. காரணம், பல நாடுகளும் அரசியல் விழிப்புப் பெற்றுவருவதே யாகும் அந்த அரசியல் விழிப்பையும் வல்லரசுகள் பயன் படுத்திக் கொள்ள முயலுவது உண்மையே. எனினும், அவர்களின் கைப்பாவையாக இருக்கிற விஞ்ஞானம் வியப்பான ஒரு பேராற்றல் உடையது. படைகளால் பேரரசுகள் அமைந்த துண்டு வரலாற்றிலே; சமயங்களின் பேரால் நாடுகள் இணைந்த துண்டு வரலாற்றிலே. இவையெல்லாவற்றையும் விட விஞ்ஞான ஆராய்ச்சி பற்றிய அச்சத்தால் (1)—ஆம் அச்சத்தால்—உலகம் இணைப்புற்று வருகிறது. விரைந்து வளரும் விஞ்ஞானம் உலகினை இணைத்தும் வருகின்றது. வல்லரசுகள் தங்கள் கையாளாக—அடியாளாகப்--பயன்படுத்த நினைத்த விஞ்ஞானம், பிறரை அச்சுறுத்தப் பயன் படுத்திய விஞ்ஞானம் இரு சாராரையுமே அச்சுறுத்துகின்ற அளவுக்கு விரைவாக வளர்ந்து வருகின்றது.

ஆயினும், ஆதிக்க ஆசை மட்டுமே மனிதனுக்கு இருப்பதாக நினைப்பது தவறாகக்கூடும். வேறு என்னென்ன எண்ணங்கள் மனித 'வெறியைத்' தூண்டிவிடுமோ, எவர் அறிவர்!

எனவே, இந்த நிலையில் விஞ்ஞானம் பற்றிய ஆர்வமும் அறிவும் எல்லா மக்களிடையிலும் மிக விரைந்து பரவியே யாகவேண்டும். விஞ்ஞான விளக்கம் எல்லா இடங்களிலும் —மக்கள் எல்லோரிடமும்—பரவிப் பல்கிவிடுமாயின், அரசியலி

லிருந்து விஞ்ஞானத்திற்கு விடுதலை கிடைக்கும்; உலக அரசு விரைவிலே அமையும். அறிவியலின் விளக்கம் அந்த நிலையிலேயே உண்மையான ஏற்றம்பெறும். அந்த நிலையிலே உலகின் ஒரு மூலையில் ஏற்படும் அறிவியல் ஆராய்ச்சி, இன்னொரு மூலையில் பொறாமையையும், சினத்தையும் உண்டாக்காது. அந்த நன்னிலையில் நல்லது தவிர வேறு எத்தகைய விளைவும் விஞ்ஞான ஆராய்ச்சியிலே விளையாது, விளைய முடியாது அந்த நன்னாளே மண்ணுலகம் பொன்னுலகமாகும் மாண்புடைய திருநாள்.

அத்திருநாளுக்குக் கொடியேற்று விழாவாக எங்கணும் அறிவியல் பரவுவதாக!

---

## குற்றாலக் காட்சி.

(வித்துவான் அ. மா. பரிமணம்.)

பனிமால் இமயப்பொருப்பு முதல் பைந்தமிழ்க் குமரி எல்லை வரை பரவியுள்ள இப்பரத கண்டத்தில், பார்க்கு மிடமெங்கும் எழில் மிகுந்த மலைகளும், அழகு ததும்பும் குன்றங்களும் நிறைந்துள்ளன. மந்தியும் அறியா மரம் பயில் கானங்களும், வெயில் நுழைபறியாக் குயில்பயில் சோலைகளும், வாவியும் குளமும் வற்று ஆறும் காட்சியளித்துக் காண்போரின் கண்ணை யும் கருத்தையும் ஒருங்கே கவரா நிற்கின்றன. இயற்கை அழகோடு, செயற்கை அழகும் பின்னிப் பிணைந்து விளங்கும் காட்சிகளும் ஆங்காங்கே காணப்படும். தென்னாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி இத்தகைய இயற்கைக் காட்சிகள் நிறைந்த தாய் இலங்குகின்றது. இத்தொடரின் ஒரு பகுதி பொதியமலை என்று வழங்கப்படும். 'பொதியில்' என்றும் இம்மலை பெயர் பெறும். தண்டமிழ் முனிவர் அகத்தியர் இதன்கண் வசித்து ஒண்டமிழ் வளர்த்துவந்தார் என்பதனால் இதற்கு அகத்தியமலை என்ற பெயரும் வழங்கா நிற்கும். ஓங்கியுயர்ந்த இம்மலை

முகடுகளை மேகங்கள் எப்பொழுதும் தழுவி நிற்கும். இதன் கண் அருவிபல மருவி ஓடும். இதன் சிறப்பை அறிந்த ஒரு புலவர்

"திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குமுகில் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே"

என்று பாடியுள்ளார். இம்மலையிலே தான் 'தண்ணான் பொருநை' எனவும் 'தண்பொருநை' எனவும் பெயர் பெறும் தாமிரவருணி நதி தோன்றி ஆற்றுப் பெருக்காலும், ஊற்றுப் பெருக்காலும் உலகூட்டி வருகின்றது. இங்குத்தான் அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி, இமிழ்திரை வேலி தமிழகத்திலும் பிறவிடத்திலும் மணம் வீசி நிற்கின்றது எனக் கருதுவாரும் உளர். இவற்றால் தமிழ்மொழியின்—தமிழ்க்கலையின்—தமிழ் நாகரிகத்தின்—தாயகம் என்று கருதத்தக்க இம்மலையைச் சார்ந்தே, இயற்கை எழிலும், செயற்கை நலமும் கொண்டு அழகு நிலையமாயும், உடல்நல நிலையமாயும் விளங்கும் குற்றாலமலையுமுள்ளது.

இக்குற்றாலமலையைத் தமிழகத்தில் விளங்கும் பல இயற்கைக் கோயில்களில் ஒன்றெனக் கூசாது கூறலாம். மாறா இளமையும் மணமும், அழகும் கொண்டது முருகு. அதனைப் பண்டைத் தமிழர் முருகன் எனப் போற்றி வருவாராயினர். அந்த மாறா இளமையும், மணத்தையும் அழகையும் கொண்டு, "கைப்புனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பாய்த்" திகழ்வதுதான் குற்றாலம். அங்கே இளமையைக் காண்கிறோம்; அழகைக் காண்கிறோம்; மணத்தை நுகர்கிறோம் அவற்றால் முருகை—முருகனைக் காண்கிறோம். அன்று தொட்டு இன்றுவரை குற்றாலத்தின் காட்சியிலே ஈடுபட்டுச் சொக்கிய மக்களும், புலவரும் பலராவர் சமயம் புரக்க வந்த சான்றோரும், காவியம் இயற்ற வந்த கவிஞரும், குற்றாலக் காட்சியில் ஈடுபட்டுத் திளைத்தனர். அவற்றைப் பண்ணார்ந்த

பாக்களில் தீட்டிப் பயில்வோர்க்கு அக்காட்சிகளைக் காட்டி, அவர்கள் உள்ளமும் கொள்ளைபோகும் வண்ணம் செய்து வைத்துள்ளார்கள்.

குற்றாலக் காட்சியைக் காட்டும் சொல்லோவியங்களெல்லாம் ஏதோ "கொடுக்கில்லாதானைப் பாரியே" என்றும், "மிடுக்கிலாதானை வீமனே" என்றும் கூறிப் பரிசில் பெறுவதற்குப் பாடப்பட்டன வல்ல. இலக்கணங்களையும், அகராதி நிகண்டுகளையும் வைத்துக் கொண்டு சொற்களைப் பின்னிய சொற்கோவையுமல்ல. அவை கார் கண்ட தோகை களிநடம் புரிவதுபோல இயற்கைக் காட்சியைக் கண்ட இதயத்தின் களிப்பிலே கனிந்த கவிதைகள்; அழகின் மயக்கிலே மலர்ந்த மலர்கள். எனவே இச் சொல்லோவியங்கள் காணுந்தோறும் கவினுறு காட்சி களாகவும், பயிலுந்தோறும் பைந்தமிழ்த் தேனாகவும் விளங்குகின்றன. இன்று நாம் குற்றாலத்திற்குச் சென்று பார்த்தாலும் இக் காட்சிகள் மாறா அழகுடன் மாண்புற்று விளங்குவதைக் காணலாம்.

இயற்கை நலங்கனிந்த குற்றாலக் காட்சியைச் சொல்லோவியங்களில் தீட்டிச் சென்ற புலவர் பலராவர். அவர்களுள் இற்றைக்கு இருநூறு ஆண்டுகட்கு முன்னர் நெல்லை மாவட்டத்து மேலகரம் என்ற சிற்றூரில் தோன்றிய திரிகூட ராசப்பக் கவிராயரும் ஒருவர். அவரியற்றிய குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலில் எழில் மிகுந்த காட்சிகள் பல திகழ்கின்றன. அவற்றுள் சிலவற்றை நாமும் கண்டு களிப்போம்.

கூடை இடையினும் மாத்திரைக்கோல் கையிலும் கொண்டு ஒருத்தி வருகிறாள். கூழை உண்ட வாயால் குறியைவிண்டு சொல்லும் மலைக் குறத்தி அவள். அவளுடைய நடையில்தான் என்ன மிடுக்கு! அழகாகப் பாடிக்கொண்டும் வருகின்றாள். அடிமையில்லாத இனிய வாழ்க்கை இத்தகைய பெருமிதத்தை அளிப்பதில் வியப்பொன்றும் இல்லை! தன்னுடைய மலைநாட்டின் மாண்பினை இன்னிசைக் கூட்டிப் பாடுகின்றாள். அப்பாட்டு,

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்
ககனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்
தேனருவி திரை எழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் தேர்க்காலும் பரிக்காலும் வழுக்கும்
கூனிளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்
குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே"

என்பதாகும். மரங்களெல்லாம் காய்த்துக் கனிந்து நிற்கின்றன. அக்கனிகளைப் பறித்துத் தம் மந்திக்குக் கொடுத்து மகிழ்கின்றன. கடுவன்கள், மந்திகள் அரைகுறையாக உண்டு எஞ்சிய கனி களுக்குக் கடுவன்கள் கெஞ்சி நிற்கின்றன. அவைகளுக்கு அதிலே ஒரு மகிழ்ச்சி. களிகொண்ட கானவர்கள் வானவர் களைக் கண்சிமிட்டி அழைக்கின்றார்கள்.

சித்தர்களெல்லாம் வந்து வந்து தங்கியிருக்கிறார்கள். தேனருவியின் அலைகளிலிருந்து எழும் திவலைகள் விண்ண கத்துச் சிதறித் தெளிக்கின்றன. இத்தகைய எழிலுடைய நாடு தன்னுடைய நாடு என்று பாடுகின்றாள் குறத்தி. அதனோடு நிறுத்திவிடவில்லை. மேலும் தன்னாட்டைப் பாடுகின்றாள். வீட்டு முற்றங்களிலெல்லாம் சிறுமியர்கள் சிறு வீடு கட்டுகிறார்கள். அதிலே முத்துக்களைக் கழங்காகக்கொண்டு விளையாடுகிறார்கள். அலையோசை செய்துவரும் அருவிகள் அவர்கள் கட்டிய சிற்றில் களைச் சிதைத்துச் செல்கின்றனவாம். கானவர்கள் கிழங்கு கல்லியும் தேனழித்தும் உணவுப்பொருள்களைத் திரட்டுகிறார்களாம். மலைமகளிர் யானைக் கோட்டுலக்கையால், தேனோடு பிசைந்துண் ணத் தினைமா விடிக்கிறார்களாம். பழுத்துக் குலுங்கும் பழங் களை உண்டு தெவிட்டிய குரங்குகள் பழங்களைப் பந்தடிக்கின்றன வாம். மலர்ந்து நிற்கும் சண்பகம் முதலான மரங்கள் மலையை முழுவதும் மணம்வீசி நிற்கின்றனவாம். இவைகளை,

" முழங்குதிரைப் புனலருவி கழங்கென முத்தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்கு கல்லித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
செம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும் "

எனக்கூறி அத்தகைய "வளம் பெருகுமலை யெங்கள் மலையே" என்று முடிக்கின்றாள்.

ஒரு நாட்டை வருணிக்குங்கால் அதன் சிறப்பை நேர்முகமாக மட்டும் கூறி நிறுத்துவதில் புலவர்கள் உள்ளம் அமைதியுறுவதில்லை. சில குறைகள் இருப்பதுபோலக் கட்டுரைச் சுவைபடக் கூறி அவற்றின் வாயிலாய் நாட்டின் நிலையை உணர்த்தினால்தான் அமைவுறும் போலும்! கோசல நாட்டின் நலனை உரைக்கப் போந்த கம்பர் பலவிதமாக அதன் பெருமையைக் கூறினார். அதனோடு அமைந்தாரில்லை. அந்நாட்டில் கொடை கொடுப்போர் யாரும் இல்லை என்ற குறையைக் கூறினார். அதற்குக் காரணமாக வாங்குவோர் ஒருவரும் இல்லை என்பதைக் கூறி வளமுரைத்து மகிழ்கின்றார். இதனை "வண்மையில்லையோர் வறுமையின்மையால்" என்ற அழகிய அடியால் அமைத்துக் காட்டுகின்றார். இம்முறையில் குற்றாலத்தின் எழிலை எடுத்தியம்பப் போந்த புலவர், குறை கூறுவதுபோல நிறைகள் சிலவற்றைக் குறத்தி வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

எழிலும், நலனும் இயற்கையாயமைந்து கிடக்கும் குற்றாலத்திலே ஓடியும் ஒடுங்கியும் வருந்தியும் புலம்பியும் சில காணப்படுகின்றவாம். ஓடி வருந்துவது ஆடி அசைந்து செல்லும் அருவி; ஒடுங்கி வருந்துவது யோகியர் தம் உள்ளம் என்று இவ்வாறான குறைபாடுகளாக நிறைபாடுகளைக் கூறுகின்றார்.

" ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம் " என்றும்

" போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணி கொத்து " என்றும்
கூறுகின்றார் இன்னும்,--

" நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலில் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பழந்தயிர் மத்து. "

என்றிவ்வாறாகக் குறை கூறுவதுபோல நாட்டின் நிறை வளத்தை நமக்கு விளக்கி மகிழ்கின்றார் புலவர். இவையெல்லாம் ' ஒழித்துக் காட்டணியின் ' பாற்படும்.

இன்னும் சற்று அப்பாற் செல்வோம். வேடர்கள் தினை விதைப்பதற்காகக் காடுகளை அழித்துத் தீயிடுகிறார்கள். மணமிக்க ஆரம், அகில், சந்தனம் முதலான மரங்களும் எரிகின்றன. அவற்றிலிருந்து கம்மென்று மணம் வீசுகிறது. இதனை

" வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந் தோறும
விந்தையகில் குங்குமமும் சந்தனமும் நாறும் "

எனக் குறிப்பிடுகின்றார். மேகங்கள் இருண்டு, கருத்து நெருங்குகின்றன. கடகடவென இடியோசை கேட்கின்றது. ஓகை நிறைந்த மயில்கள் தம் தோகை விரித்து ஆடுகின்றன. இக்காட்சி,

" செல்லினங்கள் முழவு கொட்ட மயிலினங்கள் ஆடும் "

என அழகாகக் கூறப்பட்டுள்ளது.

இனி, ஏழாம் நூற்றாண்டில் விளங்கிய நம் திருஞான சம்பந்தர் குற்றாலத்தில் கண்டு தீட்டிய காட்சிகளில் சிலவற்றைக் காண்போம். கரையிலுள்ள மரங்களில் மலர்ந்துதிர்ந்த மலர்களைத் தள்ளிக்கொண்டு அருவி பாய்கின்றது. மலர்களோடு பொன் துகளையும் அடித்துக்கொண்டு வருகிறது. வானோங்கிய உயரத்திலிருந்து நீர்வீழ்ச்சியாக வீழ்கின்றது அதிலிருந்து நீர்த்திவலைகள் பனிபோலப் பரவுகின்றன. நீலமேகங்கள் நீர்த்துளிகளையும் சிந்துகின்றன. இவையெல்லாம் மேலே பட்டு உடம்பொடு உள்ளத்தையும் குளிர்விக்கின்றன. இதனை,

" போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழக்
சூதல் மாரி வண்டுளி தூங்கும் குற்றாலம் "
எனச் சித்திரிக்கின்றார்.

மைதீட்டிய மலைமகளிர் தினைப்புனங் காக்கின்றனர். தினையை உண்ணக் கிளிக் கூட்டங்கள் பாய்ந்து வருகின்றன. அவற்றைப் பெண்கள் விரட்டுகிறார்கள். கல்வீசி அன்று; மலைச்சாரலில் கிடக்கும் மணிகளை வாரி எறிந்து விரட்டுகிறார்கள். இது,

" மைம்மா நீலக் கண்ணியர் சாரல் மணி வாரிக்
கொய்மா ஏனல் உண்கிளி யோப்பும் குற்றாலம் "
எனக் கூறப்பட்டுள்ளது.

வேங்கை மரங்களும், சண்பக மரங்களும் ஓங்கிச் செழித்து நிற்கின்றன. அவற்றினருகே அடர்ந்து வளர்ந்த முல்லைக் கொடிகள் மரங்களில் சுற்றிப்படர்ந்து அரும்புவிட்டு மலர்ந்து நிற்கின்றன. இக்காட்சியை,

" செல்வம் மல்கும் செண்பகம் வேங்கை சென்றேறி
கொல்லை முல்லை மெல்லரும் பீனும் குற்றாலம் "
என்றும் கூறுகின்றார்.

மலைச்சுனையில் நீர் தெளிந்து நிற்கின்றது. அதிலே குவளை மலர்கள் அப்பொழுதுதான் மலர்கின்றன. அருகிருக்கும் வண்டுகள், அதிலிருக்கும் தேனை உண்ண பண்ணிசைத்துக் கொண்டே சுற்றுகின்றன. கரையில் கோல மயில்கள் தம் பெடையோடு கூடி ஆடுகின்றன. இதை,

" கல்சூழ் வெற்பின் நீல மாக்குவளை கண்திறக்க வண்டறைற்றும் நெடுநீர்தண்சாரல்
கோல மடமஞ்ஞை பெடையோடு ஆட்டயரும் "
எனச் சித்திரிக்கின்றார்.

' வெற்பில், நீடுயர் வேய் குனியப் பாய் கடுவன்
கழைமேல் நிருத்தம் செய,
கூடிய வேடுவர்கள் கூவிளி "

என்பதைப் படிக்கும்போது உயர்ந்து நிற்கும் மூங்கில் மரமும் குரங்கு அதன்மேல் குதித்துக் குதித்து நடனமாடுவதும், மரக் கிளையும் குரங்கும் ஒருங்கே அசைவதும், வேடர்கள் சத்தமிட்டுக் கூவியழைப்பதும் ஆகிய காட்சிகள் திரைப்படம்போல் தோன்றி மனதில் பதியாமல் போகா.

இவ்வாறு இயற்கை அழகோடு மிளிரும் காட்சிகள் நேரில் காண்பவர்கள் உள்ளத்தைக் கொள்ளும். குற்றாலக் காட்சி, சோர்ந்த உள்ளத்திற்குச் சுனையாடல் போல இன்பமூட்டி அதனைக் குளிர்விக்கும். அருவியில் மோதித் தவழ்ந்து வரும் காற்று உணர்வைக் குளிர்விக்கும். அவை மக்களின் உடற்பிணியோடு உளப்பிணியையும் அகற்றும் தன்மை வாய்ந்தன. அங்கே நாம் இயற்கை அழகோடு இறை மணத்தையும், தமிழ் மணத்தையும் நுகர்கிறோம். இறைவன் திருவடி இயற்கை வடிவமாய் ஐம்புலனுக்கும் இன்பமளிக்கும் தண்ணளியுடையதாய் இருக்கும் தன்மையை,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே"

எனத் திருநாவுக்கரசர் தேவாரம் திறம்பட விளக்குகின்றது. இத்திருவாக்கின் உண்மையைக் குற்றாலக் காட்சி விளக்கி இறையொளி வீசி மிளிர்கிறது. இக்காட்சிகளைப் பாலையிலிருந்து நினைத்தாலும் அங்கு பாலை மாறி பனிமலர்ச் சோலை தோன்றும்; உள்ளம் உவப்பில்லா ஆனந்தத் தேனில் திளைத்து இன்புறும்.

---

## உயிரும் உடம்பும்

(டாக்டர் மு. வரதராசன்)

ஓவியம், பார்த்து இன்புற வேண்டிய கலை. பாட்டு என்பது பாடி இன்புறவேண்டிய கலை. ஓவியம், பாட்டு இரண்டும்

மனத்திற்கு இன்பம் அளிக்கின்றன. ஆனால், அவ்வாறு இன்பம் அளிப்பதற்கு வாயிலாக உள்ளவை வேறு வேறு புலன்கள். ஓவியத்திற்குக் கட்புலன் வேண்டும்; பாட்டுக்குச் செவிப் புலன் வேண்டும். ஆகையால், "ஒரு நூலின் ஒரு பாட்டைப் பார்த்து மகிழ்கிறேன்" என்று ஒருவன் சொன்னால், அது மற்றொருவன் "ஓவியத்தைக் கேட்டு மகிழ்கிறேன்" என்று கூறுவதைப் போன்றதுதான்.

நீரின் தண்மையும்
தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்;
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்புஒல் லாதே

என்ற ஒரு பாட்டைப் உரைநடைபோல் படிக்கலாம்; அல்லது, வாய்விட்டுப் படிக்காமலே, கதை படிப்பது போல் மனத்துற் குள்ளே படித்துக் கொள்ளலாம். அல்லது மெல்லப் பாடிப் பார்க்கலாம். மனத்திற்குள் படித்தறியும் போது கருத்து மட்டும் விளங்கியிருக்கும்; ஆனால் ஏதோ பெருங்குறை—சுவைமிக்க மாம்பழத்தை முகர்ந்து பார்த்து வைத்து விட்டது போன்ற குறை—உணரப்படும். வாய்விட்டுப் படித்திடும் போதும் ஒரு குறை உணரப்படும்; அந்தப் பழத்தை முகர்ந்து பார்த்தது மட்டும் அல்லாமல் மெல்ல அரிந்து அதன் கனிந்த நிறத்தையும் கண்டு, பிறகு வைத்து விட்டாற் போன்ற குறை உணரப்படும். பிறகு மெல்லப் பாடும்போதுதான், அந்தக் குறை தீர்வதையும் உணரலாம்.

ஒவ்வொரு கலைக்கும் ஒவ்வொரு வகையான நுகரும் திறன் வேண்டும். பாட்டைப் பாடி இன்புறும் திறன் ஒருவருக்கு உண்டா இல்லையா என்பதைத் தேர்ந்தறிய இது ஒரு நல்ல வழியாகும். மேலே கூறியவாறு மூவகையாக ஒரு பாட்டைக்

கற்க முயல வேண்டும். முன்னைய இருவகைகளில் குறை உணர்ந்து, மூன்றும் வகையில் குறை தீர்வதையும் உணர்ந்தால் போதும்; அவ்வாறு உணரப் பெற்றவர் பாட்டு என்னும் கலைக்கோயிலில் நுழைவதற்குத் தகுதி பெற்றவரே ஆவர் பாட்டுக்கலையின் நுகர்ச்சிக்குக் கட்புலன் போதாது, செவிப்புலனின் துணை வேண்டும் என்று உணர்வதே அந்தத் தகுதிக்கு உரிய சான்று ஆகும்.

எடுத்துக் காட்டாக உள்ள இந்தச் சிறு பாட்டு எளிய சொற்களால் ஆகியது; எல்லாரும் அறிந்த உண்மையை உணர்த்துவது; தெரிந்த கருத்தாக இருப்பினும், ஆழம் உடையது; அருமையும் உடையது. அவ்வாறு இருந்தும், அந்த கருத்து அமைந்துள்ள அமைப்பு, அந்த உணர்வுக்கு உருவம் தந்த கலை, மனத்தை எட்டி இன்பம் பயக்க வேண்டுமானால் செவிக்கு ஒருவகை நயத்தை முன்னே அளித்துச்செல்ல வேண்டியுள்ளது. அந்த நயத்தைப் பயப்பதற்காகவே சில ஒலிகள் திரும்பத் திரும்ப ஒலித்து வருமாறும் பல ஒலிகள் ஓர் அளவாக ஒத்து வருமாறும் அமைக்கப்பட்டுள்ளன. திரும்பத் திரும்ப ஒலிக்கும் சில ஒலிப் பகுதிகளையே எதுகை மோனை முதலிய பெயர்களால் வழங்குவர். ஒத்த அளவாக ஒலிக்கும் பல ஒலிப் பகுதிகளையே சீர் தளை முதலான பெயர் களால் வழங்குவர். இந்தச் சிறு பாட்டில், இருவகை ஒலி நயத்தையும் தெளிவாக உணரலாம்.

பாட்டின் உயர்ந்த கருத்து அமிழ்தம் போன்றது என்றால், ஒலிநயம் அமைந்த பாட்டு அந்த அமிழ்தத்தை இன்பமாகப் பருகுவதற்கு உதவும் அழகிய கிண்ணம் போன்றது. அது கண்ணாடிக் கிண்ணம் போல் எளிமையும் தூய்மையும் கூடிய அழகு உடையதாகவும் விளங்கலாம். மேலே காட்டிய பாட்டு அத்தகைய எளிய தூய ஒலி நயம் உடையதாகும். அல்லது, அருமையும் வேலைப்பாடும் மிகுந்த பொற்கிண்ணமாகவும் இருக்கலாம். எதுகை மோனைச் செறிவும், சீர் தளைச் சிறப்பும்

மிகுந்த கலிப்பா முதலானவை பொற்கிண்ணம் போன்றவை களாகும்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவை தாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே;
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவை தாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே;
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே.

(கலித்தொகை-9)

பெருங்கடுங்கோ என்பவர் பாடிய இந்த மூன்று தாழிசை களிலும் விளங்கும் ஒரு கருத்து அவ்வாறு சிறந்த வேலைப்பாடு அமைந்த பொலன்—கலத்தில்—பொன்கிண்ணத்தில்—உள்ள அமிழ்தம் போல் விளங்குகின்றது.

கிண்ணங்கள் சில பளபளப்பாகப் பகட்டான நிறங்களோடு காட்சி அளிக்கலாம்; ஆனால், அவற்றுள் இருப்பது உயர்ந்த அமிழ்தமாக இராமல், புளித்த காடியாக இருக்கலாம். அது போலவே, எதுகை மோனை முதலிய ஒலிச்சிறப்பு எல்லாம் மிக விளங்கும் பாட்டாக இருக்கலாம். ஆனால், பாட்டு என்று சொல்லத் தகாதவாறு அதனுள் அமைந்தது மிக இழிந்த அல்லது பயனற்ற கருத்தாக இருக்கலாம். கிண்ணத்தின் பகட்டையும் பளபளப்பையும் கண்டு, ஒன்றும் அறியாத குழந்தைகள் மயங்கலாம்; அறிவுடைய மக்கள், அந்தப் புளித்த காடியைக் கண்டதும் ஒதுங்குவர். இழிந்த பொருள் அமைந்த பாட்டு எவ்வளவு சிறந்த ஒலி நயம் உடையதாக இருப்பினும், இலக்கிய அறிவுடையவர் அதைப் பொருட்படுத் தாமல் புறக்கணிப்பர். ஆயினும் பாட்டின் அமைப்பு முறையை—சீர் தளை அடி முதலியவற்றை—புறக்கணிப்பதில்லை; வேறு

உயர்ந்த கருத்தை அமைத்துப் பாடுவதற்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். புளித்த காடியைக் கொட்டிவிட்டு, அந்தக் கிண்ணத்தை வேறு பொருளுக்குப் பயன்படுத்திக்கொள்வதில் தவறு என்ன? அம்மானை, ஊசல், சாழல் முதலிய பாட்டு வகைகள் மாணிக்கவாசகருக்கு முன் மக்களின் பொழுதுபோக்கான விளையாட்டுகளுக்கு உரியவைகளாக இருந்தன. ஆதலின் பயன் தரும் நற்கருத்துக்களை அவற்றில் அமைத்துப் பாடவில்லை. ஆயினும், அந்தப் பாட்டுகளின் அமைப்பு முறை கவர்ச்சியாக இருத்தலை உணர்ந்த மாணிக்கவாசகர், அவற்றில் உயர்ந்த கருத்துக்களை அமைத்துப் பாடினார். அவை இன்னும் வாழ்ந்து விளங்குகின்றன. கலிப்பா முதலிய பாட்டுக்களுக்கும் ஒரு காலத்தில் இவ்வாறு வேறு எந்தெந்தக் கருத்துக்களுக்கோ பயன்பட்டிருக்கும். பிறகு நுட்பமான அகப்பொருட் பாடல்களுக்கும் பிற நல்ல கருத்துக்களுக்கும் புலவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். அவ்வாறே இன்று மனம் போன போக்காகப் பாடப்படும் சில இழிந்த சினிமாப் பாட்டுக்கள் முதலியன வாழ்வு இழந்து போகும்; ஆயினும், அவற்றுள் ஒலி நயம் அமைந்த அமைப்பு முறை மட்டும் மறக்கப்படாமல், பிற்காலத்துச் சொல்லோவியக் கலைகளுக்கு வார்ப்படம் போல் பயன்படும்.

பாட்டுக்கலையில் உயர்ந்த கருத்துக்கள் அழியா வாழ்வு பெறுவது போலவே, சிறந்த வகையான ஒலி நயங்களும் வாழ்வு பெறுவது இந்தக் காரணத்தால் ஆகும். உயர்ந்த கருத்து நினைக்குந்தோறும் உள்ளத்தைக் குளிர்வித்து இன்பம் பயப்பதுபோல் உயர்ந்த ஒலியமைப்பும் கேட்குந்தோறும் செவிப்புலனுக்கு இன்பம் பயக்கிறது. உயர்ந்த கருத்தை உள்ளம் ஒன்றி நினைக்க வேண்டும்; ஆனால் சிறந்த ஒலியமைப்பு, தானாகவே செவிப்புலனைக் கவர்ந்துவிடும். நல்ல கருத்துக் கொண்ட காவடிச் சிந்தைப் பிறர் பாடும்போது உள்ளம் ஒன்றி உணர்ந்தால்தான் கருத்தின்பம் பெறமுடியும். ஆனால் முன்பு ஒரு முறை இரு முறை அந்தக் காவடிச் சிந்தின் ஒலி நயத்தை அனுபவித்திருந்தால் போதும். இப்போது எவ்வளவு பரபரப்

பாக வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும், அந்த ஒலி நயம் தானாகவே செவிப்புலனைக் கவர்ந்துவிடும். வேலைகளில் பரபரப் பாக இருக்கும் ஈடுபாட்டையும் குறைத்துவிடும். எதையோ எண்ணிப் பிடிவாதம் செய்து அழும் குழந்தை, தாயின் "ஆராரோ ஆரிவரோ" என்ற தாலாட்டைக் கேட்டுத் தூங்கி விடுகிறது. எங்கோ ஓடிக்கொண்டிருக்கும் பாம்பு இனிய இசையைக் கேட்டு வேகம் தணிந்து சுருண்டு அமைதி பெறு கின்றது. கன்றை நினைந்து ஓடும் பசுவும் ஆயின் குழலோ சையைக் கேட்டுச் சிறிது மெல்ல நடந்தவாறே செவி நிமிர்ந்து கேட்கிறது. விலங்குகளும், பறவைகளும், குழந்தைகளும் மட்டும் அல்லாமல், யோகியரும் இன்னிசையின் கவர்ச்சிக்கு ஆளாகித் தம் சிந்தையை இசையமைதியில் செலுத்தி அதன் வழியே ஒன்றுபடுகின்றனர். செவி மிக நுட்பமாக வளர்ந் தமைந்தது; நரம்புகளின் மென்மைக்கு ஓர் எல்லையாக அமைந்தது; உடம்பின் மற்ற நரம்புகளையும் அசைத்து ஆட்டி வைக்கும் ஆற்றலும் பெற்றது. தொலைவில் கேட்கும் பறை ஒலியைக் கேட்டுத் திண்ணையில் நிற்கும் சிறுவனின் கை கால்கள் தாமாகவே ஆடுகின்றன. எதையோ எழுதிக் கொண்டே இருக்கும் கணக்குப்பிள்ளை வானொலிப் பாட்டைக் கேட்டுக் கைத்தாளம் போடுகிறார். ஒலிநயம் இவ்வாறு செவிப் புலனைக் கவர்ந்து உடலையே ஆட்டிவைப்பது கண்கூடு. உடம் பில் இரத்த ஓட்டம், இதயத் துடிப்பு, நுரையீரல் இயக்கம் எல்லாம் ஒருவகை ஒழுங்கு முறைக்கு இயைந்து நடைபெறுகின் றன. செவி வாயிலாக ஒலி நயம் சென்றவுடன் உடலின் நரம் புகள் முழுவதும் அதன் வயமாகி இயங்கத் தொடங்குகின்றன. இந்த உண்மையை உணர்ந்தே அறுவடை முதலிய தொழில் செய்யும்போதும், படை புறப்பட்டுப் போருக்குச் செல்லும் போதும், போர் நிகழும் போதும், பறை முரசு முதலிய ஒலிக் கருவிகளை முன்னோர்கள் பயன்படுத்தினர்கள். இன்றும் இவ் வாறு ஒலிநயம் கொண்டு தூண்டித் தொழிற்படுத்தும் வழக் கம் இருந்து வருகிறது. ஆகவே மென்மையான நரம்புகளும்

ஓரளவு பயிற்சியும் உடையவர், ஒலி நயத்தின் கவர்ச்சிக்கு ஆளாகாமல் தப்ப முடியாது. ஒரு வகை ஒலியமைப்பைத் திரும்பத் திரும்பக் கேட்டு மகிழ்ந்து பயின்ற பிறகு, அதை மறப்பதோ வெறுப்பதோ முடியவே முடியாது. அதனால்தான் காவடிச் சிந்து முதலிய இசை வகைகளும், பலவகை விருத்தம் தாழிசை முதலிய நுண்ணிய ஒலியமைப்புகளும் அழியா வாழ்வு பெறுகின்றன.

திரும்பத் திரும்பக் கண்ட காட்சிகளையும் கண் மறந்துவிடும்; அழகாக இருப்பினும் பழைய காட்சிகளையே திரும்பக் காண்பதில் கண்ணுக்கு வெறுப்பும் உண்டு. ஆனால், திரும்பத் திரும்பக் கேட்ட இனிய ஒலியமைப்பைச் செவி மறத்தல் இல்லை. அவ்வாறு கேட்டு மகிழ்ந்த ஒலிகளைச் செவி மீண்டும் கேட்கச் சலிப்பதும் இல்லை. அதற்கு மாறாக கேட்டுப் பழகிய ஒலியமைப்பை மீண்டும் கேட்பதில்தான் செவிப்புலனுக்குச் சிறந்த இன்பம் உள்ளது. மார்கழி மாதத்தில் வைகறையில் தெருவழியே குதம்பைச் சித்தர் பாடலை ஒருவர் பாடிச் செல்லும் போது, அதன் பொருள் உணராதவர்களும் ஒருவகை இன்பம் உறுகின்றனர். "கருவினுரு வாகி வந்து வயதளவிலே வளர்ந்து கவலை பெரிதாகி நொந்து" என்ற திருப்புகழை யாரோ சிறிது தொலைவில் பாடக் கேட்பவர்களும் பொருள் விளங்காவிட்டாலும் இன்புற்றுக் கேட்கின்றனர். அவ்வாறே பாடாவிட்டாலும், வேறு சொற்களையும் வேறு கருத்துக்களையும் அதே ஒலிவகையில் (அதே மெட்டில்) பாடினாலும் அந்த ஒலியின்பத்தைப் பெறமுடிகின்றது. "கிளிக் கண்ணி" "நொண்டிச் சிந்து" என்றவுடன், பழகிய நண்பரின் குரல் கேட்பது போல், பழகிய ஒலியமைப்பு மெல்லச் செவியில் கேட்கிறது. சினிமாப் பாட்டுக்கள் பல பெருவாழ்வு பெறுவதற்கும் இந்த ஒலிக் கவர்ச்சியே காரணமாகும்.

பழகிய வீட்டை விட்டுச் செல்ல மனம் இருப்பதில்லை; பழகிய பேனா முதலிய பொருள்களைப் பிரிய மனம் இருப்பதில்லை.

பேயோடாகிலும் பழகியபின் பிரிதல் அரிது என்று கூறப்படு கின்றது. இவை எல்லாவற்றையும் விடச் செவிப்புலனிடம் பழகிய ஒலிநயங்களுக்கு உள்ள செல்வாக்கே பெரிது; மிகப் பெரிது. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததே பாட்டுக் கலை. குழலிசையிலும் குயிலிசையிலும் அருவியொலியிலும் பிறவற்றிலும் கேட்டுணர முடியாத மிக நுண்ணிய வேறுபாடுகளைப் பாட்டுக் கலையில் அமைத்துள்ளனர் முன்னோர். ஆசிரியப் பாவின் அகவல் ஓசையில் சில வகைகள்; வெண்பாவின் செப்பலோசையில் சில வகைகள்; இவற்றின் கலப்பான மருட்பாவில் சில வகை ஒலி நயம்; கலிப்பாவின் துள்ளலோசையில் சில பாகுபாடுகள்; வஞ்சிப் பாவின் தூங்கலோசையில் சில வேறுபாடுகள்; தாழிசை துறை என்னும் பாவினங்களில் சில வகை ஒலியமைப்புகள்; விருத்தம் என்னும் ஒண்பாவில் பற்பல வகைகள்; கிளிக்கண்ணி முதல் நொண்டிச் சிந்து வரையில் உள்ள இசைப் பாட்டுக்களில் பற்பல வகைகள்: இவ்வாறு ஒலிச் செல்வத்தைப் போற்றிப் போற்றிப் பாகுபடுத்தி இன்புற அமைத்துள்ளனர் முன்னோர்.

பலவாறு பாகுபாடு செய்து போற்றப்பட்டு வரும் ஒலி நயமே பாட்டுக் கலையின் உடல். கற்பனை உணர்வே உயிர். ஆதலின் பாட்டுக் கலையின் உயிர் வாழ்வு செவிப்புலனை ஒட்டியே அமைந்துள்ளது.

'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்' என்பது பாட்டுக் கலைக்கும் பொருத்தமான உண்மைதான்.

---